179458

# திருக்கோணாசலப் புராண வசனம்

Q23:38.2114
N18 TR
179458

383
V-IV
T.D.R.C. 48
R.R.No. 3834

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பார்க்கவகுலத்தாராகிய

நத்தமன்னர்,

மலையமன்னர், சுருதிமன்னர்களின்

பூர்வவரலாற்றை விளக்கும்

தெய்வீகராஜபுராணமென்னும்

# திருக்கோவலூர்ப் புராண வசனம்.

இது

வில்வராயநல்லூர்

மகா-ா-ா-ஸ்ரீ சாமிஉடையார் அவர்கள்

குமாரர்

முத்துக்குமர உடையாரவர்கள்

பொருளுதவியால்

கும்பகோணம் வாணுதுறை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

தி. வை. சதாசிவப்பண்டாரத்தார் அவர்களால்

எழுதப்பட்டு

கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல்

தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீ. பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்களால்

பார்வையிடப்பட்டு

கும்பகோணம் அலெக்ஸாண்ட்ரா பிரஸில்

அச்சிடப்பட்டது.

1918 [அணா 10

(Copy right registered.)

O23:38:2114TR
N18
179458

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பார்க்கவகுலத்தாராகிய

நத்தமன்னர்,

மலையமன்னர், சுருதிமன்னர்களின்

பூர்வசரித்திரத்தை விளக்கும்

தெய்வீகராஜபுராணமென்னும்

# திருக்கோவலூர்ப் புராண வசனம்.

இது

வில்வராயநல்லூர்

மகா-ா-ா-ஸ்ரீ சாமிஉடையார் அவர்கள்

குமாரர்

முத்துக்குமர உடையாரவர்கள்

பொருளுதவியால்

கும்பகோணம் வாணாதுறை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

தி! வை. சதாசிவப்பண்டாரத்தார் அவர்களால்

எழுதப்பட்டு

கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல்

தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

அ. பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்களால்

பார்வையிடப்பட்டு

கும்பகோணம் அலெக்ஸாண்ட்ரா பிரஸில்

அச்சிடப்பட்டது.

இதன் விலை] 1918 [அணா 10

(Copy right registered.)

Q23:37.214,1T2
N18

179458

482
294.535

முதல் மூன்றுபாரங்கள் அமிர்தவர்ஷனி பிரஸிலும், மற்றவை கும்பகோணம் அலெக்ஸாண்ட்ரா பிரஸிலும் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

# பொருளடக்கம்.


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை. | iv |
| 2. | அண்ணாமலைச்சதகம். | vi |
| 3. | பாயிரம். | x |
| 4. | அந்தகாசுரன் வதைச்சருக்கம். | 1 |
| 5. | திருமுருகச்சருக்கம். | 4 |
| 6. | கிருஷ்ணச்சருக்கம். | 5 |
| 7. | கபிலச்சருக்கம் | 6 |
| 8. | இராகவச்சருக்கம். | 8 |
| 9. | பரசுராமச்சருக்கம். | 8 |
| 10. | கண்ணுவச்சருக்கம். | 9 |
| 11. | தெய்வீகராஜன் உற்பவச்சருக்கம் | 9 |
| 12. | தெய்வீகராஜன் நாடுகொண்டசருக்கம் | 15 |
| 13. | தெய்வீகராஜன் மும்மணச்சருக்கம் | 17 |
| 14. | காரண்டவல்லூரர் வதைச்சருக்கம் | 19 |
| 15. | தெய்வீகராஜன் பிரமஹத்தி நீங்கியசருக்கம் | 22 |
| 16. | தெய்வீகராஜன் சத்தபுரிசென்றசருக்கம் | 24 |
| 17. | தெய்வீகராஜன் அங்கவை சங்கவை திருமணச்சருக்கம் | 26 |
| 18. | தெய்வீகராஜன் அரசாட்சிச்சருக்கம் | 34 |
| 19. | தெய்வீகராஜன் புத்திரப்பேற்றுச்சருக்கம் | 38 |
| 20. | குகமுனிவன் உபதேசச்சருக்கம் | 41 |
| 21. | பகவிச்சருக்கம் | 42 |
| 22. | மெய்ப்பொருள் நாயனார் சருக்கம் | 44 |
| 23. | நரசிங்கமுனையரையர் சருக்கம் | 46 |
| 24. | குலசேகரச்சருக்கம் | 50 |
| 25. | தானவிசேடச்சருக்கம் | 53 |
| 26. | தீர்த்தவிசேடச்சருக்கம் | 54 |

# முகவுரை.

தென்னிந்தியாவில் வாழுந் தமிழர் பலசாதியாராகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொரு சாதியாரும் பண்டைக்காலத்துக் கல்வி செல்வங்களால் சிறந்தவராகவும், மேன் மக்களாகவும் விளங்கிவந்திருக்கிறார்கள். இவ்வாறு தமிழராகிய பலசாதியாரும் விளக்கமுற்றிருந்ததைக் காட்டும் சான்றியமாக பலநூற்பிரமாணங்களும், பழக்க வழக்கங்களும், சாதியைக்குறிக்கும் அடையாளப் பெயர்களும், இப்பொழுதும் காணப்பட்டு வருகின்றன. இங்கு சிறந்தனவாகச் சொல்லப்பட்டு வரும் பல குலங்களிலே பார்க்கவ குலமென்பதும் ஒன்று. இக்குலத்தார் பிருகுமுனிவரை மூலபுருஷராகப் பெற்றவராதலால் பார்க்கவ குலத்தாரென்று சொல்லப்பட்டு வருகிறார்கள். இக்குலத்துள்ளே இக்குலத்தாருடைய புண்ணிய முதிர்ச்சியினால் தெய்வீகனென்னும் ஓர் அரசன் குகமுனிவருடைய யாகாக்கினியினின்றும் தோன்றி, சிவபெருமானது திருவருளால் உலகவின்பங்களை அனுபவித்து முத்திப் பேறடைந்த சரித்திரம் மிகப்பிரசித்தமானது. அவருக்கு மூன்று புத்திரர்கள் இருந்தார்கள். அம்மூவரும் முறையே *மெய்ப்பொருணயனார், நரசிங்கமுனையரையர், குலசேகரர் என்னும் பெயரினராக விளங்கியிருந்தனர். இவர்களுள் மெய்ப்பொருனார் நத்தமன்னராகவும், நரசிங்கமுனையரையர் மலையமன்னராகவும், இருந்து தத்தம் நாடுகளை அரசாண்டு வந்த காரணத்தால் அவர்களுடைய வழித்தோன்றல்கள் சிறப்பாக நத்தமன்உடையார், மலையமன்உடையார் என்று வழங்கப்பட்டும் பொதுவாக உடையார் என்று வழங்கப்பட்டும் வருகிறார்கள். சுருதி மன்னராகிய குலசேகரர் இம்மையின்பிலே வெறுப்புடையராய்த் தம் நாடு துறந்து, யாத்திரையாகச் சென்று காசியம்பதியிலே பலநாள் தங்கியிருந்து பின்னர்ச் சோணாட்டைச் சேர்ந்து சோழனுலை உபசரிக்கப் பெற்றிருக்குங் காலத்து, அங்கு, போறிவுடையவளாகவிருந்த காரணத்தினாலே மூப்பியென்னுஞ் சிறப்புப் பெயர் பெற்று வசித்துவந்த ராசகுமாரத்தியை முன்வினைப்பயனாலும், கடவுள் திருவருளாலும் மணம் புரிந்துகொண்டு வாழ்ந்து வந்தாராதலால் அவரது வழித்தோன்றல்கள் மூப்பனார் என்னும் சிறப்புப் பெயருடையவராக வழங்கப்பட்டு வருகிறார்கள். இம்மூவ

* திருமுறை கண்டவனும் சிறந்த சைவாபிமானியும் ஆகிய முதல் இராஜராஜசோழன், (985—1014) தான் எடுப்பித்த தஞ்சை ராஜராஜேச்சுரமாகிய தஞ்சாவூர்ப் பெரிய கோயிலிலும் பிறசிவாலயங்களிலும் மெய்ப்பொருள் நாயனாரின் அருமைத் திருத்தொண்டின் மாட்டுத் தனக்குள்ள பேரன்பின் அடையாளமாகத் 'தத்தாநமர்காண்' என்னும் அரியதொடர்மொழியை வெட்டுவித்தும் அந்நாயனாரது குருபூசைக்கு நிலங்கள் விட்டும் வழிபட்டுவந்திருக்கிறானென்று தெரிகிறது.



ருடைய பூர்வ வரலாறுகள் இவர்கள் இராஜ வம்சத்தார்களென்பதையும் சிவபெருமானது மெய்யன்பர்களை முன்னோர்களாகப் பெற்றவர்களென்பதையும், தெளிவாக விளக்குவனவாகவிருந்தும் காலவிசேடத்தால் நேர்ந்த பல மாறுபாடுகளால் இக்குலங்களைச் சேர்ந்தவர்கள், வேடர் கூட்டத்து வளர்ந்த ராஜகுமாரனைப்போல் தமது நிலைமையை உணராராய்ப் பெரும்பான்மையோர் கல்வியாலும், பொருளாலும் தாழ்ந்தவர்களாக இருந்துவருகிறார்கள். நூற்பிரமாணங்களாலும், பூர்வ வரலாறுகளாலும், அடையாள மொழிகளாலும், ஆராய்ந்து பார்ப்பின் இவர்கள் இராஜ வம்சத்தாராகக் கொள்ளப்பட வேண்டு மென்பது தெரியாமற்போகாது. தமது பூர்வவரலாறுகளை யுணர்ந்து ஒவ்வொருவருக்கும் தத்தம் குறைகளைப் போக்கிப் பழையபெருமையை அடைந்து அதன் வழியிலே நிற்றற்கு ஏதுவாகவிருக்குமாதலால் எல்லோருக்கும் பயன்படும் பொருட்டு * இச்சரித்திர நூல் வசனரூபமாக அச்சிடப்பட்டிருக்கிறது. ஆதலால் பார்க்கவ குலத்தவர்களாகிய உடையார்களும், மூப்பனார்களும் இந்நூலைத் தவறாது வாங்கிப் படித்துத் தமது ஜாதியின் பழைய பெருமைகளை ஞாபகப்படுத்திக்கொண்டு தாங்கள் வசிக்கும் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சங்கம் ஸ்தாபித்து அதன் வாயிலாகத் தற்காலம் தங்களைச் சார்ந்திருக்கிற குறைகளைப் போக்கித் தம்மையும் தம்மைச்சார்ந்தவர்களையும், கல்வியாலும் அறிவாலும், ஒழுக்கத்தாலும், செல்வத்தாலும் சிறந்தவராக்கிக் கொள்ளுமாறு சிவபெருமான் திருவருளைப்பிரார்த்திக்கின்றேன்.

எல்லா நன்மைக்கும் ஏதுவாக இருப்பது கல்வியே ஆதலால் நம்மவர் இருக்கும் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு ஆரம்பபாடசாலை ஏற்படுத்தி ஒவ்வொரு பிள்ளையும் ஆரம்பப் படிப்பைக் கட்டாயமாகப் படிக்கும்படி தூண்டவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வசனரூபமாக இந்நூலை வெளிப்படுத்த வேண்டுமென்று யான் நெடுநாளாகக் கொண்டிருந்த விருப்பை நிறைவேற்றி வைத்தவர்களாகிய எனது நண்பர் ஸ்ரீமான் அ. பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்களையும் தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் அவர்களையும் மறக்கற்பாலதோ.

இங்ஙனம்,

தங்கள் அன்புள்ள,

S. முத்துக்குமர உடையார்,

வில்வராயநல்லூர்,

கும்பகோணம்.

* இது, சண்பகக்கொல்லை ஸ்ரீமான் சவுந்தரராஜ உடையார் அவர்களால் செய்யுள் நூலாக அச்சிடப்பட்டிருக்கிறது.

# அண்ணமலைச் சதகம்.

## திருமுனைப்பாடி நாட்டுப் பிரமாணங்கூறியது.

மன்னியல் பசும்புரவி யேறியொரு கணமதில்
வலம்வரும் புவியை நீயே
மாமுடி கவித்தாள்க வென்றமூ வேந்தரும்
வாய்மலர்ந் தருளவாங்கே
மின்னுறு குணக்குக் கடற்கரை வரைக்குமிரு
மேவுமலர்ச் சோலை தெற்கு
விளங்குதிரு வாத்துறைவ திட்டகுடி வெள்ளாறு
மேற்றிசைக் கொல்லி மலையாந்
தென்னியல் வடக்குப் புனற்பெருங் கடியாறு
செப்புமிந் நான்கெல் லையுட்
டிருமுனைப் பாடிநா டதுசதுர் முடிபெற்ற
தெய்வீக மன்னனாண்ட
அந்நிலையில் சிங்கபுரி நன்னிலத் தாசுபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமு லைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

## தெய்வீக ராசன் மங்களங் கூறியது.

பணிவெள்ளி செம்பொனய ரஞ்சிமணி மரகதம்
பச்சைநிகழ் வைடூரியம்
பவளமா ணிக்ககோ மேதகங் கோமளம்
பனிமுத்து புஷ்பராகம்
மணியுந்து மாபரண மாலையும் பன்னிரு
வகைத்தெய்வ மலர்மாலையும்
மார்பத் தணிந்துமா முடிசூடி யிலகுபசு
வான்புரவி யூர்ந்து வேள்வி
கனியுள் ளொழுந்தவந் துயர்திரு முனைப்பாடி
நாடாந் திருக்கோவலூர்
நல்லசிங் காதனத் தெய்வீக ராசனு
நரசிங்க முனையர் வாழ்க
அணிவெள்ளி கோத்ரகுல தீபமென வந்ததிதி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமு லைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

## தெய்வீக ராசன் சதுர்முடி சிறப்புக் கூறியது.

பன்னிரண் டலர்மாலை புனைகின்ற திண்புய
பராக்ரமத் தெய்வீகனீ
படையெடுத் தமர்புரிய வேண்டா மெனச்சொலிப்
பாராளும் வேந்தர்காண
மன்னரோர் மூவரும் மல்லயுத் தம்மேற்று
மல்லாட லுக்கிளைத்து



மற்போர் புரிந்திடற் கிவனொருவ னரசிங்க
மாவீர னெனவியந்து
தென்னனுஞ் சேரனுஞ் சோழனுந் தந்தமுடி
செல்வமுடி யென்றுசூட்டத்
திருமுடி யுடன்மூன்று மொருமுடிச் சதுர்முடித்
தெய்வீக குலத்துதித்தி
அன்னமென மதிவளரு நிபுணசெழி பீரதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமு லைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

## தெய்வீகராசன் பன்னிரண்டு மாலைவகை கூறியது

கொம்பலர் பசும்பொனேர் கொன்றை புனைமாதுளை
கூவிளங் குமிழ்சண்பகங்
குலவுபரி மளவகுள மலர்துளவு கமலமலர்
கோங்குசெங் குவளைவாகை
தும்பையார் வேம்புபன் னிருமாலை கொண்டபுய
சுந்தரவிலாச மார்பன்
தூயசதுர் முடிமகுட சேகரன் மும்மன்னர்
சொந்தசம் பந்தமுடையோன்
கம்பமத முத்தலைக் காரண்ட னைச்சயங்
கண்டவேல் கொண்டதிறலோன்
காசினியை எழுநூறு வயதாண்ட தெய்வீகக்
காவலன் மகிமை கண்டாய்
அம்புய மலர்ந்தமுக கெம்பீர ராசபுக
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமு லைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

## மலையரையன் தெய்வீகனு யவதரித்தமை கூறியது

கரையில்புகழ் கைலையிற் சிவனுமையு மருவுமக்
காலைமலை யரையனோர்நாட்
கடவுளுக் கறிவியா தேபுகப் பரமனக்
காதன்மா துலனைநோக்கித்
தரையின்மா னிடனாச் சனிப்பையென் றுரைசெயத்
தாழ்ந்தவன் சேர்ந்துநிற்குந்
தருணத்தி லுமையெழுந் தென்மாம னார்பிறவி
சார்வனோ வென்றிறைஞ்சி
யுரைசெயச் சாபந் தவிர்க்கவேண் டுவதாலிவ்
வுலகத்தி லனைவயிற்றி
லுதியாமல் வேள்வியி லுதித்தவனி யாள்கவென்
றோதிடக் குகமுனிமகத்
தரையனென வந்ததெய் விககுலோத் துங்கதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமு லைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

## தெய்வீகராசன் மனைவிகள் பெயர் கூறியது.

சேரன் பயந்தபது மாவதி யெனும்பெயர்த்
தெரிவையும் பாண்டியன் மகட்
டூனமால் பெருந்தகாஞ் சனமாலை யென்னுமொரு
தேவியுஞ் சோழனீன்ற
பேரன்பு கொண்டசண் பகமாலை யென்கின்ற
பேதையு மணம்புரிந்த
பெண்ணையாற் றங்கரைக் கோவற்றெய் வீகனருள்
பெருமா னிலங்குநாவ
லூரன் றுதித்திருத் தொண்டத் தொகைக்குள்
ளுமாபதி யுருக்கலந்தே
யுற்றவறு பத்துமூ வரிலொருவ ராகின்ற
வோங்குநர சிங்கமுனையர்
ஆனவம் மிசகுலகு போணிகர் செல்வதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமு லைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

## சத்தபுரி ராசகுமாரிகளைத் தெய்வீகராசன் மணஞ்செய்தமை கூறியது.

காசிரா சன்மக ளனப்பிரபை தன்னையுங்
காஞ்சிபே ரிகதனீன்ற
கமலரா திப்பெ ணயோத்தியிற் சிகருமன்
கன்னியாங் கனகையினையும்
மாசறும வந்தியா புரிவிசா லக்கண்
மகிழ்ந்தருள் கலாவதியினை
மன்னுந் துவாரகைச் சந்த்ராவரு மன்றரு
மடந்தையுற் பலமாலையுந்
தேசுவட மதுரையம் போகவிசை யாவருவர்
செல்விகம லக்கண்ணியைச்
செல்வபுரி மாயைமா சேனன் பயந்தமதி
சேர்ந்தவுற்பல நயனியை
ஆசையொடு வேட்டதெய் விகுலோத் துங்கதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமு லைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

## அங்கவை சங்கவை கலியாணங் கூறியது.

சிங்கள மெனுந்தேய முழுதாளு மன்னன்
சிறந்தபேர் பாரிசாலன்
செய்தவப் பயனாற் பிறந்தநற் குணமான
சிறுமியங் கவைசங்கவை
மங்கையர்க ளிருவரை வளர்த்தெடுத் தௌவையார்
மாமுகக் கணபதி கையான்



மணவோலை யெழுதிமும் மன்னரைக் கோவலூர்
விரவழைத் தறுகிடற்குத்
தங்கிய பனந்துண்ட மாமாகி யேபழந்
தாநதிப் பெண்ணைநெய்பா
ரூன்வரப் பாடியப் பெண்களைத் தெய்விகத்
தலைவன் மணம்புரியவே
அங்குதவு மௌவைதொழு மைங்கரன் றந்தையே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமு லைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

## மெய்ப்பொருள்நாயனார் சரிதை கூறியது.

செப்பருந் தெய்வீக மன்னவன் றென்னவன்
செல்விகாஞ் சனமாலையைத்
திருமணஞ் செய்தவளை மருவிப் பயந்ததொரு
சிறுவர்மெய்ப் பொருணாயனார்க்
கொப்பறு பசும்புரவி யூர்ந்துமுன் வட்டமுந்
துற்றநடு நாடுதன்னி
லொத்தவிந் திரதிசையி னத்தங்க ளெல்லா
முவந்தரசு புரிகுவாயென்
றிப்பெருங் கோவலின் மணிமுடி தரித்திட
விருந்தமெய்ப் பொருணாயனார்
ஆன்றசந் ததியெலா நத்தமன் னவரென்
றிருந்திடுங் குடிகள் கண்டாய்
அப்பெரிய மெய்ப்பொருளி னற்குலம் விளங்கவைத்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமு லைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

## நரசிங்கமுனையர் சரிதை கூறியது.

வந்துலகில் புகழ்கொண்ட தெய்வீக மன்னனெழின்
மலையமான் றந்தபதுமா
வதிமா தினைப்புணர்ந் தரிதாய்ப் பயந்ததொரு
மைந்தர்நர சிங்கமுனையர்க்
கிந்தநடு நாடெனுந் திருமுனைப் பாடிநாட்
டெல்லைக்குண் மலைமன்னனா
யிருவென்று முடிசூட்டி வைத்தபடி யாலதற்
கேய்ந்தநர சிங்கமுனையர்
சந்ததியில் வந்தவர்கள் மலையமன் னென்றுபெயர்
சாற்றநெடு மேற்றிசையெலாந்
தங்கிய பெருங்குடிக ளாய்நிறைந் துழுதுபயிர்
தானிடுஞ் செல்வர் கண்டாய்
அந்தநர சிங்கமுனை யரைசர்பே ரன்புநெறி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமு லைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

## குலசேகரநாயனார் சரிதை கூறியது.

சோழன் பயந்தசண் பகமாலை வருமையிற்
றேய்ந்தெய் வீகனின்ற
தோன்றல்குல சேகரன் சுருதியை யுணர்ந்தண்ணல்
தாய்மூலைப் பாடிநாட்டில்
வாழுமூன் றினிலொன்று தன்பங்கி லாசித்து
வடநாடு போய்வந்துதன்
மனைவியை விடுத்தே குடந்தையின் குடபான்
மணிச்சோலை மாளிகைக்கண்டே
வழிநெறி யாற்றுதி மூப்பியைச் சேர்ந்தநி
துதித்தவர்கள் மூப்பனாரென்
றுலகெலாஞ் சொல்லவுஞ் சுருதிமன் னென்றுபெய
ருண்டாயிருப்பர் கண்டாய்
ஆழ்தரு பெருஞ்சுனைகள் சூழ்தருஞ் சிங்கபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணாமு லைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருக்கோவலூர்ப் புராணம்

## பாயிரம்

காப்பு.

### முத்தி விநாயகர்.

சத்தியருள் படையேந்து சண்முகனா ரருள்படைத்துத்
தயங்கு மேன்மைப்
பத்தியருள் பழுத்தமனக் குகமுனிவர் வழிவருநற்
பண்பின் மிக்கார்
சித்தியருள் சரிதமுரைத் திடவினிய சொற்பொருள்கள்
சிறப்ப நல்க
முத்தியருள் விநாயகனார் முழுமலர்த்தா ளிறைஞ்சிவினை
முழுதுந் தீர்ப்பாம்.

### வீரட்டேச்சுரர்.

வந்தகனா ரிருண்மாளப் பேரின்ப வொளிசிறப்ப
வயங்கு ஞாலத்
தந்தகனா ரிடர்தொலைத்துத் தெய்வீகன் வழிவந்த
வரசர் மூவர்
தந்தகனா கிகர்வாழ்வென் றுலகளிப்பத் தலையளிசெய்
தலைவ னாய
விந்தகனார் சடைக்கோவல் வீரட்டேச் சுரர்திருத்தா
ளிறைஞ்சி வாழ்வாம்.

### பெரியநாயகியம்மை.

மட்டாரு மலர்தூவி மலர்க்கொடியுஞ் சொற்கொடியும்
மகிழ்ந்து போற்றக்
கட்டாருங் கவின்சிறந்த காதன்மிகு தோழியாக்
கருணை செய்தாள்
நட்டாரு நள்ளாருந் தமைநயப்ப விருப்பர்மன
நடுவுண் மேவிப்
பெட்டாரும் வரமளிப்பாள் பெரியநாயகி மலர்த்தாள்
பேணி வாழ்வாம்.

### விநாயகர்.

இரும்புநேர் மனத்தவரு மிடர்தீர்ப்பத் தனைநினைப்பி
னிமைப்பின் யாவுங்
கரும்புநேர் தரச்செய்யுங் கைம்மாவின் றிருமுகத்துக்
கருணை வள்ளல்
சுரும்புநேர் நறைமலர்த்தாட் டுணையொளியை நினைந்தமனந்
துதைந்து வாழுந்
துரும்புநே ருலகவின்பப் பேராசைத் துணங்கறலைத்
தொலைத்து வாழ்வாம்.

### சுப்பிரமணியர்.

இச்சையுட னறிவுதொழி லெனுமும்மைச் சத்திகளை
 யியையுத் தன்பால்
கொச்சைமொழி வேடர்கொடி யானைமக ளயில்வேலாக்
 குலவக் கொண்டு
பிச்சைமயின் மீதடியர் பழங்கணற வந்தருளும்
 பரிவு சேர்ந்தான்
செச்சைநிறத் தாறிருதோ ளறுமுகவன் றிருவடியைச்
 சேர்ந்து வாழ்வாம்.

### குகமுனிவர்.

சீலமார்ந்த தீமையொழிந் துயிர்கலெலா மின்புறநத்
 தழைத்த வன்பால்
வலமார்ந்த தெய்வீகன் பசும்புரவி யுடன்றோன்றி
 வயங்கச் செய்து
தலமார்ந்த பார்க்கவர்தம் குலமுதல்வ னாகிகுகன்
 றன்பால் மேவி
நலமார்ந்த குகமுனிவ னறுமலர்த்தா ளிணையிறைஞ்சி
 நன்மை சேர்வாம்.

### மெய்ப்பொருள் நாயனர்.

கைப்பொருளொன் றேயுடையா ருடையார்க ளல்லரான்
 கருணை யன்பாம்
மெய்ப்பொருள்பெற் றுடையாரே யுடையாரென் றுலகறிய
 விளம்பு வார்போற்
பொய்ப்பொருளான் றனையுகம லொன்றறிந்த நத்தமன்னர்
 புகழார் தாதை
மெய்ப்பொருளார் திருவடிமா மலர்பழிச்சி யிருவினையை
 வெருட்டி வாழ்வாம்.

### நரசிங்க முனையரையர்.

பரசிங்க னுலகினுள்ளார்க் கானன்பின் பெருமைதனைப்
 பரிந்து காட்டிப்
புரசிங்க னிரைநாட் போந்தவொரு தூர்த்தனுறப்
 பொலன் மிக்கீந்த
வரசிங்கன் மலைமன்னர் வழிமுதல்வன் நம்பியையும்
 வளர்த்த தாதை
நரசிங்க முனையர்கழல் நனிமகிழ்ச்சி யுடனிறைஞ்சி
 நலிவு தீர்வாம்.

### குலசேகரர்.

தாரார்தெய் வீகனுக்கு வளவர்கொடி யிடைத்தோன்றித்
 தயங்கி ஞாலத்
தேரார்மெய்ஞ் ஞானமுடன் கலைஞான மொருங்குணர்ந்த
 வியல்பான் மூப்பிற்
பேரார்ந்த மானினிஸ்ய வேட்டகுல சேகரனும்
 பிறங்கு மேன்மைச்
சீரார்ந்த சுருதிமன்னர் திருக்குலத்து வழிமுதல்வன்
 திருத்தாள் போற்றி.

திருக்கோவலூர்ப் புராணப் பாயிரம்
முற்றும்.

28 OCT 1918
MADRAS.

சிவமயம்.

# திருக்கோவலூர்ப்புராணம்.

## அந்தகாசுரன் வதைச்சருக்கம்.

சிவகணங்களும் பலமுனிவர்களும் நிறைந்து விளங்குகின்ற திருக்கைலாயமலையிலே அடியார்கட்கெளியவராகிய சிவபெருமான் உமாதேவியாருடன் அந்தப்புரத்தில் ஒருநாள் வீற்றிருந்தருளினர். அச்சமயத்து உமாதேவியார் இறைவனைநோக்கி "எம்பெருமானே! உலகினைச் சூழ்ந்துள்ள இருளை எவை ஓட்டுகின்றன. அதனை அடியேற்கு அறிவித்தருளல்வேண்டும்" என்று கேட்டனர்; அதற்குச் சிவபிரான் அகமகிழ்ந்து "பெண்ணே! இவ்வுலகின் இருளையோட்டுவன சூரியன் சந்திரன் அக்கினியென்னும் முச்சுடர்களுமாகிய" எமதுமுக்கண்களாகும் என்று பதிலுரைத்தனர்.

இறைவன் திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்ட அம்மையார் மகிழ்வுற்று, அதனைப்பரீட்சித்தறிதல் வேண்டுமென்றெண்ணி, அப்பெருமான் திருமுகத்தில் விளங்கும் முக்கண்களையும் தமதுநீண்டகரங்களினாற்பொத்தினர்; உலகங்களை விளக்குவனவாகிய அம்முச்சுடர்களையும் அம்மையார் மூடியருளினமையால் உலகங்களெல்லாம் இருண்டன; உலகிலுள்ள உயிர்களெல்லாம் துன்புற்றன; தேவர்களெல்லோரும் யாது செய்வது என்றறியாமல் தியங்கினர். அம்மையார் இறைவன் திருக்கண்களைப் பொத்தியது சிறிது நேரமேயாயினும் அக்காலத்துள் ஆயிரம் தேவவருடங்கள் கடந்தனவாம். இவ்வண்ணம் பல்லுயிரும் துன்புறுதலையறிந்த எம்பெருமான் கருணைகூர்ந்து உமாதேவியாரை நோக்கி, 'நீ சிறிதுநேரம் விளையாட்டாகச்செய்த செய்கை உலகிலுள்ள எல்லாவுயிர்களும் பலவருடங்கள் துன்புறுதற் கேதுவாயிருத்தலை அறியாய்போலும்' என்றனர்; இறைவிபெரிதும் அஞ்சித் தமது நாயகனார் திருக்கண்களைப் பொத்திக்கொண்டிருந்த கரங்களை யெடுத்துவிட்டுப்பக்கத்தே நின்றனர். உடனே சூரியன் ஆகாயத்திற் பிரகாசித்தலையின் இவ்வுலகெலாஞ் சூழ்ந்து

மூடிக்கொண்டிருந்த இருளும் ஒன்றாய்த்திரண்டு ஒருபக்கத்தில் ஒதுங்கிநின்றது.

அதன் பின்னர் மஹாவிஷ்ணு, பிரமன், இந்திரன் முதலான தேவர்கள் மனக்கலக்கமுற்று, மூவுலகுங் கேடடைதலை முன்னரே காட்டும் தூமகேதுவைப்போல அவ்விருளினின்றும் சிவபெருமான் ஆணையால் ஓரசுரன் தோன்றினான். அவன் இருளினின்றும் உற்பவித்தமையின் அந்தகனென்னும் பெயர்ப்பெற்றனன்; அவ்வசுரன் பரமேச்சுரனைக்குறித்து, தேவர்களும் செய்தற்கரிய கொடியதவத்தினை அக்கினியின் நடுவில் நின்று பன்னாள் செய்து வந்தனன்; நினைப்பவர்மனமே கோயிலாக்கொண்ட நின்மலனார் அவ்வசுரனுக்கு வரமருளும் வண்ணம் அவன் தவஞ்செய்யுமிடத்திற்கு எழுந்தருளி 'உனக்குயாதுவேண்டும்? இவ்வரியதவம் புரிதற்குக் காரணம் யாது?' என்று கேட்டனர். அவ்வசுரன் இறைவனைப் பன்முறை வணங்கி, 'அடியேன் தவத்திற்கிரங்கி, இவண் எழுந்தருளிய கருணையங்கடலே, எக்காலத்தும், எவர்களாலும் யான் அழியாதிருக்குமாறு ஓரரியவரம் ஈந்தருளுக. யான் வேண்டுவது அதுவே' என்று கூறினன். சிவபெருமான் அவன் வேண்டியவாறேவரமருளி மறைந்தனர். பின்னர் பிரமன் இந்திரன் முதலானோர் திறைகொணரவும் தேவர்களெல்லோரும் நடுங்கி வருந்தவும் அவர்கள் நகரங்களைக் கொள்ளையிட்டு மிகுந்த செல்வத்துடன் அசுரரெல்லோரும் தன்னைச்சூழ்ந்து போற்ற, அவர்கட்கு அரசனாக விளங்கினான்.

இவ்வண்ணம், எவ்வுலகத்தினரும் நடுங்குமாறு அவ்வசுரன் அரசுபுரிந்துவரும் நாளிலே இயமன் இந்திரன் முதலானோர் தங்கள் நகரங்களை இழந்து, பிரமதேவரிடம் சரணடைந்து நடந்தவற்றை விபரமாகக் கூறினர்; அவர்கள் கூறியவற்றைக்கேட்ட பிரமதேவர் 'அவ்வந்தகனையழித்தல் எம்மால்இயலாததொன்றும் ஆதலால், நாம் எல்லோருஞ்சேர்ந்து, இவ்வுலகெலாம் தமது திருவயிற்றிற்கொண்டு விளங்குகின்றவரும் காத்தற்றொழிலுடையவரும் எமது பிதாவுமாகிய விஷ்ணுவிடம் சரணடைவோம், வாருங்கள்!' என்றழைத்துக்கொண்டுபோய், அப்பரந்தாமன் திருவடியையடைந்து, பன்முறை வணங்கிப் பலவாறு தோத்திரித்து நின்றனர். பிரமதேவர் இந்திரன் முதலானோரையழைத்து வந்ததின் காரணத்தை நன்குணர்ந்த விஷ்ணுமூர்த்தி அவர்களை நோக்கி, 'அவ்வந்தகனை வதைத்தற்குயாம் வலிமையுடைய மல்



லம்; அவனையழிக்கும் ஆற்றல் வாய்ந்தவர் திருக்கோவலூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானேயாவர்; ஆதலால், நாம் அப்பெருமானிடம் சரண்புகுதலே முறையாம்' என்று கூறி அவர்களைத் தம்முடன் அழைத்துக்கொண்டு நடுநாட்டிலுள்ள திருக்கோவலூரையடைந்து, ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் அத்தலத்தின்கண் திருக்கோயில் கொண்டருளிய சிவபெருமானை ஆகமங்களில் விதித்துள்ளபடி அருச்சனைபுரிந்து பன்முறை வணங்கி நடந்தவற்றைக்கூறி, அக்கொடிய அசுரனைவதைத்துத் தங்கள் துன்பத்தை ஒழித்திருளும்படி வேண்டினர்; அதனைக்கேட்டருளிய சிவபெருமான் கருணைகூர்ந்து 'உங்கள் துன்பத்தை விரைவில் ஒழிப்போம்; சிறிதும் அஞ்சவேண்டாம். இனி நீங்கள் உங்களுடைய உலகங்களுக்குப்போகலாம்' என்று திருவாய் மலர்ந்தருளினர்.

தம்மிடம் வந்து குறையிரந்த விஷ்ணுமுதலானோர் தத்தம் உலகங்கட்குச் சென்றபின்னர், சிவபெருமான் சிவகணத்தலைவர்களையழைத்து, அவர்கள் கணங்களுடன் அந்தகாசுரனோடு போர்செய்தற்குப் புறப்படுமாறு உத்தரவருளினர். அவ்வண்ணமே நந்திகேச்சுரர், மாகாளர், விநாயகர், சாத்தனார், வைரவர், வீரபத்திரர் முதலான கணத்தலைவர்கள் தத்தம் சேனைகளுடன் போர்க்கெழுந்தனர்; எங்கும் போர்ப்பறைகள் முழங்கின; பலவகைவாத்தியங்கள் ஒலித்தன; அவ்வொலியைக்கேட்ட அசுரர்கள் தத்தம் படைக்கலங்களோடு தம்அரசன் ஆணையின்படி சிவகணத்தோடு போர்புரிதற்குப் புறப்பட்டனர். பின்னர் இருதிறத்தார்க்கும் கடும்போர் நடந்தது; அப்போரில் அசுரர்கள் புறங்காட்டி யோடத்தலைப்பட்டனர். அச்சமயத்தில் சிவபெருமான் தமக்கு முன்னின்று போர்புரியும் ஆற்றல் சிறிதுமில்லாத அவ்வந்தகாசுரனைத் தமது திரிசூலப்படையின் நுனியிற்கோத்துக் கையிற்பிடித்துக்கொண்டு பெருமகிழ்ச்சியோடு நடனஞ்செய்தனர்; அந்தகன் கழுவேற்றப்பட்டவனைப்போல் துடிதுடித்து, அப்பெருமானை மனத்தில் துதித்து அறியாமையால்தான் செய்த பிழையைப் பொறுத்துத் தனது துன்பத்தை நீக்கியருளல்வேண்டும் என்றுவேண்டினன். அதற்குச் சிவபெருமான் அகமகிழ்ந்து கருணையுடன் அவனைத் தமது திருமுன்னர் விடுத்து "உனக்குஎன்ன வரம் வேண்டும்" என்று கேட்டனர். அதற்கு அவ்வசுரன் அடியேன் செய்த பிழையைப் பொறுத்தாட்கொண்ட கருணை

யங்கடலே அடியேன் வேண்டுவது சிவஞானமும் ஒன்றேயாம்; அதனையே சிறியேற்கு அருளல் வேண்டும்' என்றனன். ஆலமுண்ட அருட்பெருங்கடவுள், அவ்வசுரன் வேண்டியவாறேவரமளித்துச் சிவலிங்கத்திற் புகுந்து மறைந்தனர். பிறகு, அவ்வசுரன் அவஞானம் நீங்கப்பெற்று, சிவஞானமுற்று, சிவகணத்தலைவனாய் விளங்கினான். பின்னாள் அரியதவம் புரிந்தோரும் அடைதற்கரிதாகிய பெரும்பதவியை அவ்வசுரனும் பெற்றனன். தங்கட்குப்பேரிடையூறு இயற்றிவந்த அவ்வசுரனை அழித்துத் தங்கள் துன்பங்களையெல்லாம் ஒழித்தருளிய சிவபெருமானைத்திருமால் பிரமன் முதலானோர் பேரன்புடன் பூசித்துத் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

அந்தகாசுரன் வதைச்சருக்கம் முற்றும்.

——()——

## திருமுருகச்சருக்கம்.

தேவருலகங்களைக் கவர்ந்துகொண்டு அவர்கட்குப் பலதுன்பங்களையுண்டு பண்ணியவனும், ஆயிரத்தெட்டு அண்டங்களையும் தன்னாணை செல்லுமாறு ஒரு குடைக்கீழ் ஆட்சிபுரிந்து வந்தவனுமாகிய சூரபதுமனையும் அவனைச்சேர்ந்த தாருகன் சிங்கமுகன் முதலான அசுரர்களையும் தேவர்களுடைய துன்பங்களை யொழித்தருளும் வண்ணம் சிவபெருமானது திருக்குமாரராகிய முருகக்கடவுள் போரிற் கொன்றனர். அங்ஙனம் அவர்களைக்கொன்றமையின் கொலைப்பாவம் அப்பெருமானைப்பற்றியது. அப்பாவத்தையொழிக்கும் பொருட்டு இளையபிள்ளையார் நடுநாட்டிலேயுள்ள திருக்கோவலூரையடைந்து, ஆண்டெழுந்தருளியுள்ள சிவபெருமானை அன்புடன்பூசித்தனர். பின்னர், அவ்விடத்திலே தன் பெயரால் ஒரு சிவலிங்கத்தை விதிப்படி பிரதிட்டைசெய்து மிக்க அன்புடன் பலநாள் அருச்சித்து வந்தனர். சிவபெருமான் தமது இளையகுமாரர் நெடுங்காலமாக விதிவழாது அன்புடன் செய்துவரும் பூசைக்கு மனமிரங்கி, அவரெதிரில்தோன்றினர்; முருகவேள் தம்முன்தோன்றியருளிய தமது தந்தையின் திருவடிக்கமலங்களைப் பன்முறை வணங்கித்துதிக்க



எம்பெருமான் திருவுளமுவந்து தம்புத்திரனாரையருளுடன் நோக்கி 'நீயசுரர்களைக்கொன்றமையாலுண்டாகிய பாவமனைத்தையும் யாம் ஒழித்துவிட்டோம்; இனி நீவிரும்பிய வரம் யாது?' என்றனார். அதனைக்கேட்ட வள்ளிமணாளர் மனமகிழ்ந்து, 'அடியேன் பாவத்தையகற்றிய அருட்பெருங்கடலே, தங்கள் திருவுளத்தினின்றும் நீங்காத திருவருள்பாலித்தருளல்வேண்டும்' என்று கேட்க, சிவபெருமான் அவ்வாறேயருள்புரிந்து, சிவலிங்கத்திற் கலந்தருளினார். மயில்வாகனப்பெருமாள் பிரதிட்டித்துப் பூசித்த சிவலிங்கம் குகேச்சுரர் என்னும் பெயருடன் இன்றும் விளங்குகின்றது. அதனைப்பூசித்தோர் திருக்கயிலையையடைந்து எந்நாளும் இன்புற்று வாழ்வார்.

திருமுருகச்சருக்கம் முற்றும்.

——()——

## கிருஷ்ணச்சருக்கம்.

துவாரகையின் அரசராகிய கண்ணபிரான் ஒருநாள் திருக்கோவலூரையடைந்து, அங்கு அடியார்களுக்கு அருள்புரியும் வண்ணம் எழுந்தருளியுள்ள சிவபெருமானைச்சிவாகமவிதிப்படி மிக்க அன்புடன் பூசை செய்தனர்; சிவபெருமான், அதற்குவந்து அவ்விலிங்கத்தினின்றும் தோன்றியருள, கண்ணபிரான் அப்பெருமானை மும்முறை வலம் வந்து பணிந்தனர்; அங்ஙனம் பணிந்து நின்ற கண்ணனைச் சிவபெருமான் அருளுடன் நோக்கி 'அன்ப, நீ அன்புடன் இயற்றிய பூசையால் பெருமகிழ்ச்சியுற்றேம்; எதை விரும்பி இங்குவந்தனை; அதனைக்கூறுக' என்றனர். இறைவன் கூறியருளியதைக்கேட்ட கண்ணன் பேருவகைபூத்து "எம்பெருமானே, அசுரர்களால் துன்புற்றுவருந்தும் எம்போல்வார்க்குத்தங்களையன்றிப் புகலிடம் பிறிதெங்குளது? தம்மையடைந்தவர் எத்தகைத்துன்பமெய்தினும், அதனையகற்றியருள் புரியும்அண்ணலே, சடபுரம்என்றநகரில் வச்சிரநாபன் என்னும் ஓரசுரன் உளன்; அவன் தேவர்களுக்குப் பல தீங்குகள் புரிந்துவருகிறான்; அக்கொடியோனைக்கொல்லுமாறு அடியேற்கு ஒரு வரமீந்தருளல்வேண்டும் என்றனர். சிவபெருமான் அவர் விரும்பியவாறே வரமருளி, இலிங்கத்துட் புகுந்து மறைந்தனர்.

பிறகு, கண்ணன், மகா கொடியோனாகிய வச்சிரநாபனைத் தன் படையினாற் கொன்று, தேவர்களுடைய பயத்தையும் துன்பத்தையும் ஒருங்கே ஒழித்தருளினார்; கண்ணபிரான் திருக்கோவலூரில் விளங்கும் சிவபெருமானைப் பூசித்தருள்பெற்றமையாலன்றோ, அவ்வசுரனைக் கொன்றபுகழ்பெற்றுவிளங்கினார். ஆதலால் அம்முக்கட்பெருமானைப் பூசித்தோர் எண்ணிய எண்ணியவாறே எய்துவரென்பது திண்ணம்.

கிருஷ்ணச்சருக்கம் முற்றும்.

——(-)——

## * கபிலர்சருக்கம்.

பூமிதேவியின் முகத்திலே விளங்குந்திலகம் போன்றதும் பகையரசரால் கைப்பற்றமுடியாததும், குன்றுகளைப்போன்ற பலமாளிகைகள் நிறைந்துள்ளதுமாகிய அயோத்திமாநகரத்திலே சூரியவம்சத்தில் தோன்றிய சகரனென்னும் ஓரரசன்ஒரு காலத்தில் ஆண்டுவந்தான். அவ்வரசன் அசுவமேதயாகஞ்செய்ய வெண்ணி, வீரக்கழலணியப்பெற்றதும், வெண்டயங்கள் ஒலிக்கப்பெற்றதும், நெற்றியில் பொற்பட்டங்கட்டப்பெற்றதுமாகிய ஒரு குதிரையை அலங்கரித்துத் திக்குவிசயஞ்செய்யும்பொருட்டு வெளியேவிடுத்தனன். அக்குதிரையைப் பாதுகாக்கும்பொருட்டு அவ்வரசன் தன்னுடைய அறுபதினாயிரம் புத்திரர்களையும் அக்குதிரையுடன் அனுப்பினான்.

* இந்தச் சரித்திர சம்பந்தமுடைய கபிலர் மதுரையிலிருந்த கடைச்சங்கப்புலவருள் ஒருவர். கடையெழுவள்ளல்களில் ஒருவராகிய வேள்பாரிக்கு உயிர்த்தோழர். அவ்வள்ளல் சேரசோழபாண்டியர்களின் சூழ்ச்சியால் இறந்தபின்னர், அவருடைய அருமைமகளிர் இருவரையும் மணஞ்செய்து கொடுக்கும்பொருட்டு இளவிச்சிக்கோவினிடத்தும், இருங்கோவேளினிடத்தும், முயன்றும் பயன்படாமையின் அப்பெண்களைப் பார்ப்பார்களிடத்து அடைக்கலமாக வைத்துவிட்டு, பாரியின் பிரிவாற்றாது வடக்குநோக்கிப்பட்டினிகிடந்து உயிர்துறந்தார் என்று ஒரு சாரார் கூறுகின்றனர். வேள்பாரியின் மகளிரைத் திருக்கோவலூரில் மலையற்கு மணஞ்செய்து கொடுத்தபின்னர், கபிலர் அவனது பிரிவாற்றாமல் தீப்புகுந்து உயிர்விடுத்தாரென்றும் அவ்விடத்தில் அவரது பெயரால் ஒரு கல், பெண்ணையாற்றங்கரையில் நாட்டப்பட்டுக்கொண்டாடப்படுகிறதென்றும், திருக்கோவலூர்ச்சாசனங்கூறுகிறது.



அச்செய்தியை யறிந்த தேவேந்திரன் அவர்களைத் தன் இந்திரசால வித்தையினால் மயக்கி அவர்களுக்குத்தெரியாமல் அந்த யாகக்குதிரையைக் கொண்டுபோய்ப் பாதளத்தில் அருந்தவம் புரிந்து கொண்டிருந்த கபிலமுனிவரின் பின்னே கட்டிவிட்டு, அமராவதி நகரஞ்சென்றனன். குதிரையுடன் திக்குவிசயஞ்செய்துவந்த அரசகுமாரர் அறுபதினாயிரவரும், பூவுலகில் யாகங்கள் நடைபெறாதபடி விக்கினங்கள் செய்வது இந்திரனுடைய வழக்கமென்பதை யறியாதவர்களாய், எல்லோரும் நடுங்குமாறு மிகுந்தகோபத்துடன் தேவருலகினும் இப்பூவுலகினும் எங்குந்தேடுவாராயினர்; அவ்விடங்களில் அவ்யாகக்குதிரை காணப்படவில்லை. பிறகு பூமியைத்தோண்டி, பாதாளலோகத்திற்குச் சென்று தேடினார்கள். அவ்வுலகத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த கபிலமுனிவரின் பின்பக்கத்திலே அக்குதிரை கட்டப்பட்டிருத்தலைக்கண்டு, கோபத்துடன் போய் அதனைப்பற்றினார்கள். அன்றியும், அக்குதிரையைக் கவர்ந்து கொண்டுபோய்க் கட்டியவர் அம்முனிவரே என்றெண்ணி மிகச்சினந்து, அவரைத்தாக்க ஆரம்பித்தனர்; யோகத்தில் வீற்றிருந்த அம்முனிவர் அதனையுணர்ந்து விழித்துப்பார்த்தனர். சிவபெருமான் நெற்றிக்கண்ணால் பார்த்தவுடனே எரிந்து சாம்பலாகவீழ்ந்த மன்மதனைப்போல அவ்வரசகுமாரர் அறுபதினாயிரவரும் எரிந்து நீறாய்ப்போயினர். அவர்களைக்கொன்றபாவம் கபிலமுனிவரைப் பற்றியமையின், அவர் மனம் வருந்தி, சத்தியலோகஞ்சென்று பிரமதேவரை வணங்கி, அப்பாவத்தை யொழிக்கும் பொருட்டு ஓர் உபாயம் உரைத்தருளும்படி வேண்டினர். பிரமதேவர் கபிலமுனிவரை நோக்கி, 'சிவபுரமாகிய திருக்கோவலூரையடைந்து சிவபெருமானை வணங்கி, அவ்விடத்தில் ஒரு சிவலிங்கஸ்தாபனஞ்செய்து காலந்தோறும் அருச்சித்து வழிபட்டால் இப்பாவம் ஒழியும்' என்று திருவாய்மலர்ந்தருளினார்.

பிறகு கபிலமுனிவர், திருக்கோவலூரையடைந்து. அவ்வாறே சிவபெருமானைப்பூசித்து, பெண்ணைமாநதிக்குச்சென்று தன் பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கி, அதில் பத்தியுடன் நீராடி; அதன்கரையில் சிவலிங்கப்பிரதிட்டைசெய்து, நாள்தோறும் மிக்க அன்புடன் அருச்சித்து வந்தனர்; அவ்வண்ணம் அவர் நெடுங்காலம் பூசித்து வந்தனர். பிறகு திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் திருவுளங்கூர்ந்து அவ்விலிங்கத்தினின்றுந் தோன்றி முனிவரை நோக்கி, 'உனக்கு யாது வரம் வேண்டும்' என்று

கேட்க, முனிவர் தம்மைப்பற்றிய கொலைப்பாவத்தை யொழித்தருளும்படி வேண்டினர்; அவர் வேண்டியவாறே அவ்வரத்தை யீந்து இறைவன் சிவலிங்கத்துட் கலந்தனர். இப்பொழுது அவ்விலிங்கம் கபிலேசர் என்னும்பெயருடன் விளங்குகிறது. அதனை அன்புடன் பூசிப்போர் வேண்டியவற்றைப் பெறுவர்.

கபிலச்சருக்கம் முற்றும்.

——(-)——

## இராகவச்சருக்கம்.

தசரதகுமாரர்களாகிய இராமலக்குமணர் இராவணன் முதலான அரக்கர்களைக் கொன்ற பாவத்தை யொழிக்கும் வண்ணம் திருக்கோவலூரையடைந்து, தவ்வடிவத்தோடு பிணாகினி நதியிலேநீராடி நெற்றியில் திரிபுண்டரந்தரித்து உடம்பெல்லாம் விபூதியும் உருத்திராக்கமாலையுமணிந்து, ஒரு சிவலிங்கந்தாபித்து அன்புடன் அருச்சித்தனர். அதனால் அவ்விருவரும் அப்பாவத்தினின்றும் நீங்கி இனிது வாழ்ந்தனர். அவ்விலிங்கம் இன்றும் இராமேசர் என்னும் திருப்பெயருடன் விளங்குகின்றது. அதனைப் பூசிப்போர் அரிய வரங்கள்பெற்று, இம்மையில் பெருவாழ்வெய்தி மறுமையில் சிவபெருமான் திருவடிநீழலெய்துவர்.

இராகவச்சருக்கம் முற்றும்.

——(-)——

## பரசிராமச்சருக்கம்.

சமதக்கினி முனிவருடைய புத்திரராகிய பரசிராமர் சூரியவம்சத்திற்றோன்றிய க்ஷத்திரியர்களை இருபத்தொருமுறையழித்தனர். ஒருநாள் தம் தந்தை சொற்படி தாயையும் வாளினால் வெட்டி வீழ்த்தினர். அரசர்களைக்கொன்ற பாவமும் தாயைக் கொன்றபாவமும் ஒருங்கே பற்றியமையின் மிகத்துன்புற்றனர். அங்ஙனம் துன்புற்றநாளில் அவர் அப்பாவத்தைப் போக்கும் வண்ணம் திருக்கோவலூரையடைந்து அங்கே எழுந்தருளியுள்ள தேவதேவனை பலநாள் பூசித்தனர்; சிவபெருமான் அவர் செய்யும் பூசைக்குவந்து அப்பாவம் நீங்குமாறு அருள்புரிந்தனர்.

பரசிராமச்சருக்கம் முற்றும்.

——(-)——



## கண்ணுவச்சருக்கம்.

தவசிரேஷ்டராகிய கண்ணுவர் வேனிற்காலத்தில் தீயிலும், கார்காலத்திலும் பனிக்காலத்திலும் நீரிலும், நின்றுகடுந்தவம்புரிந்துவந்தனர். தரையில் ஓர்காற் பெருவிரலை யூன்றிக் காமம்வெகுளி மயக்கம் என்னும் முக்குறும்புகளையும் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும்ஐம்புலன்களையும்செற்று நடராஜப்பெருமானது திருவடியை மனத்துட்கொண்டு அரியதவம் செய்வாராயினர். இத்தவத்தின் கடுமையையுணர்ந்த விஷ்ணுவும் பிர்மாவும் தங்கள்பதவிகளுக்கு ஆபத்து வருமோவென்றஞ்சுவாராயினர். இந்திரனும் அத்தகைய அச்சமுடையவனாய் வேடவடிவத்துடன் முனிவரெதிரே சென்றுவணங்கி, 'முனிவர் தலைவ! இவ்வாளை அடியேன் மீண்டுவரும் வரையில் கெடாதுவைத்திருந்து தந்தருளல்வேண்டும்' என்று பிரார்த்தித்து அவ்வாளையும் அவரிடம் வைத்துவிட்டுச் சுவர்க்கலோகம் சென்றுவிட்டான். பின்னர் அம்முனிவர், அடைக்கலப்பொருளைப்பாதுகாக்கும் கருத்துடையவராய் அவ்வாளைத்தம்கையகத்தேந்திக்கொண்டிருத்தலும், அவரது குணம் கோபமுதலிய தீங்குகளுக்கு இருப்பிடமாகி, அறிவழிந்து மதுமாம்சபக்ஷணியாய்ப் பித்தனாய்த் திரிந்துகொண்டிருந்தார். அக்காலத்து அவரது முன்னைநல்வினையானது திருக்கோவல்மாநகரத்திலே அவரைச்செலுத்திவைப்ப, அத்தலசம்பந்த விசேஷத்தினாலே நல்லறிவு தோன்றப்பெற்று, ஆண்டிருந்த முனிவர்கள்பாற்சென்று, தமதுகுறைகளைக்கூறித்தம்மைநல்வழிப்படுத்தும்படிக்கேட்டுக்கொண்டார். அம்முனிவர்கள், 'முனிவரே! திருக்கோவல் வீரட்டேஸ்வரரை அருச்சனைசெய்வீரானால் உமது எல்லாப்பாவங்களும்தொலைந்துபோகும்' என்று அறிவுறுத்தார்கள். பின்னர் கண்ணுவமுனிவரும் சிவபெருமானைவணங்கி அருச்சனை செய்து, தம்பெயராலும் கண்ணுவேஸ்வரனென ஒருசிவலிங்கம் ஸ்தாபித்து அருச்சனைபுரிந்து தன்பாவத்தினின்றும் விடுபட்டு மெய்ஞ்ஞானமுடையவராய் விளக்கமுற்றிருந்தார்.

கண்ணுவச்சருக்கம் முற்றும்.

——(-)——

## தெய்வீகன்உற்பவச்சருக்கம்.

காலகேயர்குலத்தில்தோன்றியவனும் மிகக்கொடியவனுமாகிய சூரியசக்கரனென்னும் ஓரசுரன் புத்திரப்பேறடையும் வண்ணம் பிரமதேவரைக் குறித்து நெடுங்காலந்தவம்புரிந்தனன். அவனியற்றிய அரியதவத்திற்கு மகிழ்ந்து, பிரமதேவர் கலைமகளுடன் அன்னவாகனத்தில் எழுந்தருளி, அவ்வசுரனை நோக்கி, 'நீசெய்யுந்

தவத்தால் யாம்பெரிதும் மகிழ்ந்தோம்; இனி நீ விரும்பும்வரம் யாது? அதனைக் கூறுக' என்றனர். அதனைக்கேட்ட அசுரன் பன்முறைவணங்கி 'அடியேற்கு அருள்புரியும்பொருட்டு எழுந்தருளிய நான்முகக் கடவுளே, இருபுதல்வர்களை எளியேற்கு ஈந்தருளல்வேண்டும்; யான்வேண்டுவது அவ்வரமேயாகும்' என்றனன். பிரமதேவர் சூரியசக்கரனைநோக்கி, 'நீவிரும்பியவாறே இருபுதல்வர்களை எய்துதல்திண்ணம்; ஆனால் அப்புதல்வர்களைத் தற்காலத்துன்பாலுள்ள மனைவியால் அடைதல் அசாத்தியமாகும்; ஆதலால், யாம்சொல்லும் வண்ணம் செய்வாயானால் நீ இரண்டு புத்திரர்களைப் பெறலாம். அரசவனத்தில் இரு அசுரக்கன்னியர் மிருகண்டு முனிவருடைய அடிகளை வணங்கித்தாம் இருபுதல்வரைப்பெறுமாறு ஒருவரம் பெற்றிருக்கின்றனர்; அவ்விருபெண்களையும் நீ மணஞ்செய்து கொள்வாயானால் விரும்பியவாறே இருபுதல்வரைப் பெறலாம்' என்றுரைத்துத் தம் சத்தியலோகஞ்சென்றனர். பிரமதேவர் உரைத்தவண்ணமே அவ்வசுரன் வஞ்சனை கோவதையென்னும் அப்பெண்கள் இருவரையும் மணஞ்செய்துகொண்டான். நிற்க, அவ்விருபெண்களும் தம் இளம்பருவத்திலே மிருகண்டு முனிவருடையவனத்தை விளையாட்டாக அழிக்க, அப்போதுமுனிவரது பூசைக்காகமலர்கொய்யச்சென்ற இரண்டுபிரமசாரிய பிராமணர்கள் நடுக்கமுற்று வேறுவனஞ்சென்றனர். அவர்கள் மலர்கொய்து போவதற்குமுன் முனிவர் தம் பூசையைமுடித்தனர். பின்னர் சிறிதுகாலந் தாழ்த்துவந்த சீடர்களைக்கோபித்து, 'நீங்கள் அவ்வரக்கியர்களுக்கே புத்திரர்களாகப் பிறக்கக்கடவீர்கள்' என்றுசபித்தனர். சீடர்கள் அச்சாபத்தைக் கேட்டவுடன் நடுங்கி, முனிவரது அடிகளில்வீழ்ந்து வணங்கி, 'எம்பெருமானே, அறியாது தவறிழைத்த எங்கள்சாபம் ஒழியுமாறு அருள்புரிதல் வேண்டும்' என்றுவேண்டிக்கொண்டனர். அதற்கு அம்முனிவர், 'சிவபெருமான் திருவருளால் கையில் வில்லோடு பச்சைக்குதிரையின் மேல் யாககுண்டத்தினின்றும் தோன்றும் ஒரு வீரனே உங்களுடைய சாபத்தை ஒழிப்பான்' என்று கூறினர். உடனே அம்முனிவரது சீடரிருவரும் வனமடைந்து, தமது அரியதவத்தினால் உடலைநீத்து, சூரியசக்கரனென்னும் அசுரனது மனைவியராகிய வஞ்சனை கோவதை என்பவர்களிடம் இருபுதல்வராகத் தோன்றினர். காரண்டன் வல்லூரன் என்னும் பெயர்களுடன் விளங்கிய அப்புதல்வரிருவரும் இளமைப்பருவத்திலேயே பிரமதேவரைக்குறித்து அரியதவஞ்செய்தனர். செயற்கரிய கொடியதவத்தைச் செய்துவருந்திய அவ்விருவருக்குமுன் பிரமதேவர் கலைமகளுடன் அன்னவாகனத்



தின்மேல் எழுந்தருளி, 'உங்கட்கு யாதுவேண்டும்? அதனைக் கூறுக' என்றனர். அதனைக்கேட்ட அவ்வசுரகுமாரர்கள் 'கருணைபங்கடலே, கந்தருவர், இயக்கர், அமரர், கின்னரர், கிம்புருடர், முதலானோர் அழித்தற்கியலாத ஒருவரத்தையும், பகைவர் எவ்வாயுதத்தாலும் போரில் எங்களைவெல்லமுடியாத ஒரு வரத்தையும் ஈந்தருளல் வேண்டும்' என்றனர். அவ்வாறே பிரமதேவர் அவ்வரங்களை ஈந்து மறைந்தனர்.

பிறகு அவர்களிருவரும் உலகங்களெல்லாம் துன்புறும்படி, அவ்வரத்தின்வலிமையினால் பல கொடியகாரியங்களைச்செய்துவந்தனர். தவஞ்செய்வோர் யாகங்கள் செய்யும் அந்தணர் முதலானோர்க்கு இடுக்கண் இழைத்தும் தேவருலகங்களைக்கொள்ளையிட்டும்வந்தனர். தேவர்கள் எல்லோரும் இத்துன்பத்திற்காற்றாது பிரமதேவரிடம் சரணடைந்தனர். இந்திரன் முதலானோர் கூறிய துதிமொழிகளைக் கேட்டபிரமதேவர் மகிழ்ச்சியுற்று, 'நீங்கள் பயப்படவேண்டாம் அரியதவஞ் செய்தமையால் யாமேஅவர்களுக்கு வரங்களீந்தோம். ஆனால் அவர்களை அழிக்கும் ஆற்றல் யாம்பெற்றிலோம், ஆதலால் திருக்கைலாயத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமானிடம் சென்று முறையிடுவோம். வாருங்கள்' என்றழைத்துக்கொண்டு திருக்கைலைக்குச்சென்று, அடைந்தோர்க்கு அருள்புரியும் அண்ணலாகிய சிவபெருமானைத்துதித்து, 'பகைவர்களாகிய அவ்வசுரர்களை அழிக்கத்தக்கஉபாயமொன்றை அறிவித்தருளல் வேண்டுமென்றனர். அப்போது சிவபெருமான் பிரமதேவரை நோக்கி, 'உம்முடைய புத்திரரில் ஒருவரான பிருகு முனிவருடைய புத்திரன் சுக்கிரன்என்பான் பலவித்தைகளைக் கற்று அசுரர்களுக்கு அமைச்சனாய் அமர்ந்து, அவர்கட்கு அரிய தந்திரங்களைக் கற்பித்து, அவர்களுடன்சேர்ந்து தேவர்களுக்கு பலதுன்பங்களை யுண்டுபண்ணினமையால் தேவர்கள் அவ்வசுரர்களை அழித்தனர். தேவர்களால் அசுரகுலம் அழிந்துவருதலையறிந்த சுக்கிரன் பெரிதும்இரக்கமுற்று, மாயைஎன்பவளையழைத்து, மதனலீலை முதலியமாயவித்தைகளைக்கற்பித்து, 'நீ கானகத்திற்றவம்புரியும்காசிபமுனிவரிடம்சென்று, அவரைமயக்கி, அவரிடம் பலபுத்திரர்களைப்பெறுக' என்று கூறியனுப்பினான். அவளும் அவ்வாறே சென்று, அம்முனிவரை மயக்கி, அசுரர்களாகிய பல புத்திரர்களைப்பெற்றனள். அவ்வசுரர்கள் தேவர்களுக்குப்பல கொடிய தீங்குகளைநாடோறும் புரிந்துவந்தனர். அதனைக்கண்ட பிருகுமுனிவர் மிகவும் இரங்கித் தம் புத்திரனாகிய சுக்கிரனையழைத்து, 'நீ அசுரர்களைக்கொண்டு தேவர்கட்குப்பலவழியாலும்

துன்பமுண்டுபண்ணுகின்றனையே, இது நியாயமா?' என்று கேட்டனர். சுக்கிரன் 'என்னைமுன்னோர் நியமித்தவாறே நானும் செய்துவருகின்றேன்' என்றுகூறினான். அதனைக்கேட்ட பிருகுமுனிவர் மனங்கொதித்து 'நீஅந்தணர் குலத்திற்பிறந்தும்பாவங்களைச்செய்கின்ற அசுரர்குலம் வலிமையடையுமாறு பலகாரியங்கள் செய்யப்புகுந்தனை; யாம் கூறியநல்லுரையையும் மறுத்து அவமதித்தனை. நீகூறியவாறு நடந்துவரும் அவ்வசுரர் கூட்டமும்அழிந்தொழிக; பசுவின்றோலைப்போர்த்துக்கொண்டுமேய்ந்த புலியைப் போல் வன்னுள் தீக்காரியங்கள் செய்துவந்த நீயும் மேகரோகமடைந்து துன்புறுக' என்றுசாபமிட்டனர். முனிவர் கூறிய சாபத்தைக்கேட்ட சுக்கிரன் மிகவும்நடுங்கி மனந்தளர்ந்து தன் தந்தையின் திருவடியைவணங்கி, 'எந்தாய், திருமால்பத்தவதாரம் எடுக்குமாறுசெய்த தங்கட்கு அடியேன்ஒருபொருட்டோ? அடியேன் சாபம்ஒழியுமாறு அருள்புரிதல் வேண்டும்' என்று பணிவுடன்கேட்டனன். அதனைக்கேட்ட பிருகுமுனிவர்மகிழ்ந்து தம்புத்திரனை நோக்கி, 'ஆறுமுகக்கடவுள்அவ்வசுரர்களையழித்த பின்னர் நீ அவரைக்குறித்துத் தவஞ்செய்து அவர்அருளைப்பெறின் உன்மேகரோகம் நீங்கும்' என்றுகூறினர்.

பின்னர் முனிவர்கூறியவாறே ஆறுமுகக்கடவுள்அசுரர்களையெல்லாம் கொன்று பலர்தொழுமாறு சிறக்கவீற்றிருந்தனர். அதனையறிந்த சுக்கிரன் காசிக்குச்சென்று, கங்கையில் நீராடி, குமாரவேளைக்குறித்து,நெடுங்காலம்தவஞ்செய்தனன். குமாரவேள், அத்தவத்திற்கிரங்கி யெழுந்தருளி, 'நீ விரும்பிய வரம்யாது?' என்றுகேட்டனர். சுக்கிரன் அவரடியைவணங்கி, 'முற்காலத்தில் என்னை அசுரர்களுக்கு அமைச்சனாய் அமர்த்தினமையின், யான் அவர்கட்கு இன்றியமையாத பல உபாயங்களைக் கற்பித்தேன். அதனால் சாபம்பெற்று மேகரோகத்தால் வருந்துகின்றேன். அச்சாபத்தையும் ஒழித்து அசுரர்களது தொடர்பையும் முற்றிலும் நீக்கியருளல் வேண்டும், என்றனன். குமாரவேள் சுக்கிரனைநோக்கி, 'கொடியவர்களாகியஅசுரர்களை உபாயத்தால் ஒழிப்பதற்கே உன்னை அவர்கட்கு அமைச்சனாய் அமர்த்தியது. அதனை நீ மறந்து அவர்கள் குலவிருத்தியின் பொருட்டே முயற்சித்தனை. இக்கொடியநோய் எய்திய இக்காலத்தும் அவர்களிடம் கொண்டகருணையால் ஒன்றைமறைத்தனை. ஆயினும் ஒருயாகஞ் செய்யக்கடவாய். அவ்யாககுண்டத்தினின்றும் ஒரு புத்திரன் தோன்றுவான், அப்போது உன்னுடையமேகரோகமும் ஒழியும்.



நீ முன்போல அசுரர்களோடு உண்மையாய் ஒழுகக்கடவாய்' என்றுரைத்து மறைந்தனர்.

பிறகு சுக்கிரன் அவ்வாறே ஒருயாகஞ் செய்தனன் அவ்யாகக்குண்டத்தினின்றும் ஒருபுத்திரன்தோன்றினான்; அப்புத்திரனைச் சுக்கிரன் மார்போடணைத்து உச்சிமோந்து மனமகிழ்ந்தனன். அப்புதல்வன் இளமையிற் குமாரவேளை நோக்கியருந்தவம் புரிந்தான். அவர் அதற்குவந்து எழுந்தருளி 'நீயாதுவேண்டினை? அதனைக்கூறுக' என, அச்சிறுவன் 'எக்காலத்தும் தங்களைவிட்டு நீங்காது தவமியற்றுமாறு ஒரு வரமும், தங்கள் திருப்பெயரைத் தரித்துக்கொள்ளுமாறு ஒருவரமும் அருளல்வேண்டும்' என்றனன். குமாரவேள் அவ்வாறே இரண்டு வரங்களையும் அளித்து மறைந்தனர். அந்நாள்முதல் அச்சிறுவனை யாவரும் குகனென்று அழைப்பாராயினர். அக்குகமுனிவன் உங்கள்பகைவரையழிக்க ஒருபுதல்வனை யளிப்பான். ஆகையால் குமாரவேளிடஞ்சென்று உங்கள் துன்பத்தைஉரைப்பின் அஃது ஒழியும்' என்றுகூறினார்.

உடனே பிரமதேவர் முதலானோர் சுப்பிரமணியக்கடவுளிடஞ் சென்று தங்கள்துன்பத்தையொழித்தருளுமாறு வேண்டினர். அப்பெருமான் அவர்களுடைய துன்பத்தைவிரைவில் ஒழித்தருளுவதாகக்கூறி அவரவர்களுடைய உலகங்களுக்குச் செல்லுமாறுகட்டளையிட்டனர், அவர்கள் சென்றபின்னர், முருகவேள் குகமுனிவரைநோக்கி, 'ஒருயாகம் செய்தல்வேண்டும். அதற்குதகுந்தவிடம்யாது?' என்றுகேட்டனர். அதனைக்கேட்ட முனிவர் 'தாங்கள்அறியாதது ஒன்றுண்டோ! உலகங்கட்கெல்லாம் தாயாயுள்ள உமாதேவியார் தங்கட்கு ஈந்தருளிய வேலாயுதமே அதனைக்குறிக்கும்' என்றனர். முருகக்கடவுள் மிகமகிழ்ச்சியுற்றுத் தமதுவேலாயுதத்தைவிடுத்து, அதன்பின்னர் குகமுனிவரையும் செல்லும்படி கட்டளையிட்டருளினர். அவ்வேலாயுதம் தேவரெல்லாம்துதிக்குமாறு தென்திசையை நோக்கிச் சென்று, நடுநாட்டையடைந்து, அந்நாட்டிலோடும், பெண்ணையாற்றின்தென்கரையிலுள்ள திருக்கோவலூரில் விளங்கும் வீரட்டேசரது திருவடிகளைவணங்கி, அவ்விடத்தில் தங்கிற்று. அதன்பின்னேசென்றகுகமுனிவரும் அவ்விடத்தில்யாகஞ்செய்து ஒரு புதல்வனைத் தோற்றுவிக்க வெண்ணி, தம்பெயரால் ஒருசிவலிங்கந்தாபித்துப் பூசித்தனர்;சிவபெருமான் அவர்செய்யும்பூசைக்குவந்து, எழுந்தருளி 'நீ ஒருபுத்திரகாமேட்டியாகஞ்செய்யின்,இமயபர்வதராசன்

உனக்குப் புத்திரனாக அவ்யாககுண்டத்தினின்றும் தோன்றுவன்' என்று கூறி மறைந்தனர். அப்போது குகமுனிவர் குமரவேளை நினைக்க, அப்பெருமான் மயில்வாகனத்தின்மீது எழுந்தருளி, 'நீ யாகத்தைச்செய்க; யாம் அங்கேவருவோம்' என்றனர்.

அவ்வாறே முனிவர் யாகத்தைச்செய்ய, மயில்வாகனப்பெருமான் மிருகண்டு பிருகு முதலான முனிவர்களோடு எழுந்தருளி, 'இவ்யாகத்தில் கையில் ஒருவில்லும் சிரத்தில் ஓரழகியமணிமுடியும் விளங்க, பச்சைக்குதிரையின்மீது மூவுலகும் விரும்பத்தக்க மன்மதனைப்போன்ற பேரழகுடையவனாய் ஒரு புத்திரன் தோன்றுவான். அவன் பகைவர் பலரையும் அழித்து, அரியேறுபோல விளங்குவான்' என்று கூறினர். தேவர்களெல்லாம் தம் துன்பமொழிந்ததென்றெண்ணி, பெருமகிழ்ச்சியுற்றனர். கடலில் மூழ்கியெழுபவன்போல் அவ்யாககுண்டத்தினின்றும் அவ்வாறே ஒரு புத்திரன் தோன்றினான். குகமுனிவர் முதலான முனிவர்களெல்லாம் கண்பெற்ற குருடனைப்போல் களிப்பென்னுங்கடலுள் மூழ்கினார்கள். அவர்களெல்லோருங்கேட்டு மகிழுமாறு 'இக்குமாரனுக்குத் தெய்வீகன் எனும் பெயர்வழங்குக' என்று ஆகாயத்தினின்றும் ஓரொலியெழுந்தது. பின்னர்ப்பிருகுமுதலான முனிவர்கள் குகமுனிவரைநோக்கி, 'இப்புத்திரனுடைய பூர்வவரலாறுயாது? அதனைக்கூறுக' வென்றனர். குகமுனிவர் பிருகு முதலான முனிவர்களைநோக்கி, 'முனிபுங்கவர்களே, ஒரு காலத்தில் இமயபர்வதராசன் அரியதவஞ்செய்து, உமாதேவியாரைத் தன்னருமைப்புத்திரியாகப் பெற்று, சிவபெருமானுக்குத் திருமணஞ்செய்து கொடுத்தனனென்பதை நீங்கள் நன்குணர்வீர்கள். ஒருநாள் அவ்வரசன் தன்புத்திரியையும் மருமகனாகிய சிவபெருமானையும் பார்க்கும்பொருட்டுத் திருக்கயிலைக்குச்சென்று, ஆங்கு வாயில் காப்போராய்நின்ற நந்தியம்பெருமானிடத்தில் விடைபெறாமல்உட்புகுந்தனன். அச்சமயத்து, எம்பெருமான் உமாதேவியாருடன் அந்தப்புரத்தில் தனியாக வீற்றிருத்தலைகண்ட அரசன் பெரிதும் மயக்கமுற்றனன்; சிவபெருமான் அம்மன்னனை நோக்கி, 'நீ உலகின்கண் உள்ள மக்களைப்போல என்னையும் எண்ணினாய்போலும். வருதற்குரியகாலமறிந்து இங்குவாராத நீ,' உலகில்மானிடனாகப்பிறக்க!' என்றுசபித்தனர். அரசன்மனம்வருந்தி 'அண்ணலே, தங்களைக் காணவேண்டுமென்னும் பேரவாவினால் வாயில்காப்பாளர்க்கும் அறிவியாது உள்ளேவந்தனன். தங்கள் திருவடிக்கமலங்களைக் கண்டு தரிசித்த அடியேற்கு அச்சாபத்



தைமாற்றியருள்புரிக' என்று வேண்டினன். அவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த உமாதேவியார் சிவபெருமானை நோக்கி, 'எம்பெருமானே, தங்கள் திருவடிகளைத் தரிசித்தவரை உலகிற் பிறக்குமாறு சபித்தல் அழகன்று; அன்றியும், தங்கட்குமாதுலராய் அமையும் பாக்கியம்பெற்றவராகிய இவரைப்புவியில் மக்கட்பிறப்பெய்துமாறுசபித்தல் தங்கட்குப்புகழுமன்று' என்றுகூறினர். உமாதேவியார் கூறியவற்றைக்கேட்டருளிய சிவபெருமான், 'எம்சாபம் ஒருவரையும் விடாது. ஆதலால், நீ கன்னியரதுகருப்பைக்குட்புகாமல் திருக்கோவலூரில் குகமுனிவர் செய்யும்யாகத்தில் அக்கினியினின்றும் தோன்றுவாய். அக்காலத்தில், யாம் உனக்குப் பெயர்வைத்தழைப்பதுடன் உலகவாழ்க்கையிற்புகுந்து வருந்தாதிருக்குமாறு அருள்புரிவோம். பல்வகைப்பட்ட போகங்களையனுபவித்துப், பின்னர் பெரும்புகழுடன் நீ நம்மிடம் வருவாய்' என்றுகூறியருளினார். அவ்வாறே அவ்விமயபர்வதராசன் இங்குநடை பெற்றயாகத்தில் தெய்வீகனாய்த் தோன்றியுள்ளான்' என்று அவனுடையபழையவரலாற்றை விளக்கிக்கூறினார்.

தெய்வீகராசன் உற்பவச்சருக்கம் முற்றும்.

——(-)——

## தெய்வீகன் நாடுகொண்டசருக்கம்.

தெய்வீகன் அருந்தவமுனிவராகிய குகரிடத்தே பலகலையுங்கற்றுணர்ந்து காமவேளென விளங்குவானாயினான்; தன்பசும்புரவிமீதேறிப் பலவிடங்கட்குஞ் சென்றுவிரைந்து மீளுவன். இங்ஙனம் நிகழும்நாளில், குகமுனிவர் தம்புத்திரனது குதிரைவலிமையை உலகிற்குக்காட்டவேண்டி 'எனதருமைக்குழந்தாய், ஒருநாளிலே காசியிலோடும் கங்கையில்நீராடித் திருமஞ்சனங்கொண்டுபோய், இராமேச்சுரத்தில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுக்கு அபிடேகஞ்செய்து, திருமால் முதலானோர்வணங்குந் தில்லையம்பலத்தைத்தரிசித்தோர், முற்பிறப்பிற் செய்ததீவினையனைத்தும் அகற்றி, உலகெலாம் ஒருகுடைக்கீழாட்சிபுரிந்து, பின்னர் சிவபெருமான்திருவடிநீழலெய்துவரென்று பெரியோர் கூறுவர். இவ்வண்ணம் இதனைச்செய்து பயன்பெற்றோர் இதுகாறும் ஒருவரும் இலர். ஆதலால், இதனைச்செய்து நீபயன்பெறுவாயாக' என்றனர். அவற்றைக்கேட்ட தெய்வீகன் அவர்கூறியவாறே வீரட்டேசர் திருவருட்டுணை கொண்டு, தனதுகுதிரைமீ

தேறி காசியம்பதியடைந்து, கங்கையில்நீராடி, அவ்விடத்தெழுந்தருளியுள்ள விசுவேசரைத்தொழுது, கங்கைநீர் கொண்டு, இராமேச்சுரம் அடைந்து, சிவபெருமானைப்பூசித்து தில்லையம்பதியிலுள்ள பொன்னம்பலத்திலே நடனஞ்செய்கின்ற நடராஜப்பெருமானைத்தரிசித்து, அதன்பின்னர்த் திருக்கோவலூரையடைந்தனன். இஃதிவ்வாறாக, சேரசோழபாண்டியர்களாகிய தமிழ்வேந்தர் மூவரும் தெய்வீகனது குதிரையின் பெருமையை நன்குணர்ந்து, தெய்வீகனைக்கேட்டு அதனைப் பிடித்துக்கொண்டு வரும்படி தமதுமந்திரிகளை அனுப்பினார்கள். அவ்வாறே அமைச்சர்மூவரும் தெய்வீகனிடம் சென்றார்கள்.

பிறகு, தெய்வீகன் தன்னையடைந்துள்ள மந்திரிகளைநோக்கி, 'உங்கள் அரசர்களுக்குத் தோள்வலிமையிருக்குமாயின் என்னைப் போரில் செயித்துக் குதிரையைக்கொண்டு போகலாம். யான் இப்போது அதனைக்கொடேன்' என்று கூறினான். அவன்கூறியவற்றை அமைச்சர் மூலமாகஅறிந்த தமிழ்வேந்தர் மூவரும் மிகவும் கோபமுற்றுத் தமது சேனைகளைத் திரட்டிக்கொண்டு, தெய்வீகனோடு போர் செய்வதற்குப் புறப்பட்டனர். போர்ப் பறைகள் எங்கும் முழங்குவவாயின. நால்வகைச் சேனைகளும் எங்கும் சூழ்ந்துகொண்டன. இதனையறிந்த தெய்வீகன் அச் சேனைகளோடு எதிர்த்துப்பெரும் போர்புரிந்தனன். மூவேந்தர் சேனைகளும் சின்னாபின்னமடைந்து முதுகுகாட்டியோடத் தலைப்பட்டன. இதனைக்கண்ட தமிழரசர் மூவரும் மனம்வருந்தித் தம்மோடு தனித்தனியாகப் போர்புரியும்படி தெய்வீகனையழைத்தனர். அங்ஙனமே தெய்வீகன் போர்புரியுங்கால் அவன் முன்னர்நின்று போர்புரியும் ஆற்றலின்றி மூவேந்தரும் புறங்காட்டியோடினர். பின்னர், அன்னார்மூவரும் இனிஇவனைஎதிர்ப்பதில்பயனில்லை என்பதை நன்குணர்ந்து, தெய்வீகனையடைந்து 'இரணியனை வென்ற நரசிங்கத்தைப் போன்றவனே, உன்னுடைய தோள்வலியும் போர்வீரமும் இன்று நன்கறிந்துகொண்டோம். இனி, உனக்குநரசிங்கனெனும் பெயர்வழங்குக. குகமுனிவரது யாககுண்டத்தில் இறைவனருளால் தோன்றிய உனது பெருமையை யாங்களோகூறும் வல்லமையுடையோம்' என்றுபுகழ்ந்துரைத்து, அவனையழைத்துக் கொண்டு போய்ப் பொன்னம்பலத்திலே விளங்குகின்ற சிவபெருமானது திருச்சந்நிதியிலே ஒருசிங்காசனத்தில் வீற்றிருக்கச்செய்து, தம்தம்



முடிகளை எடுத்துத் தனித்தனியாகச் சூட்டினார்கள். அச்சமயத்தில் எல்லோருந்தெய்வீகனை நான்முடியோன் என்று புகழ்ந்தார்கள்.

பிறகு, தெய்வீகன் அவ்வரசர்களை அவ்விடத்திருக்கச் செய்து, தன்குதிரைமீதேறிப் பதின்காதவூராம் அதனைச்சுற்றி வந்து, பின்னர் அவ்வேந்தர்களோடு திருக்கோவலூர்க்குச் சென்று, சிவபெருமானைத்தரிசித்து, குகமுனிவரோடு தேவர்களெல்லாம் புகழுமாறு சிங்காசனத்தில் வீற்றிருந்தனன். அவன் வீற்றிருந்த காட்சியைக்கண்டு களித்த வேந்தர் மூவருந்தங்களுடைய பெண்களை அவனுக்குத் திருமணஞ்செய்துகொடுக்க வெண்ணினார்கள். அதனைக் குறிப்பாலுணர்ந்த குகமுனிவர் அவ்வேந்தர்களை நோக்கி, 'நீங்கள் உங்களுடைய ராஜ்ஜியத்தில் சிலபகுதிகளையும் மும்முடிகளையும் அளித்தவாறு போல் உங்கள் பெண்களையும் அவனுக்குத் திருமணஞ் செய்துகொடுப்பீராக' என்று கூறினர். அம்முனிவர் கூறியவற்றைக்கேட்டு அரசர்கள் மகிழ்ச்சியுற்று 'எல்லாம் இறைவன் திருவருளிருப்பின் நடைபெறும்' என்றனர். பின்னர் அவர்கள் தெய்வீகனைநோக்கி, 'நீ குதிரையேறி வலம்வந்த நாடே நடுநாடென்று வழங்கப்பெறும். அதனை நீயே ஆளுக' என்றுரைத்து, வீரட்டேசரது திருவடிகளை வணங்கித்தத்தம் நாடுகளுக்குச் சென்றனர். தெய்வீகனும் அவர்கள் கூறியவாறே நடுநாட்டை ஆண்டுவந்தனன்.

தெய்வீகன் நாடுகொண்ட சருக்கம் முற்றும்.

——(-)——

## தெய்வீகன் மும்மணச்சருக்கம்.

தெய்வீகன் நடுநாட்டை யாட்சிபுரியும்படி முடிசூட்டிச் சென்ற தமிழ்வேந்தர்களில் ஒருவனாகிய சோழன்தான் எண்ணியவாறே தன்னாட்டிலுள்ள சோதிட விற்பன்னர்களையழைத்துத் தன் குமாரத்தியாகிய பதுமாவதியைத் திருக்கோவலூரில் ஆட்சிபுரியும் தெய்வீகராசனுக்குத் திருமணஞ் செய்துகொடுப்பதற்கு ஒரு சுபதினம் குறிக்கச்செய்து அதனைக்குகமுனிவருக்குத் தெரிவித்துத் தெய்வீகன் முதலானோரை அழைத்துவரும்படி தன்அமைச்சர்களை அனுப்பிவிட்டு, மற்றஅரசர்கட்குத்

தூதர்கள் மூலமாகத் திருமணவோலை யனுப்பினான். பின்னர், அமைச்சர் முதலாயினோர் தலைநகரத்தை அலங்கரித்ததோடு திருமணத்திற்கு வருகிறவர்கள் தங்கிவசித்தற்குப் பலவிடுதிகள் ஏற்படுத்தினார்கள். குறித்தசுபதினத்திலே தெய்வீகன் குகமுனிவர் முதலானோரும் மற்றைய தேசமன்னரும் வந்து சேர்ந்தனர்; சேரஅரசன் பலவகையான வாத்தியங்கள் ஒலிக்க அவர்களை எதிர்கொண்டழைத்து வந்து, அவரவர்கட்கு முன்னரே அமைக்கப்பெற்றுள்ள விடுதிகளில் தங்கும்படி செய்தனன்.

பின்னர்ச் சோதிடசாத்திரிகள் கூறிய நன்முகூர்த்தத்திலே, அந்தணர் வேதவிதிப்படி சடங்குகள் செய்யவும், தேவர்களெல்லோரும் பூமாரி பொழியவும், முதியோர்கள் ஆசிகூறவும், மன்னன் தன்மகளாகிய பதுமாவதியைத் தெய்வீகனுக்குமணஞ்செய்துகொடுத்தனன். பிறகு மணமகனும் மணமகளும் முனிவர்களையும் பெரியோர்களையும் வணங்க, அவர்கள் ‘நீங்களிருவரும் உமாதேவியாரையும் சிவபெருமானையும் போலப் பிரிவின்றிப் பன்மங்கலங்களும் பெற்று நீடுவாழ்க’ என்று வாழ்த்தினார்கள். அதன்பின்னர், சேரமான்தன் அருமைக் குமாரத்திக்குப் பொன்னும், மணியும், அணியும், வேண்டுவனபிறவும் சீதனமாகவளித்துத் தாதிமார் ஆயிரவரையும் கொடுத்தனன்.

இஃதிவ்வாறாக, அவ்விவாகத்தின்பொருட்டு அங்கே வந்திருந்த பாண்டியன் குகமுனிவரைவணங்கி, ‘அடியேன் புத்திரியையும் தெய்விகனுக்குத் திருமணஞ்செய்துகொடுக்க எண்ணியுள்ளேன். ஆதலின் ஒரு நன்னாளைச்சொல்லியருளல்வேண்டும்’ என்று கூறினன். முனிவர் ஒரு சுபதினத்தைக் குறிப்பிட்டுச்சொல்ல, பாண்டிமன்னன் அங்கே திருமணத்திற்கு வந்திருந்தோர் எல்லோரையும் நோக்கி, ‘எனதுபுத்திரிக்கும் தெய்வீகராசனுக்கும்நடைபெறும் விவாகத்திற்கு நீங்கள் எல்லோரும் தவறாமல் மதுரையம்பதிக்கு எழுந்தருளல்வேண்டும்.’ என்று கூறிவிட்டுத் தன்னகரடைந்து, விவாகத்திற்குரிய காரியங்களை எல்லாம் செய்துமுடித்து, தெய்வீகன் குகமுனிவர் முதலானோர் வரவை அன்புடன் எதிர்பார்த்திருந்தனன். அவ்வாறே தெய்வீகன், குகமுனிவர், பிருகுமுனிவர் முதலானோரும், மற்றைய மன்னரும் வருதலையறிந்து, அவர்களை மிகச்சிறப்பாக எதிர்கொண்டழைத்து, அவரவர்கட்கு ஏற்படுத்தப்பட்டுள்ள விடுதிகளில் தங்கும்படி செய்தனன்.



பின்னர்க்குகமுனிவரால் குறிக்கப்பெற்ற சுபதினத்திலே தெய்வீகராசனுக்கும் பாண்டிமன்னனது குமாரத்தியாகிய காஞ்சனமாலைக்கும் சிறப்பாகத்திருமணம் நடைபெற்றது. ‘பாண்டியராசகுமாரத்தியாகிய மீனாட்சியம்மையையும் சோமசுந்தரக்கடவுளையும்போல் சிறப்புற்றுவாழ்க’ என்று மணமகனையும் மணமகளையும் முனிவர் முதியோர் முதலான எல்லோரும் வாழ்த்தினார்கள். அத்திருமணம் முடிவுற்றவுடனே பாண்டியன் குகமுனிவரை நோக்கிச் ‘சோழமன்னனது அரியகுமாரத்தியைத்தெய்வீகராசனுக்குத் திருமணஞ்செய்துகொடுத்தற்கு ஒரு நல்நாள் கூறல்வேண்டு’மென்று கேட்டனன். அவ்வாறே முனிவர் ஒரு சுபதினத்தைக்கூற, சோழமன்னன் அவ்விவாகத்திற்குவந்திருந்தோரைத் தன்னகரத்தில் தன் குமாரத்திக்கும் தெய்வீகராசனுக்கும் நடைபெறும் திருமணத்திற்கும் வந்து சிறப்பாக நடத்தும்படி வேண்டிக்கொண்டு, தன்னகராகிய திருக்குடந்தைக்குச் சென்று விவாகத்திற்குரிய காரியங்களைச்செய்துமுடித்து, அவர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனன். அவர்கள் எல்லோரும் வந்தபின்னர் குறித்த சுபதினத்திலே தெய்வீகராசனுக்குத் தன் அரும்பெறற் குமாரத்தியாகிய சண்பகமாலையைப் பல பெரியோர்கள் நிறைந்துள்ள சபையில் அக்கினிசாட்சியாகத்திருமணஞ்செய்துகொடுத்தனன். ‘பன்னலங்களுமுற்று இருவரும் நீடுவாழ்க’ என்று எல்லோரும் வாழ்த்தினார்கள். பிறகு அந்தணர் முதலானோர் சன்மானம் பெற்றுத்தத்தம் இருப்பிடங்கட்குச் சென்றனர். அரசர்களெல்லோரும் தத்தம் தேசங்கட்குச் சென்றார்கள்.

சில நாள் கழிந்தபின்னர், தெய்வீகராசன் தன் மாதுலர் மூவரும் அளித்த மூன்று மந்திரிகளோடும், தன்னுடைய மூன்று மனைவியரோடும் மற்றைய பரிசனங்களோடும் புறப்பட்டுத்தில்லையம்பதியைத்தரிசித்து, பிறகு திருக்கோவலூரையடைந்து, வீரட்டேசரது திருவடிகளை வணங்கி, அப்பெருமான் திருவருளால் அந்நகரிலிருந்து நடுநாட்டைநீதிதவறாது ஆட்சிபுரிந்துவந்தனன்.

தெய்வீகன் மும்மணச் சருக்கம் முற்றும்.

## காரண்டவல்லூரர் வதைச்சருக்கம்.

இந்திரன் முதலான தேவர்கள், காரண்டவல்லூரர் என்னும் அசுரர் இருவராலும் மிகத்துன்புற்று, குமாரக்கடவுள் உரைத்தவற்றை மனத்திற்கொண்டு, திருக்கோவலூரையடைந்து சிவபெருமானைப்பூசித்து, அசுரர்களால் தாம் படுந்துன்பத்தைக்கூற, அப்பெருமான் ‘நீங்கள் இவ்வூரில் ஆட்சிபுரியும் தெய்வீகனிடஞ்

சென்று, உங்கள் குறையைச்சொல்லி, அவனைக்கொண்டு அவர்களை அழிப்பீராக' என்று திருவாய்மலர்ந்தருளினார். பின்னர், அவர்கள் குகமுனிவரையடைந்து நடந்தவற்றைக்கூற, அம்முனிவர் அவர்களைத் தெய்வீகனிடம் அழைத்துச்சென்று, அவர்கள் அங்கு வந்தகாரணத்தையும், சிவபெருமான் கூறியவற்றையும் உரைத்தருளினார். அவற்றைக்கேட்ட தெய்வீகன் தேவர்களை நோக்கி, 'அக்காரண்டவல்லூரர் யாவர்? அவர்களுடையவரலாற்றை அடியேற்கு அறிவித்தருளுக' என்று வேண்டினன். இந்திரன், அவர்களுடையவரலாற்றை நன்றாக விளக்கிக் கூறினான். அதனைக்கேட்ட தெய்வீகன் புன்சிரிப்புக்கொண்டு, 'அவ்வசுரர்கட்குச்சிறிதும் நீங்கள் பயப்படவேண்டாம்; யான் அவர்களை விரைவில் அழிப்பேன்' என்று உறுதிமொழிகூறி, இந்திரன் முதலானோரை அவரவர் நகரங்கட்கு அனுப்பினான்.

பிறகு தெய்வீகன் அசுரர்களைக்கொல்லவெண்ணி, வீரட்டேசரையும் குகமுனிவரையும் வணங்கி உத்தரவு பெற்றுக்கொண்டு, நால்வகைச் சேனையுடன் போர்க்கெழுந்து, காரண்டவனத்திற்குச்சென்று, அங்குத்தங்கினான். அப்போது தெய்வீகன்முன்னர் ஓரழகிய இளமான் தோன்றிற்று. அரசன் அதனைப் பிடித்தற்கெண்ணிப் பின்தொடர்ந்தனன்; நெடுந்தூரம் ஓடி, அவ்வழகிய மான் திடீரென்றுமறைந்தது. அரசன் அம்மானைப்பின்தொடர்ந்தோடிய களைப்பினாலும் ஆகாரமின்மையாலும் ஒருகற்பாறையின் மேல் களைத்து உட்கார்ந்தான். அவன் நாவும் வறட்சியுற்றது. அச்சமயத்து அமைச்சர் முதலானோர், அரசனைக் காணாமையின் அக்காடுமுழுதும் தேடிக்கற்பாறையில் களைப்புடன் உட்கார்ந்திருந்த அரசனை மகிழ்வோடுகண்டு வணங்கினர். பின்னர், அரசன் தண்ணீர் கொண்டு வருமாறு சிலரை ஏவ, அவர்கள் காடெங்குந்தேடித் தண்ணீர் அகப்படாமையின் மனம்வருந்தி, அதனை அரசனிடம் தெரிவித்தனர். அப்போது சிவபெருமான் ஓரந்தணவடிவங்கொண்டு, பொதிசோற்றுடன் அரசனையணுகினர். அந்தணரைக்கண்ட அரசன் அவரைவணங்கித், 'தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? தங்கள் பெயர் யாது?' என்றுவினவ, அந்தணர் 'யாம்வசிப்பது இவ்வனமேயாகும். எம்பெயர் சிகரசிகாமணிநாதன் என்ப' என்றுகூறினர். பின்னர் அரசன் அவ்வந்தணரைநோக்கி, 'என்தாகத்தைத்தீர்க்க ஒருதடாகம் காட்டுக' என்றுவேண்டினன். அந்தணர்தம் கைச்சூலத்தைஎறிந்து ஒருதடாகம் உண்டுபண்ணினர். அப்போது அரச



னும் மற்றையோரும் தண்ணீர்பருகித் தம்தாகத்தைத் தீர்த்துக்கொண்டனர். பிறகு அந்தணர் அரசனுக்குப் பொதிசோறீந்து 'உண்ணுக' என்றனர். அரசன் 'மற்றையோரிருக்க யான்மாத்திரம் உண்ணுதல் நியாயமன்று' என்று கூற, அந்தணர், எல்லோருக்கும் உணவளித்து அரசனை உண்ணும்படி செய்தனர். பின்னர்ச்சிவபெருமானாகிய அவ்வந்தணர் மறைந்தனர். அப்போது அரசன் அந்தணரைக்காணாது திகைப்புற்று, நான்குதிக்குகளையும் நோக்க, அச்சமயத்தில் ஓர்அரசமரத்தடியில் ஒருசிவலிங்கங் காணப்பட்டது. அதனைக்கண்ட அரசன் உணவளித்தவர் சிவபெருமானே என்றுணர்ந்து, மிக்கஅன்புடன் சிவலிங்கத்தருகிற்போய்ப்பன்முறை வணங்கித் தோத்தரித்தனன். அப்போது 'அரசனே, விரைவில் உன்சேனையுடன்சென்று, அக்கொடிய அசுரர்களைக்கொல்லுக' என்று ஓரொலி ஆகாயத்தினின்றும் எழுந்தது. பின்னர் அரசன் சிவபெருமானையும் மிருகண்டு முனிவரையும் வணங்கிவிடை பெற்றுக்கொண்டு, தன்சேனையோடு தென்றிசைநோக்கிச்சென்று, அவ்வசுரர்கள் வசிக்கும் நகரத்திற்குச் சமீபத்தில்தங்கினான்.

அதன்பின்னர், அரசன் தன்தூதர்களைக் காரண்டவல்லூரரிடம்அனுப்பி 'இனி, தேவர்களைத் துன்புறுத்தாமலிருப்பீராக; அன்றேல் போருக்கெழுக' என்று தெரிவிக்கும்படி செய்தான். தூதுவர் அவ்வசுரர்களிடம்சென்று அவ்வாறேஅறிவித்தனர். அவ்வசுரர்கள் 'நம்மைப் போரில் வெல்வோர் ஒருவருமிலர்' என்று இறுமாந்து, போர்க்கெழுந்தனர். பிறகு இருதிறத்தார்க்கும் பெரும்போர் மூண்டது. முதல்நாள் நடந்தபோரில் தெய்வீகன், அசுரர்கள் தவஞ்செய்து பிரமதேவரிடமிருந்து வாங்கியுள்ள சித்திரகதையால் அடிபட்டு மூர்ச்சித்து விழுந்தமையால் அசுரர்எல்லோரும் அவன் இறந்தொழிந்தானென்று எண்ணிப்போய்விட்டனர்.

பிறகு சிவபெருமான் அரசனுடையகனவிற்றோன்றி 'உன்னுடையசேனைகளை யாம்எழுப்பித்தருவோம். நீ சிறிதும் பயப்படேல்; யாம் எமதுநந்தியையும் உனக்குஉதவிபுரியும்படி அனுப்புவோம்' என்றுகூறினர். அவ்வாறே சேனைகளெல்லாம் எழுந்தமையின், இரண்டாம்நாள் போர்நடைபெற்றது. அப்போரில் காரண்டனது தம்பியாகிய வல்லூரன் இறந்தான். பிறகுமூன்றாம்நாள் போர்நடந்தது. அன்று காரண்டனுடைய படைத்தலைவனு

யை ஆங்காரசித்தனை அரசனுடையமந்திரியாகிய அனகசுந்தரன் கொன்றான். பின்னர்க் காரண்டன்போர்க்களத்திற்கு யுத்தஞ் செய்யவந்தனன். அவன்மாயையினால் மறைந்துநின்றுபெரும் போர்செய்தனன். ஆகாயத்திலிருந்து, நந்திகேச்சுரர்சொல்லிய உபாயத்தினால் தெய்வீகன் காரண்டனது மூன்றுசிரங்களும் பூமியில்சிதறிவிழும்படி மந்திரவாளினால் வெட்டிவீழ்த்தினான். அப்போதுதேவர்களெல்லோரும் பெருமகிழ்ச்சியுற்றுப் பூமாரிபொழிந்தனர். தங்களைத் துன்புறுத்திய அசுரர்களொழிந்தமையின், எல்லோரும் களிப்பென்னுங் கடலுள்ஆழ்ந்தனர். அவ்வசுரரிருவரும் முற்பிறப்பில் அந்தணர்களாயிருந்தமையின், அரசனை பிரமஹத்திபிடித்துக்கொண்டது. அதனைக்கண்ட அமைச்சர் முதலானோர் பெரிதும்வருந்தினார்கள். பின்னர், அரசனை மெதுவாக அரசவனத்திற்கு அழைத்தேகினர்.

காரண்டவல்லூார் வதைச்சருக்கம் முற்றும்.

——(·)——

## தெய்வீகன் பிரமஹத்தி நீங்கியசருக்கம்.

வேந்தர் பெருமானாகிய தெய்வீகன் அரசவனம் சென்றவுடன், அவனைப்பற்றியிருந்த பிரமஹத்தி விலகிநின்றது. அன்றிரவு ஓரிடத்தில் தங்கியிருந்தனன்; மறுநாட்காலையில் அவ்வனத்தில் வீற்றிருக்குஞ் சிவபெருமானை வணங்கிப் பக்கத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த மிருகண்டுமுனிவரையும் கண்டுதொழுதனன்; அரசன் தான் அசுரர்களைக்கொன்றமையும், அதனால்தன்னை பிரமஹத்திபற்றிக்கொண்டமையும், அம்முனிவரிடத்தில் விரித்துக்கூறினான். ஐம்புலன்களையும் அடக்கியருந்தவம்புரியும் முனிவர் பெருமான், அவ்வசுரர்களுடைய முற்பிறப்பின் வரலாற்றை அரசனுக்கு விபரமாகக்கூறி, நீ காசிக்குச் சென்று கங்கையில் நீராடி, அங்கிருந்து அந்தணர் ஆயிரத்திருநூற்றுவரைக்கொணர்ந்து, எண்ணூறுபேரைத்திருக்கோவலூரில் குடியேற்றி, எஞ்சிய நானூற்றுவரை இவ்வனத்தையழித்து இதில்குடியேற்றி, அவர்கட்குவேண்டியவற்றையும் அளிப்பாயாயின், உன்னைப்பற்றியுள்ள இப்பிரமஹத்தி ஒழியும்' என்றுரைத்தருளினர்.

அருந்தவமுனிவராகிய மிருகண்டு கூறியவாறே அரசன் காசிக்குச்சென்று, அம்முனிவர் உரைத்தருளியதைச் சிறிது மறந்தவனாய் அந்தணர் எண்ணூற்றுவரை அழைத்துவந்தனன். திருக்கோவலூர், தெள்ளாறு, குழப்பலூர், சித்தாங்கூர், என்ற



நான்கு ஊர்களிலும் சிவாலயங்களும் வீடுகளுங்கட்டி, அவ்வூர்களில் நானூறுமறையோரைக் குடியேற்றி மானியங்களுமீந்தனன். பின்னர், எஞ்சிய நானூற்றுவரையும் அரசவனத்திற்கு அழைத்துச்சென்றனன். பிறகு அமைச்சர் முதலானோரையழைத்து, அக்காட்டையழித்து, நகராக்கி, வீதிகள் ஏற்படுத்தி, எண்ணூறுவீடுகளும் அமைக்கும்படி உத்தரவிட்டனன். அவர்கள் அவ்வாறேயமைத்து அறிவித்தவுடன், தெய்வீகன், நானூறு அந்தணர்களை நானூறு வீடுகளில் குடியிருக்கும்படி செய்வித்துக் கொண்டனன். எஞ்சிய நானூறுவீடுகளில் குடியிருப்பதற்கு அந்தணரின்மையின் பெரிதும் வருந்தினான். அப்போது, அடியாருறுங்குறையை அகற்றும் அருட்கடலாகிய சிவபெருமான், ஓர் அந்தணவடிவங்கொண்டு, அரசன் எதிரில்தோன்றி 'அரசே நீ அந்தணர்கட்கு வீடு விளைநிலமுதலியவற்றைக் கொடுப்பதையறிந்து இங்கே வந்தேன்' என்று கூறினார். அரசன் பெருமகிழ்ச்சியுற்றுத், 'தங்கட்கு ஒரு வீடும்விளைநிலமும் அளித்தேன்; அவற்றை ஏற்றுக்கொள்வீராக' என்றுகூற, அந்தணர் 'நானூறு வீடுகளையும் எனக்கே கொடுத்தல்வேண்டும்' என்றனர். அரசன் அந்தணரை நோக்கி 'அந்தணீர், எப்போதும் இவ்வுலகில் பிராமணர்களுக்கு ஆசை மிகுதியாக உண்டென்பதை நன்றாக விளக்கிக்காட்டிவிட்டீர்கள்' என்று நகைப்புடன் கூறி 'இந்த நானூறு வீடுகளிலும் குடியிருத்தற்கு உங்கள் வீட்டில் அந்தணர்கள் இருக்கிறார்களோ?' என்று கேட்டனன். அரசன் கூறியவற்றைக் கேட்ட அந்தணர் நகைத்து, 'அரசர்ஏறே, வேதமோதும் பிராமணரோடு அவர்கள் மனைவியர் பிள்ளைகள் முதலானோரை நாளையதினம் நானூறுவீடுகளிலும் நீ பார்க்கலாம்' என்று கூறினர். பின்னர் சிவபெருமானாகிய அந்தணர், தமது சிவகணங்களையழைத்து, அந்தணவடிவத்தோடு அவ்வீடுகள்தோறும் தங்கியிருக்குமாறு உத்தரவருளினார். அவ்வாறே அவர்கள் நானூறு வீடுகளிலும் தங்கியிருந்தனர்.

மறுநாட்காலையில் அரசன் அவ்வீடுகள்தோறும் அந்தணர் குடியிருத்தலைக்கண்டு, மனமகிழ்ந்து, அவ்வீடுகளை அந்தணராக வந்துள்ள சிவபெருமானுக்கு அளித்தனன். அச்சமயத்தில் அந்தணர் மறைந்தருளினார், அரசன் அந்தணரைக்காணாது பெரிதும் மயங்கினான். 'இவர் மறைந்தவாறென்னே' என்று மிகவும் ஆச்சரியமுற்று வருந்தினான். பிறகு சிவாலயத்திற்குச்சென்று, இறைவனைப் பன்முறை வணங்கி 'எம்பெருமானே, அந்தணராகவந்தவர்கள் தாங்களே என்பதையுணர்ந்தேன். எளியேனைப்பற்றி

யுள்ள இப்பெரும் பழியை நீக்கியருள்புரிக. 'அடியேனை இன்னும் சோதித்தல் தங்கள் திருவருட்கு அழகன்று' என்று வேண்டினன். அவ்வேண்டுகோளைக் கேட்டருளிய சிவபெருமான் ஒன்றுங்கூறியருளாதிருந்தமையின், அரசன் தன் வாளை உருவித் தலைச்சிரத்தைத் துணிக்கத் தொடங்கினன். அச்சமயத்தில் சிவபெருமான், 'அஞ்சேல்! அஞ்சேல்! நில்லு! நில்லு!' என்று கூறிக்கரத்தைப்பிடித்துக்கொண்டனர். உடனே, அரசனுடைய கழுத்திலுண்டாயிருந்தவடுவும் மறைந்தொழிந்தது. அப்போது சிவபெருமான் அரசனை நோக்கி 'அன்பனே, உன்னிடம் நாலு வீடுகளையும் யாமே வாங்கினோம்; உன் துன்பத்தை ஒழிப்பாயாக இங்கேயுள்ள சுனையில் நீராடினால் உன்னைப்பற்றிய பழியும் ஒழியும், யாம் வசிக்கும் இவ்வாசவனத்தில் ஆலயத்திருப்பணி செய்வாயாக' என்றுரைத்தருளினர். சிவபெருமான் உரைத்தருளியவற்றைக்கேட்ட அரசன் அகமகிழ்ந்து, அவ்வாசவனத்தில் பெரிய ஆலயம் எடுப்பித்து, நித்திய நைமித்திகங்களுக்கு வேண்டிய பொருள்களும் விளைநிலங்களும் மிகுதியாக அளித்தனன். தவறுமல் திருவிழாமுதலியன நடைபெறுமாறு செய்தனன். சிவபெருமானுரைத்தருளிய சுனையிலே நீராடித் தன்னைப் பற்றியுள்ள பழியினின்றும் நீங்கினன். தன்னைப்பற்றியிருந்த பழியை நீக்குதற்கு முன்னர் ஒருபாயங்கூறியவரும் அவ்வாசவனத்தில் தவமியற்றிக்கொண்டிருப்பவருமாகிய மிருகண்டு முனிவரைக்கண்டு வணங்கினன். அவ்வனத்தில் அரசன் வசித்துவரும் நாளிலே ஒரு சிவராத்திரியில் சிவபெருமான் திருக்கோவலூரையழைத்து அரசனுக்குக்காட்டியருளினர். பின்னர், அரசன் இறைவாசநல்லூரெனப்படும் அரசவனத்துள்ள எம்பெருமானை வணங்கிவிடைபெற்றுக்கொண்டு, திருக்கோவலூர்க்குச்சென்று, நீதிதவறாது நடுநாட்டை ஆட்சிபுரிந்து வந்தனன்.

தெய்வீகன் பிரமஹத்தி நீங்கியசருக்கம் முற்றும்.

——(-)——

## தெய்வீகன் சத்தபுரிசென்ற சருக்கம்.

அரசர் பெருமானாகிய தெய்வீகன் திருக்கோவலூரில் நடுநாட்டை ஆட்சிபுரிந்து வருங்காலத்திலே, சிவபெருமானிடத்துக்கொண்டஅளவு கடந்தபக்தியினால் இரண்டுசிவலிங்கப்ஸ்தாபித்து நாடோறும் பூசைசெய்துவந்தனன். அவ்விருசிவலிங்கங்கட்கும் வரசிங்கநாதர் சத்தியார்த்தநாதர் என்றிருபெயரிட்டு மகிழ்ந்து



179458

பூசித்துவருங்கால், சிவபெருமான், ஒருநாள் அரசன்முன்தோன்றி 'நீ செய்யும் பூசைக்குப் பெரிதும் மகிழ்ந்தோம். நீ முத்திநகரங்கள் ஏழிற்குஞ் சென்று அங்குள்ள தீர்த்தங்களில் நீராடி வருக' என்றுரைத்தருளினர். இறைவன் அருளியவாறே அரசன் தனது பரிவாரங்களோடு தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டனன். அவன், முதலில், வடதிசையிலுள்ள அயோத்திமாநகரத்திற்குச்சென்று, சரயுநதியில் நீராடினன். அப்போது அந்நகரத்தையாளும் சுசிரமன் என்னும் அரசன், தெய்வீகனையன்புடன் எதிர்கொண்டழைத்துத் தனது மாளிகைக்கு அழைத்தேகினன். பின்னர், அம்மன்னன் தனது அரிய குமாரத்தியாகிய கனகை யென்னுங் கன்னியைத் தெய்வீகனுக்கு விதிப்படி மணஞ்செய்து கொடுத்தனன். பிறகு, தெய்வீகன் அவ்விடத்தினின்றும் புறப்பட்டு அவந்தி நகரஞ்சென்று, அங்குள்ள தீர்த்தத்தில் நீராடிச் சிவபெருமானை யருச்சித்து வணங்கினன். அவன் வந்திருப்பதை யறிந்த அவந்தியரசன் விசாலாக்கன் என்பான் அன்புடன் அவனையழைத்துச் சென்று, தன் மகள் கலாவதி என்பாளை வேதவிதிப்படி விவாகஞ்செய்து கொடுத்தனன். உடனே தெய்வீகன் அந்நகரத்தினின்றும் நீங்கித்துவாரகைக்குச் சென்று, அங்கேயுள்ள தீர்த்தத்தில் நீராடி, இறைவனடியை வணங்கினன். அந்நகரத்தரசனாகிய சந்திரவன்மன் என்பான் தெய்வீகராசனை யழைத்துச்சென்று, தன் குமாரத்தியாகிய உற்பலமாலை என்பாளைத்திருமணஞ் செய்து கொடுத்தனன்.

அதன் பின்னர் மன்னர்பெருமானாகிய தெய்வீகன் அவ்விடத்திலிருந்து புறப்பட்டு, வடமதுரைக்குச்சென்று, அங்குள்ள தீர்த்தத்தில் நீராடிக் கடவுளை வணங்கினன். அந்நகரத்திற்கரசனாக விளங்கிய விசயவர்மன் என்பவன், நீராட வந்த அரசனை அழைத்தேகித் தன் புத்திரியாகிய கமலக்கன்னி என்பவளை விவாகஞ்செய்து கொடுத்தனன். பிறகு அரசன் அவ்விடத்தினின்றும் நீங்கி, மாயை என்னும் மாநகரத்திற்குப்போய், அவ்விடத்திலுள்ள தீர்த்தத்தில் முழுகி, இறைவனடியை வணங்கி, அந்நகரத்தரசன் மாசேனன் என்பான் விரும்பியபடி அவன் மகளாகிய உற்பலலோசனை என்பாளை மணந்து கொண்டனன். பின்னர், மன்னர் மன்னனாகிய தெய்வீகன் காசிக்குச்சென்று கங்கையில் நீராடி, விசுவேசரைப் பூசித்து, அந்நகரத்தரசன் வேண்டியவாறு அவன் மகள் பிரபை என்பாளை மணஞ்செய்து

179458
Q23.58:2114 FR
N18

கொண்டு, பிரயாகை, கயை முதலிய நகரங்களுக்குப்போய் அவ்விடங்களிலுள்ள தீர்த்தங்களில் நீராடித் தர்ப்பணஞ்செய்துவிட்டு, அரிய சிறப்புக்கள் வாய்ந்த நகரமாகிய காஞ்சிக்குப்போய் சேர்ந்தனன், அங்கேயுள்ள பல தீர்த்தங்களிலும் நீராடி, ஒப்பற்றமாவின்கீழ் எழுந்தருளியுள்ள ஏகாம்பரேசரை அருச்சித்து வணங்கினன். அப்போது அந்நகரத்திற்கரசனாயிருந்த பேரிரதன் என்பான், தீர்த்தயாத்திரையின் பொருட்டு அங்கே வந்துள்ள அரசனாகிய தெய்வீகனை யழைத்துச்சென்று; தன் அரும் பெறற் குமாரத்தியாகிய கமலாவதி என்பாளை வேதவிதிப்படி விவாகஞ் செய்துகொடுத்தனன்.

பின்னர், அரசன் ஆங்காங்கு எதிர்ப்பட்ட தீர்த்தங்களில் நீராடிச் சிவனடியார் பலர் சூழ்ந்துவரவும் பின்னே தனது மனைவியர் எழுவரும் சிவிகையில் வரவும் திருக்கோவலூரை யடைந்தனன். அப்போது அந்நகரத்திலுள்ள ஜனங்களும் அமைச்சர் முதலானோரும் அரசனது வருகையை யறிந்து, பல வகை வாத்தியங்கள் முழங்க அரசனை எதிர்கொண்டழைத்தனர். அரசன் தன் நகரத்திற்குச்சென்று அங்கே கோயில்கொண்டு விளங்குகிற வீரட்டேசரது திருவடிகளை வணங்கி வாழ்ந்து வந்தனன்.

(தெய்வீகன் சத்தபுரி சென்ற சருக்கம் முற்றும்.)

---

## தெய்வீகராஜன் அங்கவை சங்கவை மணச்சருக்கம்.

நமது இந்தியாவின் தென்கிழக்கிலுள்ளதும் சைவசமயாசாரியரால் பாடப்பெற்ற திருக்கேதீச்சுரம், திரிகோணமலை முதலான சிவஸ்தலங்களைத் தன்னகத்துக்கொண்டு விளங்குவதும், பலவளங்கள் பொருந்தியுள்ளதுமாகிய இலங்கைத்தீவிலே கண்டிமாநகரைத் தலைநகரமாகக்கொண்டு பாரிசாலன் என்னும் ஓரரசன் ஆட்சிபுரிந்து வந்தினன். அம்மன்னன் தன் வெண்கொற்றக்குடையின் கீழ்த் தங்கியுள்ள குடிகளெல்லோரும் எவ்வகைத்துன்பமும் இன்றி இன்புறுமாறு செங்கோல் செலுத்திவரும் நாளிலே, புத்திரப் பேறின்மையால் மிகவும் மனம் வருந்தி முதன் மந்திரியை யழைத்து 'இவ்வுலகிற் புத்திரப் பேறடையாதார் சுவர்க்கம் புகப்பெறார் என்பர் அறிஞர்; அன்றியும் புத்திரனில்லாதவர் இம்மை



யின்பத்தையும் அனுபவித்தற்கியலாதவராகின்றனர். அவர்கள் பொன்னுடையரேனும் புகழுடையரேனும் மற்றென்னுடையரேனும் அவற்றால் அடையும் பயன் யாது? அவர்கள் கண்ணில்லாச் சரீரத்தையும் சந்திரனில்லா வானத்தையும் போன்றவரேயாவர் ஆதலால், இனி இத்தேசத்தை யான் ஆட்சி புரியேன். இதனை இப்போதே யுன்னிடத்தில் விட்டுவிட்டேன் நீ என்னைப்போலவே குடிகளிடத்து மிக்க அன்புடன் ஆட்சிபுரிந்து வருவாயாக. இனி, யான் என் மனைவியோடு கானகஞ்சென்று, மறுமைப்பயனை யளிப்பதாகிய அரிய தவத்தைச் செய்து காலங்கழிப்பதாக எண்ணியுள்ளேன்' என்றுகூறினர். அவற்றைக்கேட்ட முதன்மந்திரி அரசனை நோக்கி 'மன்னர்மன்ன! யான் கூறுவதைச் சிறிது செவிசாய்த்துக் கேட்டருளல் வேண்டும். கானகஞ் சென்று தவமியற்றல் சாதாரணமான விஷயமன்று. தாங்கள் செய்யப்புகுந் தவத்தினால் தங்கள் சரீரம் மிகவும் வாட்டமுறுமே; பனியாலும் வெயிலாலும் மழையாலும் துன்புறுமே; இயல்பாகவே மெல்லிய சரீரம்வாய்ந்த நமது அரசியார் அத்தகைய துன்பங்களை எங்ஙனம் சகிப்பர்? ஆதலால் அவ்வெண்ணத்தையொழித்துக் கதிர்காமத்தின்கண் எழுந்தருளியுள்ள குமாரவேள் திருவடிகளுக்கு நாடோறும் அன்போடு வழிபாடியற்றிவரின் தாங்கள் புத்திரப் பேறெய்தல் திண்ணம். அதற்குச் சிறிதும் ஐயமின்று.' என்று கூற, அரசன் அகமகிழ்ந்து 'அவ்வாறே செய்வோம்' என்றுரைத்து அதற்குடன்பட்டனன்.

பின்னர், அரசர் பெருமானாகிய பாரிசாலன், அமைச்சர்களை யனுப்பிக் கதிர்காமத்திலுள்ள குமரர்கோட்டத்திற்குத் திருப்பணி செய்வித்தனன். அதன்பிறகு அம்மன்னன் தன் மனைவியோடு அங்குச்சென்று, குமரவேள் திருவடிகளை நாடோறும் அன்புடன் வழிபட்டுவந்தனன். இங்ஙனம் பூசித்துவரும் நாளிலே, ஒருநாள் குமாரதெய்வம் அரசன் கனவிற்றோன்றி 'அரசனே, நீ இப்பிறப்பில் புத்திரப்பேறெய்தல் இயலாததாகும்; ஆயினும் இருபெண்மக்கள் பிறப்பர். அப்பெண்மணிகளால் உன்குடியும் சிறப்பெய்தும்; நீயும் பெருமையடைவாய்.' என்று திருவாய்மலர்ந்தருளினர். உடனே அரசன் விழித்துக்கொண்டு குமாரதெய்வத்தின் திருவருளை எண்ணியெண்ணி நெஞ்சம் நெக்குருகியாடினன்; பாடினன்; அகமகிழ்ந்தனன். அதனால் அப்பெருமான்பால் பக்தி பன்மடங்கு அதிகரிக்க, தன்மனைவியுடன் நாடோறும் அவ்விறை

வனை வழிபட்டுவந்தனன். சிலமாதங்கள் சென்றபின்னர் அம்மன்னன் மனைவி கருப்பமுற்று இரண்டு பெண்மக்களைப்பெற்றனள். முதியோரால் அங்கவை சங்கவை என்றுபெயரிட்டழைக்கப்பெற்ற அம்மக்களிருவரும் வர்ஷையின் இளங்குருத்தெனவும் பிறைமதி போலவும் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்வாராயினர். இஃதிங்ஙனமாக அவர்கட்குக் கல்வி கற்றற்குரிய பருவம் வந்தது. சிற்றுயிர்க்குற்ற துணையாகிய கல்வியினுஞ் சிறந்தபொருள் இவ்வுலகில் வேறில்லையென்பதை யறிந்த மன்னன் தான் வரங்கிடந்து பெற்ற பெண்மணிகளை புலவர்பெருமானாகிய கபிலரிடத்தில் கல்விகற்கும்பொருட்டு விடுக்க, அவர்கள் கசடறக் கற்றுத் தேர்ந்து நல்லிசைப்புலமை மெல்லியலாராக விளங்க, அரசன் பெற்ற நாளினும் பெரிது சந்தோஷிப்பானாயினன்.

இஃதிங்ஙனமாக, அப்பெண்கள் பிறந்தபோதே சமஸ்தான சோதிடர்கள், கிரகங்களின் நிலையை யாராய்ந்து அரசனிடஞ் சென்று, அப்பெண்கள் பிறந்தமையால் இராஜ்ஜியத்தைப் பகைவர்கள் கைப்பற்ற நேருமென்றும், அவர்களை அரண்மனையில் வைத்துக்கொள்ளாது கானகத்திற்கு அனுப்பிவிடின் அத்தகைய தீங்கு நேரிடாதென்றும் கூறியிருந்தனர். அரசன் பலவருடங்களாக மக்களின்றி வருந்தி முருகவேளின் திருவருளினால் அப்பெண்களைப் பெற்றவனாதலாலும் அப்பெருமான் அம்மக்களால் அவன் பெருமையடைவானென்று கூறியிருத்தலாலும் சோதிடர் கூறியவற்றிற்குச் சிறிதும் உடன்படாதவனாயிருந்தனன். அரசன் நிமித்திகர் கூறியவற்றைப் பொருட்படுத்தாமல் தன் மனைவிமக்களோடு பெருமகிழ்வுற்று ஆட்சிபுரிந்து வரும்நாளில், வீரசேனன் என்னும், மறுபுலத்தரசன் ஒருவன் படையெடுத்துச் சென்று, பாரிசாலனது நாட்டைக் கைப்பற்றிக்கொண்டனன். ஆதலால் அம்மன்னன் தன் மனைவிமக்களோடு இந்தியாவிற்குச் சென்று, ஒருகாட்டில் பர்ணசாலையமைத்து அதில் வசித்து வந்தனன்.

இங்ஙனம் கானகத்தில் வசித்துவரும் நாளிலே நமது தமிழ் மூதாட்டியாராகிய ஔவைப்பிராட்டியார், ஒருநாள் பெருமழையில் நனைந்து அப்பர்ணசாலைக்குச்சென்று அவர்கட்கு நேர்ந்த பெருந்துன்பத்தை யறிந்து மனம் நொந்து, அன்றிரவு அங்குத் தங்கியிருந்தனர். அப்போது பாரிசாலனது மகளிர் இருவரும் ஆடைகொண்டு ஒற்றி, ஈரம்போக்கித் தீமூட்டிக் குளிர் நீக்கித்



தம்மிடத்திருந்த நீலச் சிற்றாடை யொன்றையும் பணிவோடு கொடுத்தனர். அப்போது ஔவையார் அகமகிழ்ந்து,

"பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரி கொடுத்த களைக்கொட்டும்—சேரமான்
வீரா யெனவழைத்த வாய்மையு மிம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்." என்னும் பாடலைக்கூறினர்.

அதனைக்கேட்டு மகிழ்ச்சியெய்திய அம்மங்கையர் 'அம்மையே, ஒன்றுக்கும் பற்றாத சிறியோமாகிய எங்களை ஒரு பொருளாகக் கருதிவந்த உங்கள் பெருந்தன்மையை எத்தன்மைத்தென்பேம். எமக்குக் கிடைத்த இந்த அற்பவுணவை யிகழாமல் உண்ணவேண்டுகிறோம்' என்றுகூறி, இலைக்கறியைப்படைத்தனர். கைப்புடைய வேம்பாயிருப்பினும் அன்புடன் அளிப்பது அமுதமேயாதலால் அவ்வுணவை நா மணக்கவுண்டு,

"வெய்தா நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தா னளாவி நிறையிட்டுப்—பொய்யே
யடகென்று சொல்லி யமுதத்தை யிட்டார்
கடகஞ் செறியாதோ கை."

என்னும் பாடலைப்பாடி மகிழ்ந்தனர்.

பின்னர் ஔவையார் அப்பெண்களை நன்னிலையில் நிறுத்த வெண்ணியவராய்த் திருக்கோவலூரிலுள்ள தெய்வீகராசனுக்குத் திருமணஞ் செய்துகொடுக்கவேண்டுமென்று பாரிசாலனிடங்கூறி விட்டு அந்நகரத்திற்குச்சென்று, தெய்வீகனுக்குப் பாரிசாலனது சரித்திரத்தைக்கூறி, அவன் மகளிர் இருவரையும் மணஞ்செய்துகொள்ளும்படி வற்புறுத்தியுரைத்தனர். அதனைக்கேட்ட தெய்வீகன், ஔவையாரை நோக்கித் 'தாயே, நான் தமிழ்வேந்தர் மூவருடைய மகளிரை முன்னரே மணஞ்செய்துள்ளேன். ஆகையால் அவ்வேந்தர் மூவரது அபிப்பிராயத்தை யறிந்த பின்னரே தங்கள் விருப்பத்திற் கிணங்குதல் முறையாகும்' என்று கூற, ஔவையார் அரசனை நோக்கி 'உன்னுடைய மாதுலர்களாகிய சேர சோழ பாண்டியரை யழைத்து, இவ்விவாகத்தை முடிக்கச் செய்வேன். அவ்வாறு செய்யின் உனக்கு அஃது உடன்பாடு தானே' என்று வினவினர். அதனைக்கேட்ட அரசன் ஔவையாரை வணங்கித் 'தாயே' தங்கள் திருவருளிதாயின் யான் யாதுரைக்கக்கூடும்? தாங்கள் விரும்பியவாறே செய்தருள்க'

என்றனன். உடனே ஔவையார், தமிழ் வேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்க்குத் திருமணவோலை எழுதற்குத் தன் வழிபடுகடவுளாகிய விநாயகரை மனத்தில் தியானித்து,

'ஒருகொம் பிருசெவி மும்மதத்து நால்வாய்க்
கரிபுரிவை கங்காளன் காளாய்—பரிவுடனே
கண்ணால வோலை கடிதெழுத வாராயேல்
தன்னாண்மை தீர்ப்பேன் சபித்து.'

என்னுஞ் செய்யுளைக் கூறியழைத்தனர். ஔவையார் வேண்டியவாறே விநாயகர் எழுந்தருளினர்.

பின்னர் ஔவைப் பிராட்டியார், முருகவேளை மனத்தில் நினைத்து,

'சென்றுவர்க் கன்னியரைத் தெய்வீகன் மன்றலியல்
சுந்தரவோ லைக்கிர று தோளசையக்—கந்தன்
மயிலேறி யீங்குவா வாழ்கதிரோன் றோன்றி
வெயிலெழா முன்னே விரைந்து.'

என்னும் பாடலையுரைத்து அழைத்தனர். அவ்வாறே முருகவேள் மயின்மீதெழுந்தருளினர். பிறகு, தமிழ் மூதாட்டியாராகிய ஔவையார், சேர சோழ பாண்டியரைத் திருமணத்திற்கு அழைக்கும்பொருட்டு,

'சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவ
லூரளவுந் தான்வருக வுட்காதே—பாரிமக
ளங்கவையைக் கொள்ள வரசன் மனமியைந்தான்
சங்கவையை யுங்கூடத் தான்.'

"புகார்மன்னன் பொன்னிப் புனனாடன் சோழன்
றகாதென்று தானங் கிருந்து—நகாதே
கடிதின் வருக கடிக்கோவ லூர்க்கு
விடியப் பதினெட்டா நாள்."

"வையைத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியவீ ரொன்பானா
ளீண்டு வருக விசைந்து."

என்னுஞ் செய்யுட்கள் வரையப்பெற்றுள்ள மணவோலைகளை அவ்வரசர் மூவர்க்கும் தூதுவர் மூலமாக அனுப்பினர். அத்திருமணவோலைகளைப் பெற்ற அரசர் மூவரும் தத்தம் சேனைகளோடு திருக்கோவலூர்க்குச் செல்ல நிச்சயித்தனர். ஔவையார் தமிழ் வேந்தர்கட்குத் திருமணவோலை யனுப்பியபோதே மற்றதேசத்



தரசர்கட்கும் அதனை அறிவிக்குமாறு தூதுவரையனுப்பியிருந்தனர். அவ்விஷயத்தையறிந்த தெய்வீகன், தமிழ் மூதாட்டியாரை வணங்கி, 'அன்னையே, என் விவாகத்தின்பொருட்டு இவ்வுலகிலுள்ள மன்னர் பலரும் இங்குவருவாராயின், அவர்களை வறியவனாகிய யான் எவ்வாறு உபசரித்தல் கூடும்?' என்றுரைத்து மிகவும்வருந்தினான். அப்போது அம்மையார் நகைத்து 'மைந்த, வீரட்டேசரது திருவருள் என்றும் நமக்கிருக்கின்றமையின், ஒரு குறைபாடும் நேரிடாது. ஆதலால் சிறிதும் வருந்தேல்' என்று கூறி, வருணனை மனத்தில் நினைத்து ஒரு முகூர்த்த நேரம் பொன்மாரி பெய்யுமாறு,

'கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவற்—றிருமணத்து
முன்மாரி பெய்யும் முதுமாரி யைமாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி.'

என்னும் பாடலைக் கூறினர். அம்மையார் வேண்டியவாறே புட்கலாவர்த்தம் என்னும் மேகம் திருக்கோவலூரைச் சூழ்ந்துள்ள ஒரு காததூரம் பொன்மழை பெய்தது. அதனைக் கண்ட அரசன் அளவிலா மகிழ்ச்சியுற்று, அமைச்சர்களையழைத்து நகரையலங்கரிக்குமாறு உத்தரவு செய்தனன். அவ்வாறே பல அரசர்களும் தங்கிவசித்தற்குப் பல மாளிகைகள் அமைக்கப்பட்டன. கண்டோர் 'இஃது இந்திரன் நகரமாகிய அமராவதியோ' என்று சந்தேகிக்கும்படி நகரம் மிக்க அழகாக அலங்கரிக்கப்பெற்றது. அமைச்சர்கள் நகரை யலங்கரித்ததை அரசனிடத்து அறிவித்த பின்னர் அரசன் மகிழ்ச்சியுற்று, ஔவையாரை வணங்கித் 'தாயே, என் விவாகத்திற்கு வருவோரை உண்பித்தற்குச் செந்நெல் போதாதே; என் செய்வேன்' என்று கூறி வருந்த, அம்மையார் 'தெய்வீக! நீ வருந்தவேண்டாம், உன்னுடைய நாடு முழுதும் அரிசியாகவே விளையும்படி யாம் செய்வோம்' என்றுரைத்து,

'தாய்நிகரும் பெண்ணைத் தனிநாட்டுப் பண்ணையெலாம்
பாய்பயிர்க ளுண்டாய்ப் பகரரிசி—யாய்விளைய
விண்ணோ ரிடாகற்றி மெய்யமிழ்தீ வீரட்ட
வண்ணலே நீயருளு வாய்.'

என்ற பாடலைக்கூறினர். உடனே கண்டோர் அதிசயிக்குமாறு வயல்களில் அரிசியே விளைந்தது. அன்றியும் பருத்திச் செடிகளெல்லாம் வஸ்திரங்களாகக் காய்க்குமாறு

'நாவில் புகழ்நார சிங்கன் றனதுகடிக்
கோவி லருட்சேர்ந் துயர்ந்ததிருக்—கோவற்
கருத்தி யுடனே யடைவோர்கட் கேற்பப்
பருத்திகலை யாழ்க்காய்க்கற் பாற்று.'

என்ற செய்யுளைப் பாடியருளினர். அவ்வாறே பருத்திச் செடிக ளெல்லாம் யாவரும் வியக்குமாறு ஆடைகளாகக் காய்த்தன.

நிற்க, அரசர்களெல்லோரும், தத்தம் பரிவாரங்களோடு, திருக்கோவலூரை யடைந்து, தங்கட்கென்று அமைக்கப்பெற் றிருந்த மாளிகைகளில் இனிது தங்கியிருந்தனர். அப்போது தெய்வீகராசன் ஔவையாரை வணங்கி, 'அடியேனை ஒரு பொருட்டாக மதித்துப் பல அற்புதமான காரியங்களைச் செய் தருளிய அன்னையே, இன்று இங்கே தங்கியுள்ள அரசர் குழாங் கட்கு, நெய் தயிர் பால் முதலியவற்றை அளித்தற்கியலாதவனா யிருக்கின்றேன். யான் என் செய்வேன்' என்றுரைக்க, ஔவை யார் 'மனந்தளரவேண்டாம், அதற்குரிய காரியத்தையாம் செய் வோம்' என்றுகூறி, ஏவலரை யழைத்துப் 'பெண்ணையாற்றிலே நெய் பால் தயிர் முதலியன ஓடிவரும்; அவற்றைத் தனித்தனி யாகக் கொண்டுவருக' என்று உத்தரவருளி,

'மூத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்த்து
தத்திய நெய்பால் தலைப்பெய்து—குத்திச்
செருமலை தெய்வீகன் றிருக்கோவ லூர்க்கு
வருமளவுங் கொண்டோடி வா.'

என்ற பாடலை யுரைத்தருளினர். அவ்வாறே திருக்கோவலூர் வரைக்கும் அவ்வாற்றில் நெய் பால் தயிர் முதலிய ஓடிவந்தன. அவற்றைக்கண்டோர் பலரும் ஔவையாரைத் தெய்வத்திருவருள் வாய்ந்த பெரியார் என்றுரைத்து அவர்கள் மலரடியைப் பன்முறை வணங்கி மகிழ்ச்சியுற்றனர்.

பின்னர், தமிழரசர் மூவரும், ஔவையாரையும் குகமுனிவ ரையும் வணங்கித் திருமணத்தை ஆரம்பித்தற்குத்தரவு கேட்டனர். அவர்கள் உத்தரவருளிய வுடனே, தெய்வீகனையும் அங்கவை சங்கவை என்னும் மணமகளிர் இருவரையும் நீராடுவித்து மணக் கோலத்தோடு பல்வகைப்பட்ட வாத்தியங்கள் ஒலிக்க விவாக மண்டபத்திற்கு அழைத்துச் சென்று, மணமேடையில் அமர்த்தி னார்கள்.



பல்வகை வாத்தியங்கள் ஒல்லென்றொலிக்க, அந்தணர் ஆசி கூற, கற்புடைப்பெண்கள் பல்லாண்டுகூற, சிங்கள மன்னனாகிய பாரிசாலன் தன் மகளிர் இருவரையும் தெய்வீகனுக்கு வேதவிதிப் படி அக்கினி சாட்சியாக நீரொடு நல்கினன். அச்சமயத்து, ஔவையார் சொற்படி சேர சோழ பாண்டியர் மூவரும் மணமக னுக்கும் மணமகளிர்க்கும், மணமிடுதற்குச் சென்றனர். அப் போது ஔவையார் உலகெலாம் புகழுமாறு மணப்பந்தரிலுள்ள ஒருபனந்துண்டம் பங்குக்கு மும்மூன்று பழம் கொடுக்கும்படி

"திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிடவந்துநின்றார் மணப்பந்தலிலே
சங்கொக்க வெண்குருத்தீன்று பச்சோலை சலசலத்து
நொங்குக்கண் முற்றியடிக்கண் கருத்துநுனிசிவந்து
பங்குக்குமூன்று பழந்தரவேண்டும் பனந்துண்டமே."

என்னும் பாடலைக் கூறினர்.

உடனே, அப்பனந்துண்டம் சிறிதும் தாமதமின்றித் தழைத் துக்காய்த்துப் பங்குக்கு மும்மூன்று பழங்களை யளித்தது. அத னைக்கண்டோர் யாவரும் மிகவும் ஆச்சரியமுற்று 'முற்காலத்தில் திருஞானசம்பந்தசுவாமிகள் ஆண்பனையைப் பெண்பனையாக்கிய விஷயத்தை யறிந்து அதிசயித்தோம் இன்று நம் அன்னையார் வெட்டுண்ட பனந்துண்டம் பழமளிக்குமாறு செய்தருளியதைக் கண்டபோது, முற்காலத்தே நடைபெற்றது ஓர் ஆச்சரியமான விஷயமன்றென்று நினைக்கின்றோமென்று மகிழ்வோடு கூறினார்கள். பிருகு குகர் முதலான முனிவர்களும் தமிழரசர்களும் ஔவை யாரைப் புகழ்ந்தார்கள்.

பின்னர், மணமகனும் மணமகளிரும் ஔவைப்பிராட்டியா ரது திருவடிகளை வணங்க, அவ்வம்மையார்

'ஆயன் பதியி லான்பதிவந் துற்றளக
மாயனூ துங்கருவி யானாலும்—தூயமணிக்
குன்றுபோல் வீறு குவிமுலையார் தம்முடனீ
யின்றுபோ லென்று மிரு.'

என்னுஞ் செய்யுளைக் கூறிவாழ்த்தினர். திருமணம் முடிவுற்ற பின்னர் அத்திருநகரில் தமிழ்வேந்தர் மூவரும், தத்தம் பெயரால் மூன்று சிவலிங்கங்கள் தாபித்துப் பூசை செய்துவிட்டு, ஔவை

யார் குகர் முதலானோரிடத்து உத்தரவு பெற்றுக்கொண்டு தத்தம் நாடுகளுக்குச் சென்றனர்.

பிறகு பாரிசாலன் ஔவையார் திருவடிகளை வணங்கி 'அன்னையே, உலகம் வியக்கும்படி என் புத்திரிகளைத் தெய்வீக ராசனுக்குத் திருமணஞ் செய்துகொடுத்த தங்கட்குயான் யாது கைம்மாறு செய்யவல்லேன். என் நாட்டைப் பகைவர்கள் கைப் பற்றிக்கொண்டமையின், யான்மிக்க வறுமையுற்று வருந்துகின்ற தைத் தாங்கள் அறிவீர்கள். ஆதலால், அந்நாட்டை மீண்டும் அடையுமாறு திருவருள்புரிக' என்று வேண்டினன். அவன் கூறியவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த ஔவையார் கருணை கூர்ந்து தெய்வீகராசனை யழைத்து 'நீ சிங்களத்திற்குச் சென்று, அங்கே இப்போது அரசியற்றும் பகைவனைப் போரில் செயித்து, அந்நாட்டை உனது மாதுலனாகிய பாரிசாலனுக் களித்து, அவ னுக்கு முடிசூட்டிவருக. பதினெண்புவிக்கும் அரசனாய் உனது குலந்தழைக்க நீ நெடுங்காலம் வாழ்க' என்றுரைத்து,

'பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி யாடையா
மக்காள் வயலரி சியாகுமூ—ரெக்காளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனி
லோங்குந் திருக்கோவ லூர்.'

என்னுஞ் செய்யுளால் திருக்கோவலூரைப் புகழ்ந்து, பாரிசாலனை நோக்கி 'நீ உனது நாட்டை விரைவில் பெறுவாய்' என்று கூறித் தம்மிடத்திற்குச் சென்றனர்.

தெய்வீகராசன் அங்கவை சங்கவை திருமணச்
சருக்கம் முற்றும்.

---

## தெய்வீகன் அரசாட்சிச் சருக்கம்.

தெய்வீக மன்னன் தன்னுடைய மனைவியர் இருவரோடு நீதிதவறாது செங்கோலாட்சி செய்துவரும் நாளில், தமிழ் மூதாட்டியாராகிய ஔவையார் கூறிப்போன விஷயம் நினைவிற்குவர, அரசன் அதனை நிறைவேற்றும் வண்ணம், நால்வகைப்பட்ட சேனைகளும் ஆரவாரங்களோடு தன்னைச் சூழ்ந்துவர, முனிபுங்கவராகிய குகரது ஆசியும் சிவபெருமான் திருவருளுமே தனக்குற்ற துணையாகக்கொண்டு, பாரிசாலனது பகைவனாகிய வீரசேனனென்பான்



ஆட்சிபுரியும் சிங்களதேசத்தை நோக்கிப் புறப்பட்டனன். அங்ஙனம் புறப்பட்ட மன்னன், இடையேயுள்ள கடலைத் தாண்டி, இக்காலத்தோரால் இலங்காதீபமென்று அழைக்கப்படும் சிங்கள தேசத்திற்கும் போய்ச்சேர்ந்தனன். பின்னர், தெய்வீகன் தனது அமைச்சருள் ஒருவனாகிய சமயதந்திரன் என்பானை யழைத்து, 'நீ வீரசேனன்பாற் சென்று, பாரிசாலனுக்குரிய இத்தேசத்தை அவ்வரசனிடம் விடுவையேல் உயிருடன் வாழலாம். அன்றேல் உன்னுடைய சேனையுடன் நீ போர்க்களத்தில் மடிவது நிச்சயம். என்றுகூறி, அவன் உளிரப்பதைக் கேட்டுவருக' என்று தூதனுப்பினன். அவ்வாறே அவன் சென்று வீரசேனனிடம் அவற்றைக் கூறலும், அவ்வரசன் மிகக்கோபங்கொண்டு 'உன்னுடைய அரசன் என்னை எளியனென்று எண்ணினன்போலும். ஆயினும் வீரமிருப்பின் போர்செய்தற்கே வாலாம்' என்று சொல்லியனுப்பினன்.

பின்னர் இருவர் சேனைகளும் போர்க்குப் புறப்பட்டன. போர்க்கெழுந்த சேனைகளின் முழக்கம் இடிமுழக்கமோ கடலொலியோவென் றெவரும் ஐயுறுமாறிருந்தது. யானைகளோடு யானைகள் எதிர்த்துப் போர்புரிந்தன. குதிரைகளும் அவ்வாறே எதிர்த்துப் போர்செய்தன. இரதாதிபதிகளோடு இரதாதிபதிகள் எதிர்த்தனர். எங்கும் போர்ப்பறைகள் முழங்கின. பேரிகைகள் ஆர்த்தன. சின்னங்கள் ஒலித்தன. சந்நியாசிகளெனவும் பௌத்தர்களின் குருக்களெனவும் தீர்த்தயாத்திரைக்கேகும் அந்தணர்களெனவும் கூறிக்கொண்டு பயந்து புறங்காட்டி யோடினோர் பலராவர். இவ்வாறு நிகழ்ந்த பெரும் போரில் தெய்வீகன் வீரசேனனைத் தன்னுடைய வாளால் வெட்டி வீழ்த்தினான். அதனை யுணர்ந்த அத்தேசத்தவர் பலரும் பெருஞ் சந்தோஷமுற்றனர். தனது மருமகனது போர்வீரத்தையும் ஆண்மையையுங் கண்ட பாரிசாலன் அகமகிழ்ந்து அவனைத் தழுவிக்கொண்டனன். பின்னர் அரசன் தன் அரிய மாமனாகிய பாரிசாலனை அரண்மனைக் கழைத்துச் சென்று, ஜனங்கள் எல்லோரும் மனமகிழவும் பெரியோர் பலரும் ஆசிகூறவும் அவனுக்கு முடிசூட்டினான்.

சில நாட்களுக்குப் பின்னர், தெய்வீகன் அத்தேசத்துள்ள சிவாலயங்களைத் தரிசிக்கவேண்டித், திருக்கேதீச்சுரம், திருக்கோணமாமலை, முதலிய சிவஸ்தலங்களையும் கதிர்காமம் முதலிய சுப்பிரமணிய ஸ்தலங்களையும் பக்தியுடன் தரிசித்து மீண்டும் தன் மாதுலன் அரண்மனைக்கேகிச் சின்னாள் தங்கியிருந்தனன்.

பிறகு அவனிடத்து விடைபெற்றுக்கொண்டு, தன் சேனையோடு திருக்கோவலூரை யடைந்து, குகமுனிவரது பாதங்களை வணங்கி, அங்கிருந்து அந்நாட்டை ஆட்சிபுரிந்து வந்தனன். அங்ஙனம் ஆட்சிபுரிந்து வரும் நாளிலே அமைச்சர் முதலானோர் தம்மரசனுக்குப் பதினெண் புவிக்குஞ் சக்கரவர்த்தி யென்று முடிசூட்ட வேண்டுமென்று குகமுனிவரிடங் கூறினார்கள். அம்முனிவரது உத்திரவின்படி உலகின் கண்ணுள்ள அரசர்கள் எல்லோருக்கும் நிருபங்கள் அனுப்பப்பட்டன. அந்நிருபங்களைக்கண்ட அரசர்கள்; தாம் தெய்வீகனுக்குச் செலுத்தவேண்டிய கப்பங்களையுங் கொண்டு, திருக்கோவலூரை நோக்கிக் கடல்போலாரவாரிக்கும் தம் சேனையோடு புறப்பட்டனர். இஃதிவ்வாறாக முடிசூட்டுத் திருவிழாவின் நிமித்தம் தலைநகரங் கண்டோர்வியக்குமாறு அலங்கரிக்கப்பட்டது. பலதேயங்களினின்றும்வரும் அரசர்கள் தங்கி வசித்தற்கு அழகிய பலமாளிகைகள் அமைக்கப்பெற்றன. முடிசூட்டு விழாவிற்குச் சென்றுள்ள அரசர்கள் தத்தமக்கு அமைக்கப்பெற்றுள்ள மாளிகைகளிலே இனிது அமர்ந்திருந்தனர்.

சோதிடர்கள் கணிக்கப்பெற்ற சுபதினத்தன்று, கங்கை முதலாய ஏழு புண்ணிய நதிகளினும் கொண்டுவரப்பெற்ற புனித நீரால், பிருகு முதலான முனிவர்கள் அரசனுக்கு அபிடேகஞ் செய்து பல்வகைப்பட்ட மங்கள வாத்தியங்கள் ஒலிக்க, கற்புடை மாதர்கள் பல்லாண்டுபாட, எவ்வுயிர்க்குஞ் செந்தண்மைபூண் டொழுகுவோராகிய அந்தணர் ஆசிகூற 'சிங்களம் முதலிய பதினெண் புவியையும் நீயாளுக!' என்று கூறி முடிசூட்டினர்கள். முடிசூட்டப்பெற்றுச் சிங்காசனத்தில் இனிது வீற்றிருந்த தெய்வீகனைப்பார்த்த அரசர்களும் மற்றையோரும் மனமகிழ்ந்து 'இவ்வரசர்பெருமானுக் கொப்பாகக் கூறத்தக்கார் இவ்வுலகின் கண் ஒருவரும் இல்லை. ஆனால் இந்திரன், பிரமன், விஷ்ணு முதலான தேவர்களை ஒப்பிடலாம்,' என்றனர். அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த குகமுனிவர் தெய்வீகனுடைய வரலாற்றை அவர்கட்கு முற்றிலுங் கூறுவாராய்

இனுங்கேண்மி னித்தலத்தெம் மிறையருளின் மலிவாலே
முனமிவன்மஞ் சரியுடையான் முடிவிலருட் கடலுடையா
டனைமகளாய்ப் பெறவுடையான் சங்கான்கைக் கிவுடையான்
பினமனவிற் பிறப்புடையான் பின்னடையு மியற்கேற்ப.



பன்னிருமாலைகளுடையான் பதினெட்டுக் கொடியுடையான்
மின்னுவா டனுவுடையான் மேழிபைம்பொன் முடியுடையான்
மன்னுபச்சைப் பரியுடையான் மார்பிடைமுந் நூலுடையான்
துன்னுமறை கலையுடையான் சோதியருள் பெயருடையான்.

வழுதிமுதன் மூவரசர் வழங்குமுடி நாடன்சீர்
முழுதுநிறை கன்னியர்கள் மும்மூன்றாய்க் கொளுமுடையான்
பழுதிலிந்தி ராதியர்கள் பயமிரிவெற் றியையுடையான்
மழவிடைநம் பரனில்லம் வந்திரப்ப வீவுடையான்.

சத்தபுரி வேட்டுடையான் றனியவ்வை பாட்டுடையான்
நத்தமெனு நாடுடையான் நவினான்கு முடியுடையான்
பத்தொடிரு மனையுடையான் பாடைபதி னெட்டுடையான்
முத்தெறிபெண் ணையையுடையான் மூவாறு புவியுடையான்.

பேருடையான் புகழுடையான் பெரியோர்க டகவுடையான்
காருடைய காமுடையான் கதியுடையான் நிதியுடையான்
தாருடையா னளவில்விஞ்சை தமையுடையா னமையுடையான்
சீருடையான் றிருவண்ணா மலைமுதல திகழ்வுடையான்.

எக்குலமுந் தொழவுடையான் எவ்விருது களுமுடையான்
றிக்குவிசை யமுமுடையான் றிகழ்சைவ நெறியுடையான்
முக்குலக்கா ரணமுடையான் முடிவிறவ வலியுடையான்
மைக்குழலெம் பெரியநா யகியருளின் மைந்துடையான்.

என்று பெரியோர்கள் புகழ்ந்து கொண்டாடுதலால் 'இவனைப் பூலோகத்தரசன் என்று எண்ணுதல் தவறாகும்; நான்குமுடிகளோடு பன்னிருமாலைகளும் தரித்துக்கொண்டு, பதினெண்கொடிகளுடையவனாய்ப்பதினெண்புவிகளையும் ஆட்சிபுரியும் இத்தெய்வீகமன்னன், இவ்வுலகிற்கிடைத்தற்கரியனவாயுள்ள எல்லாவற்றையு முடையோனாயிருக்கின்றமையின், தெய்வீக நரசிங்கஉடையான் என்னும் பெயரெய்துதற் குரியனாயிருக்கின்றான் என்று கூறினர். அப்போது, ஆங்கிருந்த பிருகு முதலான முனிவர்கள் 'இத்தகைய பெருமைவாய்ந்த பெயர்பெறுதல் இந்திரன் பிரமன் முதலானோர்க்கும் அரிதாகும். ஆதலால், வீட்டேசரது திருவருளே இவ்வுருவென்று அறியக்கடவீர்' என்றுரைத்து மகிழ்ந்தனர். பின்னர் முடிசூட்டு விழாவிற்குச் சென்றிருந்த அரசர்களும், முனிவர்களும் தத்தம் இருப்பிடங்கட்குச் சென்றனர். பிறகு அரசன் தன்னாட்சியின்கீழ் வாழும் பல்லுயிர்களும் இன்புற்று வாழுமாறு பாதுகாத்துவந்தனன்.

தெய்வீகராசன் அரசாட்சிச் சருக்கம் முற்றும்.

## தெய்வீகராசன் புத்திரப்பேற்றுச் சருக்கம்.

நரசிங்க தெய்வீக உடையானென்று குகமுனிவரால் பெயரிடப்பெற்ற தெய்வீகன், திருக்கோவலூரிலிருந்து அவ்வாறு ஆட்சிபுரிந்துவரும் நாளிலே, அவன் மனைவியர் பன்னிருவருள் தமிழ் வேந்தரது மகளிராகிய காஞ்சனமாலை, பதுமாவதி, சண்பகமாலை என்ற மூவரும் கருவுற்று, மூன்று புதல்வர்களைப்பெற்றனர். அதனையறிந்த அரசனும் குகமுனிவரும் பெருமகிழ்வுற்று, அப்புத்திரர்கள் பிறந்த சுபதினங்களில் விழாநடாத்தி அவர்கட்கு முறையே மெய்ப்பொருள், நரசிங்கமுனையன், குலசேகரன், என்று பெயரிட்டனர். அப்புதல்வர் மூவரும் வளர்பிறைச் சந்திரனைப்போல நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து ஐந்து வயதடைந்தனர். அப்போது, அரசர் பெருமான் அவர்கட்கு வேதவிதிப்படி குகமுனிவரைக்கொண்டு உபநயனச் சடங்கினைச் செய்துமுடித்தனர். பின்னர் அம்முனிவரிடத்திலேயே பலகலைகளையும் கற்றுணருமாறு அவர்களை விடுத்தனன். இளமையிலேயே நுண்ணறிவு வாய்க்கப்பெற்ற அம்மூவரும், பலகலைகளையும் ஐயந்திரிபின்றிக் கற்றுணர்ந்ததோடு உலகினைப் பாதுகாக்கும் அரசர்கட்கு இன்றியமையாதனவாகிய யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை, தேர்செலுத்தல் முதலியவற்றையும் நன்கு கற்றுத்தேர்ந்தனர். தன் புத்திரர்கள் பலவகைப்பட்ட கலைகளிலும் தேர்ச்சியுற்று விளங்குதலைக் கண்ட தெய்வீகன் பெருமகிழ்ச்சியுற்று, அமைச்சர்களையழைத்து அவர்களுக்கு இளவரசுப் பட்டஞ் சூட்டவேண்டுமென்று கூறினான். அதனைக் கேட்ட அமைச்சர்கள் நகரத்தை யலங்கரிக்கச்செய்து பதினெண்புவியிலுள்ள மன்னர்கட்கும் நிருபங்கள் அனுப்பினார்கள்.

அந்நிருபங்களைப்பெற்ற அரசர்களெல்லோரும் தத்தம் பரிவாரங்களோடு திருக்கோவலூர்க்குச் சென்றனர். பின்னர் நிமித்திகர் கூறிய நன்னாளிலே, பலவகை வாத்தியங்கள் கல்லென்றொலிப்ப, பெரியோர் ஆசிகூற, அப்புத்திரர் மூவரும் இளவரசுப் பட்டஞ்சூட்டப் பெற்றனர். பிறகு தெய்வீகன் தன் புதல்வர்களோடு இனிது ஆட்சிபுரிந்து வந்தனன். சிலகாலஞ் சென்றபின்னர், அரசன், தன் புதல்வர்களுக்குத் திருமணம் முடித்தல் வேண்டுமென்று நினைத்து, அமைச்சர்களுள் வல்லவராகிய சமய



தந்திரன் முதலானோரை யழைத்து, 'நம் புத்திரர்களுக்கு மணஞ்செய்தல் வேண்டும். அவர்கட்குத் தக்க பெண்கள் எவ்விடத்துள்ளார்?' என்று வினவினான். அதனைக் கேட்ட அமைச்சர்கள் மகிழ்ந்து, 'அரசர் பெருமானே, குடிப்பிறப்பு, குணம், அழகு, கல்வி முதலியவற்றால் சிறந்து விளங்கும் பெண்களையே தேர்ந்தெடுத்து, நம்மிளவரசர் மூவருக்கும் மணஞ்செய்தல்வேண்டும் ஆதலால் பல தேசங்கட்குஞ் சென்று பார்த்தல் வேண்டும்' என்றனர். உடனே அரசன் அமைச்சர்களை நோக்கி "நீங்கள் பதினெண் புவிக்குஞ் சென்று, அம்மன்னர்களுடைய புத்திரிகளைப்பார்த்து, அவர்களில் மேம்பட்டோரது உருவங்களைப் படங்களில் எழுதிக்கொணர்க" என்றனன்.

பிறகு சமயதந்திரன் முதலான மூன்றமைச்சர்களும் அவ்வாறே பலதேசங்கட்குஞ்சென்று, அத்தேசமன்னர்களது புதல்வியருள் குணம் அழகு முதலியவற்றால் மேம்பட்டோரது உருவங்கள் வரையப் பெற்றுள்ள படங்களை எடுத்துக்கொண்டு, திருக்கோவலூர்க்குச் சென்று, தம் அரசனிடத்துக் கொடுத்தனர். அரசன், அப்படங்களில் மூன்றை ஆராய்ந்தெடுத்து 'இப்படங்களில் எழுதப்பெற்றுள்ள கன்னியர் யாருடைய புத்திரிகள்,' என்று வினவினான். உடனே, அமைச்சர்கள் 'மன்னவரேறே, முதற் படத்திற் காணப்படும் பெண்மணி, சந்திர வம்சத்திற்றோன்றி, ஆரியநாட்டை ஆளும் இராச சூடாமணி யென்னும் அரசனது அருமைப் புத்திரியாவள். இவள் பெயர் மதங்கமானி யென்பர். இரண்டாவது படத்துள்ள கன்னி மகதநாட்டையாளுஞ் செயசூரசேனனது அருந்தவப் புதல்வியாவள். இவள் கோமளாங்கி யென்னும் பெயருடையவள். இனி, இம்மூன்றாவது படத்திற் காணப்பெறும் பெண்மணி மச்சநாட்டையாளும் வனமாலன் என்னும் மன்னனது அரும்பெற்ற குமாரத்தியாவாள் இவள் பெயர் மதனசிந்தாமணி யென்று கூறுவர்,' என்று பணிவோடு கூறினர். அமைச்சர்கள் கூறியவற்றைக் கேட்ட அரசர் பெருமான் அகமகிழ்ந்து, அப்பெண்மணிகளைத் தன் புதல்வர்களுக்கு மணஞ்செய்ய நிச்சயித்து வருமாறு அவ்வமைச்சர்களை முற்கூறிய மூன்று தேசங்கட்கும் அனுப்பினன். அவ்வாறே அவர்கள் அத்தேசங்கட்குச் சென்று அவ்வரசர்களைக் கேட்டனர். அம்மன்னர்களும், அமைச்சர்கள் விரும்பியவாறே தத்தம் புத்திரிகளைத் தெய்வீகனது புத்திரர்கட்குத் திருமணஞ் செய்துகொடுத்தற்குப் பெருமகிழ்வோடு உடன்பட்டனர். பிறகு, குகமுனிவரால்

குறிக்கப்பெற்றுள்ள சுபதினத்தில் விவாகம் நடத்துவது என்று நிச்சயித்து, மணவோலையும் எழுதினர். அதன் பின்னர், திருக்கோவலூர்க்கு மணப்பெண்களை அழைத்து வரும்படி அரசர்களிடஞ் சொல்லிவிட்டு, அமைச்சர்கள் திருக்கோவலூர்க்குச் சென்று, தம் அரசனிடம் நிகழ்ந்தவற்றைக் கூறி, மணவோலையினையும் பணிவோடு கொடுத்தனர். அரசன் அதனைப் பெற்று அளவிலா மகிழ்ச்சியடைந்தனன்.

பின்னர், பல தேயங்கட்கும் மணவோலைகள் அனுப்பப்பெற்றன. திருமணச் செய்தியையறிந்த அரசர்களெல்லோரும் தத்தம் சேனைகளோடு திருக்கோவலூரையடைந்தனர். பிறகு இராசசூடாமணி முதலான அரசர் மூவரும் தம்புத்திரிகளுடன் அமைச்சர்கள் சேனாதிபதிகள் முதலான பரிவாரங்கள்சூழப் புறப்பட்டுத் திருக்கோவலூர்க்குச் சமீபமாக வருதலையுணர்ந்த தெய்வீகன், தன் அமைச்சர்களையழைத்துத் தன் பரிவாரங்களுடன் போய், அம்மன்னர்களை எதிர்கொண்டழைத்துவரும்படி உத்தரவிட்டனன். அவ்வாறே அவர்கள்போய் எதிர்கொண்டழைத்து வந்து, அவர்கட்கு அமைக்கப்பெற்றிருந்த எழுநிலைமாடங்களில் அமரச்செய்தனர். பிறகு குகமுனிவரால் குறிக்கப்பெற்றிருந்த நன்னாளில், பலவாத்தியங்கள் ஒலிக்க, முனிவர்கள் ஆசிகூற, சூதர்மாகதர் முதலானோர்வடித்தெடுப்ப, மெய்ப்பொருட்கு மதனசிந்தாமணி என்பாளையும் நரசிங்கமுனையனுக்குக் கோமளாங்கி என்பாளையும் குலசேகரனுக்கு மதங்கமானி என்பாளையும் வேதவிதிப்படி அக்கினிசாட்சியாகத் திருமணஞ்செய்து முடித்தனர். அப்போது, அதனைக்கண்டோர்பலருங் களிப்பென்னுங்கடலுள் ஆழ்ந்தனர். திருமணம் முடிவுற்றபின்னர், அரசர்பலரும், தெய்வீகனிடத்து உத்தரவுபெற்றுக்கொண்டு அவனால் அளிக்கப்பெற்ற பல வரிசைகளோடு தத்தம் தேசங்கட்குச் சென்றனர். பின்னர், தெய்வீகன், வீரட்டேசரது திருவருளால் திருக்கோவலூரிலிருந்து முன்போல அரசாண்டு வந்தனன்.

தெய்வீகன் புத்திரப்பேற்றுச் சருக்கம் முற்றும்.



## குகமுனியுபதேசச்சருக்கம்.

திருமணம் முடிந்தபின்னர், தெய்வீகராசனது புத்திரர் மூவரும் உலகவாழ்க்கையில் அருவருப்புற்றவர்களாய் வீரட்டேசரது ஆலயத்திற்குச்சென்று அப்பெருமானைப் பன்முறை வணங்கி 'எம்பெருமானே, எங்கள்மன மாசகற்றி யருள்புரிய வேண்டும்' என்று வேண்டினர். அப்போது சிவபெருமான் கருணைகூர்ந்து 'மைந்தர்காள், உங்கள் பிதாமகராகிய குகமுனிவரிடத்துச்சென்று இதனைக்கூறுக' என்று அசரீரியாகத் திருவாய்மலர்ந்தருளினர். உடனே அம்மூவரும் குகமுனிவரிடஞ்சென்று வணங்கி, 'யாங்கள் மண் பெண் பொருள் என்ற மூவாசைகளையும் அறவொழித்துப் பேரின்பத்தையடைதற்குரிய மெய்ந்நெறியை உபதேசித்தருளல் வேண்டும்' என்றுரைத்தனர். அவ்வாறுகூறிய அவ்வரசகுமாரர் மூவரையும் குகமுனிவர் வியப்போடுநோக்கி, 'அருமைக்குழந்தைகாள், யாவரும் அடைதற்கரிதாகிய வீட்டை நீங்கள் எளிதில் அடைய விரும்புதல் கடலைக் கையால் நீந்தலையொக்கும்; எவரும் எதனையும் வாயாற்கூசாது சொல்லலாம்; தத்துவசோதனைபுரிந்து மனமாசகற்றிப் பிரமநிட்டையிலிருத்தல் எளிதன்று' என்றுரைத்தனர். பின்னர், பல தர்மங்களையும் பிரமநிட்டையெய்தும் விதத்தையும் பிரமநிட்டர்களது பெருமையையும் உரைத்தருளி, 'சமய விசேட நிர்வாணதீட்சைகள்பெற்று சிவபூசையும் சிவாலயவழிபாடும் பத்தியோடு செய்துவரின் இல்லறத்திலிருந்தே எளிதில் வீடடையலாம்; ஆகையால், நீங்கள் அவற்றைச்செய்து வருக' என்று கட்டளையிட்டருளினர். அம்முனிவர் உரைத்தருளியவாறே அவர்கள் மூன்று தீட்சைகளையும் பெற்றுச்சிவபூசையும் சிவாலயவழிபாடும் ஆகமவிதிப்படி செய்துகொண்டு, தத்தம் மனைவியரோடு இனிது வாழ்ந்து வந்தனர்.

இஃதிவ்வாறாக, அரசர்பெருமானாகிய தெய்வீகன் தன் அருமைப்புதல்வர்களுக்கு முடிசூட்டவேண்டுமென்று நினைத்துக் குகமுனிவரை ஒருநன்னாள் பார்த்துச்சொல்லும்படி வேண்டினன். அதனையறிந்த புத்திரர் மூவரும் தம் தந்தையையும் குகமுனிவரையும் நோக்கி 'உலகவாழ்க்கையே பொய்யென்றெண்ணி, அதனையொழித்து வீடடைதற்குரிய வழியைத்தேடிக்கொண்டிருக்கும் எம்மீது இராஜ்ஜியபாரத்தைச்சுமத்துதல் அழகன்று' என்றுரைத்தனர். புத்திரர்கள் கூறியவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த

குகமுனிவர் 'குழந்தைகாள், தந்தையின் சொற்படிநடப்பதே புத்திரர்களின் கடமையாகும். அக்கடமையினின்றும் தவறினோர் எத்தகைய மேன்மையெய்தினும் அதுமேன்மையாகமாட்டாது. ஆதலால் உங்கள் தந்தையின் விருப்பத்தின்படி, பதினெண்புவிகளையும் முப்பகுதிகளாகப் பிரித்து மூவரும் ஆட்சிபுரிதல்வேண்டும்' என்றனர். குகமுனிவர் கூறியவற்றைக் கேட்ட புதல்வர் மூவரும் அவ்வாறு ஆட்சிபுரிதற்குடன்பட்டனர். பின்னர் தெய்வீகாசன் குகமுனிவர் கூறிய சுபதினத்திலே பதினெண்புவிகளையும் மூன்று பகுதிகளாகப் பிரித்து மேற்பகுதிக்கு நரசிங்கமுனையரையும் இடைப்பகுதிக்கு மெய்ப்பொருளையும் கீழ்ப்பகுதிக்குக் குலசேகரரையும் அரசர்களாக முடிசூட்டினான். அங்ஙனம் முடிசூட்டப்பெற்ற மூவரசரும் தம்குடைக்கீழ்வாழுங் குடிகளெல்லோரும் சிறிதும் துன்புறாமல் இன்புற்றுவாழுமாறு செங்கோல் செலுத்திவந்தார்கள். தெய்வீகாசன் தன்புத்திரர்களுடைய உயர்குணங்களையும் செங்கோலாட்சியையும் வீரத்தன்மையையும் கண்டு மிகவும் களிப்புற்றிருந்தனன்.

குகமுனி உபதேசச் சருக்கம் முற்றும்.

---

## பதவிச்சருக்கம்.

---

### குகமுனிவர்

---

ஒரு நாள், குகமுனிவர் குமரவேள் திருவடியெய்துதற்கு இதுவே காலமென்றெண்ணி, அப்பெருமான் சந்நிதியடைந்து பன்முறை வணங்கி, 'எம்பெருமானே அடியேனைத் தங்கள் திருவடிக்கு அழைத்தருள்க' என்று வேண்டினர். சண்முகப்பெருமான் குகமுனிவரது வேண்டுகோளின்படி அவரையழைத்துவருமாறு தம்பாலுள்ள ஒரு வீரனை அனுப்பினர். அவ்வீரன், குமரவேள் ஆணையின்படி, தேவர்கள் சூழ்ந்துவர, பலவாத்தியங்கள் ஒலிக்க, ஒரு விமானத்துடன் திருக்கோவலூரையெய்தி, குகமுனிவரையழைத்துச்சென்றனன். அம்முனிவர் குமாரக்கடவுளது திருவடியையெய்தியது பங்குனி மாதத்து அவிட்ட நக்ஷத்திரத்தன்றேயாம்.



### பச்சைக்குதிரை.

---

தெய்வீகமன்னனது பச்சைக்குதிரை நாள்தோறும் பெண்ணையாற்றில் நீராடி, ஆலயத்திற்குவந்து வீரட்டேசரது திருவடிகளை வணங்கி, அவ்வாலயத்தை வலம் வந்துகொண்டிருந்தது. இவ்வாறு சிலநாட்கள் சென்றபின்னர், இறைவன் திருவருளால், அப்பரிமாவின் வலக்காதிலிருந்து ஒரு சோதியெழுந்து ஆகாயத்திற்குச் சென்றது. பரிமாவும் மரகத மலைபோல் கீழே வீழ்ந்தது. அதனைக்கண்டோர் பலரும் அதிசயித்து, கருணைவள்ளலாகிய தெய்வீகனைநோக்கி, 'அதன்காதினின்றும் ஒருசோதியெழுந்துபோதற்குக்காரணம் யாதென்று கேட்க, தெய்வீகமன்னன், அது குபேரனுடைய வச்சிரக் குதிரையென்றும், ஒரு சாபத்தால் இவ்வுலகையடைந்து பிறந்ததென்றும் இப்போது அச்சாபத்தினின்றும் நீங்கிக் குபேரனிடம் செல்கிறதென்றும், இவ்விஷயத்தைத் தன் பிதாவாகிய குகமுனிவர் தனக்கு ஒருமுறை கூறியுள்ளாரென்றும்' சொன்னான். அரசன் கூறியவற்றைக் கேட்ட பலரும் ஆச்சர்யமுற்று மகிழ்ந்தனர்.

---

### தெய்வீகராசன்.

---

பின்னர் தெய்வீகராசன் வீரட்டேசரது சந்நிதிக்குச்சென்று பன்முறை வணங்கி, 'எம்பெருமானே யான்முன்னிருந்த பதவியினின்று நீங்கி, உலகிற்பிறந்து, பன்னிருமனைவியருடன் உலகவாழ்க்கையில் உழலுகின்றேன். இதனையொழித்து அடியேற்கு அருள்ப்ரியவேண்டும்' என்று மனமுருகி வேண்டினன். வேந்தன் கூறியவற்றைத் திருச்செவிசாய்த்துக் கேட்டருளிய சிவபெருமான் கருணைகூர்ந்து பார்வதிதேவியாருடன் இடபாரூடராய்த் தோன்றி, தம்மைத் தரிசித்தமையால் பழைய உருவடைந்து தோத்திரம்செய்து நிற்கின்ற தெய்வீகனைநோக்கி, 'நீ இப்புஷ்பகவிமானத்திலேறி உன்பதத்தையடைக' என்றுகூறி மறைந்தருளினர். பின்னர் தெய்வீகன், தன் புத்திரர்களையும் அமைச்சர்களையுமழைத்து, 'வீரட்டேசரது திருவடிகளையென்றும் மறவாது வழிபடுவீர்களாயின் நீங்களெல்லாச்சுகத்தையும் அடைவீர்கள்' என்றுகூறி, தேவர்கள் நறுமலர்தூவ தெய்வமங்கையர் கொண்டாட பலவாத்தியங்கள் ஒலிப்ப, தன் பதத்தை அடைந்தான். மன்னர்

பெருமானைப்பிரிந்த மனைவியர் எல்லோரும் தீப்பாய்ந்தனர். இவ்வரசர் பெருமான் இவ்வுலகை எழுநூற்றறுபது ஆண்டு ஆட்சி புரிந்து ஆவணி மாதம் அவிட்ட நக்ஷத்திரத்தன்று இவ்வுலகை நீத்தான் என்றுகூறுவர் பெரியோர்.

பதவிச்சருக்கம் முற்றும்.

## மெய்ப்பொருணாயனார் சருக்கம்.

தெய்வீகவேந்தனது முதற்புதல்வரும் சிவனடியார்களுடைய திருவேடத்தையே மெய்ப்பொருளென சிந்தைசெய்பவருமாகிய மெய்ப்பொருணாயனார் என்பவர் சேதிநாட்டிலே திருக்கோவலூரிலிருந்து தமக்குரிய நாடுகளை ஆட்சிபுரிந்து வந்தனர். அவர் தம்முடைய இராஜ்ஜியத்தை தருமநெறிதவறாமல் நடத்தியும் தம்மை எதிர்த்த பகைவர்களை ஜெயங்கொண்டும் சிவாலயங்களெங்கும் நித்திய நைமித்திகங்களைச் சிறப்பாக நடத்தியும், சிவபக்தர்கள் வந்தபோது அவர்கள் விரும்பியவற்றை மகிழ்ச்சியுடன் கொடுத்தும் வந்தனர். அவருடைய மனைவி மதனசிந்தாமணி என்பார் மூன்று புத்திரர்களைப்பெற்றனர். அப்புத்திரர் மூவர்க்கும் காமாரி, புராரி, அந்தகாரி எனப்பெயரிட்டு வளர்த்துவந்தனர். இங்ஙனம் வாழும் நாளில் சிந்துதேசத்தரசனாகிய முத்திநாதன் என்பவன் அவரைவெல்லுதற்கு விரும்பி யுத்தசன்னத்தனாகி அவரோடு போர்செய்து, யானை, குதிரை, தேர், காலாளென்னுஞ் சேனைகளைப்பலமுறையிழந்து, தோற்று அவமானமடைந்தனன். பின்பு, அவன் யுத்தத்தினாலே அவரை ஜயிக்கமாட்டாதவனாகி, அவரிடத்திலிருக்கின்ற அடியார் பத்தியையறிந்து விபூதி தரித்துள்ள அடியார் வேடங்கொண்டு அவரைக் கபடத்தினால் வெல்லநினைத்து சரீரம் முழுதும் விபூதியணிந்து, சடைகளைச் சேர்த்துக்கட்டி, புத்தகக்கவளிபோலத் தோன்றுகின்ற ஆயுதத்தை மறைத்து வைத்திருக்கின்ற ஒரு கவளியை எடுத்துக்கொண்டு, திருக்கோவலூர் சென்று மெய்ப்பொருணாயனாருடைய திருமாளிகைவாயிலை அடைந்தான். அப்பொழுது வாயிற் காவலாளர் வணங்கி, 'சுவாமி உள்ளே எழுந்தருளுக' என்று சொல்ல, அம்முத்திநாதன் உள்ளேபோய் மற்றவாயில்களையும் அப்படியே கடந்துசென்று இறுதி வாயிலை யடைந்தபோது அவ்வாயிற்காவ



லாளனாகிய தத்தனென்பவன், 'இப்பொழுது அரசர் பெருமான் நித்திரை செய்கின்றனர். நீர் சமயமறிந்து போதல் வேண்டு'மென்றான். அதைக் கேட்ட முத்திநாதன் 'நாம் அவருக்கு சாத்திரோபதேசம் செய்யப்போகின்றோம்' என்றுகூறி உள்ளே புகுந்து மெய்ப்பொருணாயனார் கட்டிலிலே நித்திரைசெய்ய அவர் மனைவியார் பக்கத்திலிருக்கக்கண்டும் சமீபத்திலேசென்றார்.

அப்போது, அவர்மனைவியார் சீக்கிரம் எழுந்து தம்கள் தலைவரை எழுப்ப, அவர்விழித்தெழுந்து, அவனை எதிர்கொண்டு வணங்கி நின்று, 'சுவாமி, தேவரீர் இங்கே எழுந்தருளுதற்குக் காரணம் யாது' என்றுவினாவினார். அதற்கு முத்திநாதன், 'உங்கள் கடவுளாகிய பரமசிவன் ஆதிகாலத்திலே அருளிச்செய்த சைவாகமங்களுள் எவ்விடத்துங்காணப்பெறாத ஓராகமத்தை உமக்குப்போதிக்கும்படி கொண்டுவந்தேன்' என்றான். மெய்ப்பொருணாயனார் அதைக்கேட்டு, 'இதைப்பார்க்கிலும் உயர்ந்தபேறு அடியேனுக்குண்டோ? அதனைவாசித்து அடியேற்கு அதன்பொருளையருளிச்செய்க' என்றுவேண்ட, முத்திநாதன் 'பட்டத்தரசியன்றி நீரும் யானும் வேறிடத்திருக்கவேண்டும்' என்றான். உடனே மெய்ப்பொருணாயனார் தமது மனைவியாரை அந்தப்புரத்துக்குப் போகும்படிசெய்து, முத்திநாதனை ஓர் உயர்ந்த ஆசனத்திருத்தி, தாம் கீழேயிருந்துகொண்டு, "இனியருளிச்செய்யு"மென்றார். முத்திநாதன் புத்தகம் அவிழ்ப்பவன்போல் வஞ்சகக்கவளியை அவிழ்த்து மெய்ப்பொருணாயனார் வணங்கும்போது, அக்கவளியில் மறைத்து வைத்திருந்த உடைவாளை எடுத்து அவரைக்குத்த, அவர் சிவவேடமே மெய்ப்பொருள் என்று எண்ணி வணங்கி யவனை வென்றார். மனத்தை அங்கேயே செலுத்திக்கொண்டிருந்த வாயிற்காவலாளனாகிய தத்தன் என்பான் விரைவில் உள்ளேபுகுந்து தன் கைவாளினால் அவனை வெட்டப்போனான். அதற்குமுன் வாளினால் குத்தப்பட்டு இரத்தம்சொரிய விழப்போகின்ற மெய்ப்பொருணாயனார் விழும்போது, 'தத்தனே இவர் சிவனடியாராதலால் இவருக்கு ஓரிடையூறும்செய்யேல்' என்று கையினால் தடுத்துவிழுந்தார். அப்போது தத்தன் மெய்ப்பொருணாயனாரைத் தலையினால் வணங்கி அவரைத்தாங்கி, 'அடியேன் செய்யவேண்டிய குற்றேவல் யாது' என்று கேட்க, மெய்ப்பொருணாயனார், 'வழியிலே இவருக்கு யாவரும் இடையூறு செய்யாதபடி இவரையழைத்துக்கொண்டு போய்விடு' என்று சொன்னார். அப்படியே தத்தன் முத்தி

நாதனை அழைத்துக்கொண்டு போகும்போது, அவன் அரசரைக் குத்திய செய்தியை யறிந்தவர்களெல்லோரும் அவனைக்கொல்லும்படி வந்துசூழ, அரசன் கூறியதை அவர்களிடத்தில் சொல்லித் தடுத்து நகரத்தைக்கடந்துசென்று அவனுக்குரிய காட்டுவழியிலே அவனைவிட்டு நகரத்துக்குத் திரும்பி, முத்திநாதனை இடையூறின்றிக்கொண்டுபோய்விட்ட செய்தியைக் கேட்பதற்கு விரும்பி நீங்கிவிடக்கூடிய உயிரைத்தாங்கிக்கொண்டிருக்கும் அரசரிடம் சென்று வணங்கி நின்று, 'இடையூறு ஒன்றும் வாராதபடி சிவபத்தரைக் கொண்டுபோய்விட்டே'னென்று சொன்னான். அதைக் கேட்ட அரசர் 'இன்றைக்கு நீ செய்த உதவியை வேறுயாவர் செய்ய வல்லார்?' என்று சொல்லித் தன் குமாரர்களையும் அமைச்சர் முதலானவர்களையும் நோக்கி, 'சைவாகமப்படி விபூதிமேல்வைத்த அன்பைப் பாதுகாக்கும்படி போதித்து' கனகசபையிலே ஆனந்த தாண்டவஞ் செய்தருளும் சபாநாயகரைத் தியானஞ்செய்தார். அப்பொழுது சபாநாதர் மெய்ப்பொருணயனருக்குத் தோன்றி அவரைத் தம்முடைய திருவடியிலே சேர்த்தருளினார். பின்னர் அவருடைய புத்திரர்களாகிய காமாரி முதலான மூவரும் நடு நாட்டை ஆட்சிபுரிந்து வந்தனர். இவர்களுடைய நாடு மலைகளையுடையதாயிருந்தபடியால் இவர்களும் இவர்களின் வழித்தோன்றல்களும் மலையநத்தமர் என்று, அழைக்கப்பட்டார். இவர்களுக்கு உடையார், நாயனார், பண்டாரி என்ற சிறப்புப்பெயர்களும் பண்டைக்காலந் தொட்டு வழங்கிவருகின்றன.

மெய்ப்பொருள் நாயனார் சருக்கம் முற்றும்.

## நரசிங்கமுனையரையர் சருக்கம்.

தெய்வீக மன்னனது இரண்டாவது புத்திரராகிய நரசிங்கமுனையரென்பார் மேற்பகுதியிலுள்ள நாடுகளைத் திருமுனைப்பாடிநாட்டிலிருந்து மனுமுறைதவறாது ஆட்சிபுரிந்துவந்தனர். அங்ஙனம் அரசாளும்நாளில் சிவாலயங்கள்தோறும் நித்தியநைமித்திகங்களை ஒழுங்குபெற நடத்துவித்து, சிவனடியார்கட்குத் திருத்தொண்டுசெய்தலே தமக்குப்பெரும்பேறெனத் துணிந்து செய்து வந்தனர். தமக்கு ஒரு புத்திரன் கிடைப்பின் அவனுக்கு முடிசூட்டி, தாம் சிவனடியார்கட்குத் தொண்டுசெய்தலிலே காலத்தை செலவிடலாமென்றெண்ணினர்.



இஃதிவ்வாறாக ஆலாலசுந்தரர் திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரென்னும் திருப்பதியிலே, ஆதிசைவரென்னுஞ் சிவப்பிராமண குலத்திலே, சடையனார்க்கும் அவர்மனைவியாராகிய கற்பிற்சிறந்த இசைஞானியார்க்கும், சைவசமயந் தழைத்தோங்குமாறு இறைவன் திருவருளால் புத்திரராகத்தோன்றினார். அப்புத்திரருக்கு நம்பியாரூரரென்று நாமகரணஞ் செய்தார்கள். அப்புத்திரர் ஒருநாள் வீதியிலே சிறுதேர்உருட்டி விளையாடும்போது நமது அரசராகிய நரசிங்கமுனையர் அக்குழந்தையைக்கண்டு, அவர்மேல் ஆசைமிகுந்து அவருடைய தந்தையாராகிய சடையனாரிடத்திற்குப்போய், 'இந்தப்பிள்ளையை எனக்குத்தாரும்' என்று கேட்டுப் பெற்றுக்கொண்டுபோய், அவரை அபிமானப் புத்திரராக வளர்த்துவந்தனர். இங்ஙனம் வளர்த்துவரும் நாளில் நரசிங்கமுனையருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அப்புத்திரனுக்கு நம்பியார்தம்பி என்றுபெயரிட்டு வளர்த்துவந்தனர், நம்பியாரூரர் அரசரால் வளர்க்கப்படினும், தமது பிராமணவருணத்திற்குரிய ஒழுக்கத்தையே உடையவராகிவளர்ந்து வந்து உரியகாலத்தே உபநயனஞ்செய்யப்பெற்று, வேதங்களை அத்தியயனஞ்செய்து, சகலகலைகளிலும் மகா பாண்டித்தியமுடையவராய் விவாகஞ்செய்தற்குரியபருவத்தையடைந்தார். அதுகண்டு, நரசிங்கமுனையர், அப்பிள்ளையின் தந்தையாராகிய சடையனாரையும் சிலபெரியோர்களையும் புத்தூரிலிருக்குஞ் சடங்கவிசிவாசாரியாரிடத்திலே அனுப்பி, அவருடைய புத்திரிக்கும் நம்பியாரூரருக்கும் விவாகம் பேசிவரும்படிசெய்தனர். அவர்கள் சடங்கவிசிவாசாரியாரிடத்தில் போய்ப் பேசி, அவர் உடன்பட்டது கண்டு, அதனை நரசிங்கமுனையரிடம் தெரிவித்தனர். பின்னர், நரசிங்கமுனையர், சடையனார் முதலானோர் மகிழ்ச்சியுற்று, விவாகத்திற்குரிய சுபதினமும் சுபமுகூர்த்தமும் நிச்சயித்து, தம்முடைய சிநேகிதர் உறவினர் முதலானோரும் சூழ்ந்துவர நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்தி நாயனாரை மணக்கோலத்துடன் குதிரைமேலேற்றி அழைத்துக்கொண்டு, விவாகத்திற்கு முதல்நாளிலே, புத்தூரையடைந்தனர்.

சோதிடரால் குறிக்கப்பெற்ற சுபமுகூர்த்தத்திலே நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்திநாயனார் நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு, மணக்கோலத்துடன் திருமணப்பந்தரிலுள்ள ஆசனத்தில் அமர்ந்தார். அப்போது சிவபெருமான் திருக்கைலாயத்திலே சுந்தரமூர்த்திக்கு வாக்குத்தத்தம்பண்ணியபடி, அவரை உலக வாழ்க்கையில் மயங்கவிடாமல் தடுத்தாட்கொள்ளும்வண்ணம் ஒரு

வயோதிகப்பிராமண உருவங்கொண்டு, அத் திருமணப்பந்தரிலே எழுந்தருளிவந்துநின்று, ‘இந்த நம்பியாரூரன் எனக்கு அடியவன்; இவன் பாட்டன் எனக்கு எழுதிக்கொடுத்த அடிமை ஓலையிருக்கிறது’ என்றனர். உடனே நம்பியாரூரர் ஐயரைப்பார்த்து “பிராமணருக்குப் பிராமணர் அடிமையாதல் இன்றைக்கு நீயே சொல்லக்கேட்டோம். நீ பித்தனோ?” என்றுசொல்ல ஐயர், ‘நீ என்ன வசைமொழிகளைக்கூறினும் நான் வெட்கமடையேன்’ என்றனர்.

அப்போது நம்பியாரூரர், ‘ஐயரே உம்முடைய ஓலையைக் காட்டும்’ என்றுசொல்ல ஐயர் ‘அதனை இப்போது காட்டேன்’ என்றனர். உடனே நம்பியாரூரர் கோபங்கொண்டு அவ்வோலையை பிடுங்கும்பொருட்டு, அவரெதிரே சென்றபோது அவர் ஓடத் தாமும் ஓடி, அவ்வோலையைப் பறித்துக்கிழித்தனர். அதுகண்ட ஐயர் சுந்தரமூர்த்தியைப் பிடித்துக்கொண்டு சத்தமிட சமீபத்தில் நின்றவர்கள் அவ்விருவரையும் விலக்கி, ‘ஐயரே நீர் எந்தவூர்சொல்லும்?’ என்றனர். அதற்கு ஐயர், ‘நான் இந்தத் திருவெண்ணைநல்லூரிலிருக்கின்றவன்’ என்று கூற, சுந்தரமூர்த்தி நாயனார், ‘நீர் திருவெண்ணைநல்லூராராயின் இவ்வழக்கை அவ்வூரிலே பேசித் தீர்ப்புச்செய்யவாரும்’ என்றனர்; உடனே வயோதிகப்பிராமணரும் சுந்தரமூர்த்தியும் மற்றப்பிராமணர்களோடு திருவெண்ணைநல்லூர்க்குச்சென்றனர். சென்ற ஐயர், அவ்வூரிலுள்ள சபைக்குப் போய்ச் சபையோரிடத்தில் நடந்தவற்றைக்கூறி முறையிட்டனர். அவர் கூறியவற்றைக்கேட்ட சபையோர், ‘பிராமணர் அடிமையாதல் இவ்வுலகத்தில் இதுவரையிலும் இல்லை. நீர் தப்புவார்த்தை சொன்னீர்’ என்றுசொல்ல ஐயர், ‘இவன் பாட்டன் எழுதிக் கொடுத்த மூலவோலை என்னிடத்திலிருக்கிறது’ என்றுசொல்லி அதனை எடுத்து, சபையாரிடம் கொடுத்தனர். அவ்வோலையை யாவரும் படித்துப்பார்த்து அங்கீகரித்தனர். அன்றியும், சபையார் அவர்பாட்டன் எழுதியகைச்சாத்து ஒன்றழைப்பித்து அதன் எழுத்தையும் அடிமையோலையின் எழுத்தையும் ஒத்துப்பார்த்து அதன்படி, ‘நம்பியாரூரர் அவருக்கு ஏவல்செய்வதே கடன்’ என்று சொல்லிவிட்டு, ‘ஐயரே நீர்காட்டிய ஓலையில் எங்கள் ஊரே உம்முடைய ஊராக எழுதப்பட்டிருக்கிறது. ஆதலால் இவ்வூரிலே உம்முடைய வீடு எங்கிருக்கிறது? காட்டும்’ என்றனர். பிராமணவடிவங்கொண்டுள்ள கடவுள், ‘எம்முடைய வீட்டைக் காட்டுகிறேன் வாருங்கள்’ என்றழைத்துச்சென்று, திருவருட்டுறை



என்னும் சிவாலயத்துள்ளேபோனார். பின்பு சபையாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் அவரைக்காணாது திகைத்து நின்றனர். அப்போது சிவபெருமான் இடபவாகனத்தின்மேல் பார்வதிசமேதராய் வெளிப்பட்டு, சுந்தரமூர்த்தியை நோக்கி, நீ முன்னே நமக்குத் தொண்டனாயிருந்தாய். நீ பெண்களின்மேல் இச்சைவைத்ததினால் நம்முடைய ஆணையாற் பூமியிற்பிறந்தாய், இப்பொழுது சம்சாரபந்தமானது உன்னைத்தொடாதபடி யாமேவந்து உன்னைத் தடுத்தாட்கொண்டோம். நீ நம்மோடு வின்சொற்களால், வாதஞ்செய்த காரணத்தால் வன்றொண்டன் என்றபெயரைப் பெறுவாயாக; நமக்கு அன்பினோடு செய்யத்தக்க அருச்சனையாவது பாடலேயாம். ஆதலால் நம்மீது தமிழ்ப்பாட்டுக்களைப் பாடுக என்று திருவாய்மலர்ந்தருள, சுந்தரமூர்த்தியானவர் இரண்டுகண்களிலிருந்தும், ஆனந்தவருவிபொழிய, அடியற்றமரம்போல் நிலத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று தம்மையாண்டருளிய பரமசிவன்மேல் “பித்தாபிறைசூடி” என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். பின்னர், சுந்தரமூர்த்தி நாயனார் சிவஸ்தலங்கடோறுஞ்சென்று தரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளினர். அப்போது நரசிங்கமுனையர் இராஜ்ஜியத்தை அமைச்சர்களிடம் ஒப்புவித்துவிட்டு, தாமும் அவரோடு கூடவருவதாகக்கூற, சுந்தரமூர்த்திநாயனார், ‘நீங்கள் திருக்கோவலூர்க்குச்சென்று சிவாலயத்திருப்பணியும், சிவனடியார் திருத்தொண்டும் செய்துகொண்டு முன்போல் இராஜ்ஜியபரிபாலனஞ்செய்துகொண்டிருங்கள்’ எனக் கூறினர். அவ்வாறே நரசிங்கமுனையர் திருக்கோவலூரிலிருந்து ஆட்சிபுரிந்துவந்தனர். அந்நாளிலே அவருடைய மனைவியாகிய கோமளாங்கி என்பவள் ஒருபுத்திரனைப்பெற்றனள். நரசிங்கமுனையர் அப்புத்திரனுக்கு ஆட்கொண்டாரென்று பெயரிட்டழைத்தனர். பின்னர், தம் புத்திரனிடம் இராஜ்ஜியத்தை ஒப்புவித்துவிட்டு, சுந்தரமூர்த்திநாயனார் கூறியபடி, திருவாதிரை நட்சத்திரந்தோறும், விசேஷ பூஜைசெய்வித்து, தம்மிடம் எழுந்தருளிவரும் சிவனடியார்களைத்திருவமுது செய்வித்து, அவர்களுக்குத் தனித்தனியே நூறுபொன் கொடுத்து வந்தனர்.

ஒரு திருவாதிரை நட்சத்திரத்திலே அப்படியே அடியார்களுக்குப் பொன்கொடுக்கும்போது, தூர்த்தவேடமுள்ள ஒருவர் விபூதியணிந்துகொண்டு வந்தனர். அவர்வடிவம் இருந்த தன்மையைக்கண்டு பக்கத்திலுள்ளவர்கள் இகழ்ந்து ஒதுங்க, நரசிங்கமுனையரையர் அதுகண்டு, எதிரேசென்று அவரை அஞ்சலிசெய்து

அழைத்துக்கொண்டுபோய், அவரை மிகவும் உபசரித்து சீலம் இல்லாதவர்களாயினும் விபூதியை இகழ்ந்து நரகத்தில் வீழாவண்ணம் அவருக்கு இருநூறு பொன்கொடுத்து, அவரை வணங்கி, இன்சொற் சொல்லி விடைகொடுத்தனுப்பினர். இவ்வண்ணம் அருமையாகிய திருத்தொண்டுகள் பலவற்றைச்செய்து புரட்டாசி மாதம் சதய நட்சத்திரத்தன்று சிவபதமடைந்தார். இவர் வழி வந்த ஆட்கொண்டாரென்பவர் மேற்பக்கத்துள்ள நாடுகட்குச் சென்று, கொங்குநாட்டிலிருந்து ஆட்சிபுரிந்தனர். இவர் வழி வந்தோர்கள், கொங்கர் என்றும் மலைமன்னர் என்றும் மலாடர் என்றும் அழைக்கப்பெறுவதோடு ராயர்உடையார் என்னும் சிறப்புப்பெயரும் வாய்ந்தோராவர்.

நரசிங்கமுனையர் சருக்கம் முற்றும்.

---

## குலசேகரச் சருக்கம்.

தெய்வீகனுடைய புத்திரர் மூவரும், தத்தமக்குரிய நாடுகளை ஆட்சிபுரிந்துவரும் நாளிலே, அவர்களில் குலசேகரவேந்தன் நிராசையுற்று, உலகவாழ்க்கையில் வெறுப்புற்றவராய்த் தம் இராஜ்ஜியத்தை அமைச்சர்களிடம் ஒப்புவித்துவிட்டு துறவிபோலப் புறப்பட்டு, ஸ்தலயாத்திரைக்குச் சென்றனர். அவரது மனைவியாகிய மதங்கமானியென்னும் கற்பரசி, தன்னையும், அழைத்தேகுமாறு வேண்டினள். அரசன் அதற்குடன்படாமைகண்டு, சிலநாட்கழித்தாவது போகலாமென்றனள். அதற்கும் சம்மதியாது போதலைக் கண்டு, ‘அரசரேறே, என்னை இழித்துக்கூறிச் செல்கின்றீர், எம்போன்றார்க்கு ஏவல்செய்வோரது பெண்ணைத் தாங்கள் மணந்துகொள்வீராக’ என்றுகூறிவிட்டு, நாள்தோறும் பெண்ணை நதியில் நீராடி வீரட்டேசரையும், பெரியநாயகியம்மையையும், போற்றி அவர்கட்குத் திருத்தொண்டுசெய்து வந்தனர். சிலநாட்களில் இறைவி திருவடி நீழலெய்திவாழும், பாக்கியத்தையும், பெற்றனள். இஃதிவ்வாறாக, யாத்திரைக்குச்சென்ற அரசர்பெருமான் காசிமுதலிய தலங்கட்குச்சென்று தரிசித்து பன்னிரண்டு வருடங்கட்குப்பின்னர் திருக்கோவலூர்க்குச்சென்று, தம் இராஜ்ஜியத்தைத்தமது இரண்டு சகோதரருக்கும், பாதிபாதியாகப் பிரித்துக் கொடுத்துவிட்டு, இராமேச்சுரம், முதலாகிய தென்னாட்டிலுள்ள பலதலங்கட்கும், சென்றனர். அத்தலங்களைத் தரிசித்துமீண்ட



[library stamp]

பின்னர், தன் மாமனாகிய சோழமன்னன் ஆட்சிபுரிந்துகொண்டிருந்த சோழமாளிகைக்குச்சென்று வசித்துவந்தனர். சோழமன்னன், விவாகம் வேண்டாம் என்று கூறிக்கொண்டு, கன்னிகையாயிருந்த ஒரு பெண்மணியைக்காட்ட, அவளிடம் பல பதிவிரதைகள் சரிதங்களைக்கூறி வாதஞ்செய்தனர். அவள், அவரோடு வாதஞ்செய்தற்கியலாதவளாய் மயக்கமுற்று, ‘நீரே என்னை மணந்துகொள்ளல்வேண்டும், இன்றேல் யான்தீப்புகுவேன்’ என்றனள். அரசன் விதியின் வலியால், அவள் வார்த்தையைக்கடத்தற்கியலாதவராய்ச் சம்மதித்தனர். இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சோழமன்னனும் களிப்புற்று, “இவரைச் சுருதிமன்னனென்றும் இப்பெண்மணியைப் பாரதியென்றும் கூறலாம். அப்படிக்கூறுதல் பொருத்தமுடையதேயாம்” என்றனன். அதனைக்கேட்ட குலசேகர வேந்தன் ‘இக்கன்னிகையார்? அதனைக் கூறுக’ எனச்சோழமன்னனும் ‘இவள்தாய் மங்கையென்னும் பெயருடையாள்; என்குலத்திலுதித்து பாண்டியனை மணந்து கொண்டவள், பாண்டியன் இறந்த பின்னர், மானினி என்னும் பெயருடைய இப்பெண்ணை அழைத்துக்கொண்டு இங்குவந்து வசிக்கின்றனள். அவள் எம்மாதர்களைத் தாய்போல் பாதுகாப்பவளாய் ஆடை ஆபரணங்களினால் அலங்கரித்து அவர்கட்கு கற்பு நீதிகளை உபதேசித்துக்கொண்டுவருகிறாள். ஆதலால் அவளைப் பிறர் தாதியம்மை என்று கூறுவாராயினர். இவள் கல்வியறிவொழுக்கங்களினால் முதிர்ந்து சாந்த சித்தமுடையவளாயிருப்பதினாலே அறிஞர் பலரும் இவளை மூப்பியென்றழைப்பாராயினர். மேலும் தன்னை விரும்பி மணம்செய்துகொள்ளவந்த அரசர்களையெல்லாம் விரும்பாதிருந்தும் தங்களை மணந்துகொள்ள விருப்பமுடையவளாய்க் காணப்படுகிறாள். இது எங்கள் பரம்பரையார் செய்த தவமேயாகும். ஆதலால் தாங்கள் விவாகஞ் செய்து கொள்ளுதல் தகுதியுடையதாகும்’ என்று தனதுமாமன் சொல்லியவற்றைக் கேட்ட குலசேகரன் தனது முதல் மனைவியாரின் சாபத்தையும் எண்ணி கோவல் வீரட்டேசரது திருவடிகளை சிந்தித்து விவாகஞ்செய்துகொள்வதற்கு உடன்பட்டனன். பின்னர் சோழன் அவ்விருவருக்கும் ஒரு சுபதினத்திலே மணஞ்செய்து முடித்தனன். அவ்விருவரும் இல்லறம் நடத்திவரும் நாளிலே மானினி என்னும் அப்பெண்மணி கருப்பமுற்றனள். குலசேகர வேந்தர் வீரட்டேசரது திருவடிகளை வணங்கும் விருப்புடையராய்த் திருக்கோவலூர்க்குச் சென்று நீட்டையிலிருந்தனர்.

பின்னர் சோழமன்னன் மூப்பியென்னும் காரணப்பெயரையுடைய மானினி என்பாள் பெற்றபுதல்வனுக்கு மூப்பன் என்னும் பெயரிட்டு அவன்பலகலைகளிலும் யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றிலும் வல்லவனாகுமாறு செய்து அவனைத்தலைமை அமைச்சனாக்கிக்கொண்டான். அம்மூப்பன் தலைமை அமைச்சனாயிருப்பதில் மகிழ்ச்சியுற்றவனாயிருக்கக்கண்ட அவன்தாய் 'மைந்த உனது அரசுக்கு உட்பட்ட அரசனால் கொடுக்கப்பட்ட பெருமையில் மகிழ்ச்சியுற்றவனாயிருக்கிறாய். உனது பாட்டனாராகிய தெய்வீகராசரது பெருமையை நீ அறிந்தாயில்லை. நீ என்னசெய்வை இப்படியிருக்கும்படி காலம்நேர்ந்திருக்கின்றது' என்று வருந்திய தன்தாய் தன்மூதாதை முதலானோர் பெருமையையும் வலிமையையும் தன்விருப்பத்திற்கிணங்கி கூறக்கேட்டு தன்தந்தையர் மூவரும் வசிக்கும் நகரத்திற்குச் செல்ல முயன்றனன். இஃதிவ்வாறாக நிட்டையிலிருந்த குலசேகர வேந்தர் நிட்டையினின்றும் நீங்கி உடன் பிறந்தார்கட்கு நன்மொழியுபதேசித்து, சித்திரை மாதத்தின் புனர்பூச நட்சத்திரத்தன்று சிவபெருமான் திருவடி நீழல் எய்தினர். இதனையறிந்த சோழமன்னன் மூப்பனை அழைத்துக்கொண்டு திருக்கோவலூர்க்குச்சென்று, குலசேகரன் புத்திரனது வன்மையெல்லாம் அவன் பிதாக்களிடம் கூறினான். அவர்கள், 'எங்கள் சகோதரனுக்குரிய இராஜ்ஜியங்களை அரசாளும் உரிமைகொண்ட இப்புத்திரனை நீங்கள் அமைச்சனாக்கிக்கொண்டது தகுதியன்று, அவன் அங்கிருப்பின் யாவரும் இகழ்வர்; ஆதலால் அங்கிருத்தல் தகாது' என்றனர். அவர்கள் கூறியவற்றைக்கேட்ட சோழன் நகைத்து எனதுகுமாரத்தியை இவனுக்கு மணஞ்செய்து கொடுத்து, என்னிடத்திலேயே வைத்துக்கொள்வேன் என்றனன்.

அவ்வாறே சோழமன்னன் தன் புத்திரியை மூப்பநம்பிக்கு மணஞ் செய்து கொடுத்தான். பின்னர் மூப்பநம்பியும் தன் மனைவியுடன் திருக்கோவலூர்க்குச்சென்று சிலநாள் வசித்தனன். பின்னர் தன் மாதுலன் சோணாட்டிற்கழைக்க, அங்கே போதற்கு விருப்பமில்லாதவனாயிருந்தான். இதனையறிந்த அவன் தந்தையர் 'நீ உன் மாதுலர் வேண்டுகோளை மறுக்காமல் அங்கேசெல்க, சில நாளில் இங்குவரலாம்' என்றனர். அவ்வாறே சோணாட்டிற்குச் சென்று தன்மாதுலர் விரும்பியவாறு அந்நாட்டை நீதியுடன் ஆட்சிபுரிந்துவந்தான்.

குலசேகரச் சருக்கம் முற்றும்.

---



## தானவிசேடச் சருக்கம்.

திருக்கோவல் மாநகரமென்னும் வீரட்ட க்ஷேத்திரமானது, முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்கு வாசஸ்தலமாகவும், தன்னைத்தேடி வருபவர்களுக்கு பாபத்தைப்போக்கி, புண்ணியப் பலனை அளித்து மோக்ஷத்தையும், தருவதாகவும் விளங்குகின்றது. இத்தலம் சிவபெருமான் எழுந்தருளியிருத்தலால் சிவபுரமெனவும் முருகக்கடவுளது திருக்கைவேல்நின்ற காரணத்தால் வேலூரெனவும், சரஸ்வதியும், லெக்ஷ்மியும், காமதேனுவும், மாபலியும், உரோமசமுனிவனும், சூரியனும், தெய்வீகராஜனும், பிரமதேவனும், தேவர்களும், திக்குப் பாலகர்களும், உலகத்தரசர்கள் பலரும், அருச்சித்து கைவலமாகிய முத்தியைப் பெற்ற காரணத்தால் திருக்கோவலமெனவும் பெயர்பெற்று விளங்கிவருகின்றது. இன்னும் இந்நகரமானது கண்ணுவமுனிவனும், கபிலமுனிவனும், காமதேவனும், கணபதியும், கிருஷ்ணனும், உருத்திரர்களும், பூசித்துவந்த காரணத்தால் முறையே கண்ணுவபுரம், கபிலபுரம், காமபுரம், கணேசபுரம், கிருஷ்ணாரண்யம், உருத்திரபுரம் எனப்பல பெயர்களைப் பெறுவதாயிற்று. இந்த க்ஷேத்திரத்தின்கண் சூரியனும், பிரமனும், விஷ்ணுவும், இந்திரனும், குகமுனிவரும், ரோமசமுனிவரும், காளியும், குருவும், விநாயகனும், ஷண்முகனும், பார்வதியும், ஆதிசேஷனும், கபிலனும், பாசுராமனும், நெடுங்காலம் வாசஞ்செய்து பெறற்கரும் கதியைப் பெற்றிருக்கிறார்கள். இந்தப் புண்யக்ஷேத்திரவாசத்தால் ஆயுளையும், நோயின்மையையும், செல்வத்தையும் இன்பத்தையும் புத்திரப்பேற்றையும், வெற்றியையும், கல்வியையும் பெற்று விளங்கினவர்களுக்கு அளவேயில்லை. இந்தத் தலத்தில் ஒருநாளிரவு தங்கினவர்களும் தங்கள் பாவங்களையெல்லாம் நீத்து மோக்ஷத்தை யடைவார்களென்பது திண்ணம். அங்கிருந்து பஞ்சாக்ஷரத்தைச் ஜெபிப்பவர்கள், வேண்டிய வேண்டியவாறடைந்து முத்தியையும் அடைவார்கள். அங்கிருந்து செய்யப்படும் புண்ணியமாவது பாவமாவது ஒன்று கோடியாக வளருந்தன்மையையுடையது. அத்தலத்திலே தங்கி வீரட்டநாதரைத் தரிசித்து பெண்ணையாற்றின் நீரையும் உட்கொண்டவர்கள் தெய்வத்தன்மையை அடைவார்கள்; எல்லாத் துன்பங்களினின்றும் விலகுவார்கள். இந்த வீரட்டேசரது க்ஷேத்திரப்பேரைவைத்து ஒருதலமுண்டாக்கிபூசனைசெய்பவர்கள் அஷ்டமாசித்திகளையுமடைந்து இறுதியில் சிவபெருமான் திருவடி சேர்

வார்கள். சோழநாட்டிலே அரசுபுரிந்துவந்த குலசேகராது திருக்குமாரராகிய மூப்பநம்பியென்பவர், அடிக்கடிவந்து கோவல் வீரட்டநாதரை தரிசனைசெய்து போவதைக்கண்டு, மெய்ப்பொருளையனார், மைந்த "நீ இத்தலத்தையொப்ப ஓர்தலமியற்றி வழிபாடு செய்து வருவாயானால், இங்குவந்து சேவைசெய்வதனால் உண்டாகுந்திருவருள் எளிதில் உனக்குக்கிடைக்கும்" என்றுரைத்தருளினார். அவ்வுரைப்படியே மூப்பநம்பியும் தான்இருந்து அரசுபுரியும் சோழநாட்டிலே திருக்குடந்தைக்குச் சமீபத்திலே திருக்கோவல் என்னும் பெயருடையதாக ஒருதலமுண்டுபண்ணி பூசித்துவந்து திருக்கோவல் வீரட்டேசாது திருவருளைப்பெற்றார். அதுமுதலாக அத்தலம், மூப்ப நம்பியினால் ஆக்கப்பட்டமையால் * மூப்பக்கோயில் என்று பெயர்பெற்று விளங்குவதாயிற்று.

தானவிசேடச்சருக்கம் முற்றும்.

---

## தீர்த்த விசேடச் சருக்கம்.

பெண்ணையாறு எல்லாத் தீர்த்தங்களிலும் சிறந்தது. சித்திரை மாதத்திலே சித்திரை நக்ஷத்திரத்திலே அந்நதியின் உருத்திர தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து திருக்கோவல் வீரட்டேசரை அத்தீர்த்தத்தால் அபிஷேகஞ் செய்து அருச்சனை செய்பவர்கள் எல்லாப் பாவங்களினின்றும் நீங்கி இஷ்ட சித்தியை அடைந்து தேவரும்தொழ திருக்கைலாசத்தில் வாழ்ந்திருப்பார்கள். பெண்ணையாற்றிலே எவராயிருந்தாலும் எந்த நாளாயிருந்தாலும் ஸ்நானம் பண்ணினவர்கள் தேவர்களாக விளங்குவார்களென்பது நிச்சயம். கபில தீர்த்தத்திலும், கண்ணுவதீர்த்தத்திலும், ராகவ தீர்த்தத்திலும், பாசுராம தீர்த்தத்திலும், தர்ம தீர்த்தத்திலும், முழுகி இறைவனைப் பூசித்தோர்கள், பிரமஹத்தி முதலான எல்லாப் பாவத்தினின்றும் நீங்கி மோக்ஷத்தை அடைவார்கள். பத்திரசங்கமத்து பிதுர் தீர்த்தமானது கயைக்குமேலாக விளங்குவது. மாளயத்தில் பிண்டம் போடுபவர்கள் அளவில்லாத பயனை

* மூப்பக்கோயில் என்னும் பெயருடைய கிராமங்கள் இரண்டு இருக்கின்றன. ஒன்று கும்பகோணத்திற்குத் தெற்கே திருமலைராஜனது தென்கரையில் நாதன்கோவிலின் கீழ்புறத்தில் இருக்கின்றது. மற்றொன்று கும்பகோணத்தின் வடக்கே காவேரியின் வடகரையில் பெரும்பாண்டிக்குச் சமீபத்தில் இருக்கின்றது. இவ்விரண்டு இடங்களிலும் சிவாலயங்களிருந்த பல சின்னங்கள் காணப்படுகின்றன. இவ்விரண்டிடங்களும் மூப்பநம்பியிருந்து அரசாண்ட சோழமாளிகைக்கு ஏறக்குறைய மூன்று மைல் தூரத்திற்கு உட்பட்டனவாகவே இருக்கின்றன.



38.2114 ГТ

அடைவார்கள். அதில் ஸ்நானம் பண்ணுபவர்கள் கங்காஸ்நான பலத்தையும் அடைவார்கள். சத்த இருடியர் தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணினால் ஈஸ்வரபதவி கிடைக்கும். சூர்யதீர்த்தத்திலே நோய்நீங்கும், அக்கினி தீர்த்தத்திலே படிந்தோர் புத்திர பௌத்திர பரம்பரையாக வாழ்வார்கள். இத்தலத்தில் ஸ்நானஞ்செய்தவர்கள், ஆயுளையும், கீர்த்தியையும், கல்வி, செல்வங்களையும், அறிவையும் இம்மைப்பயனையும் அடைந்து இறுதியில் சிவபெருமான் திருவடி நிழலைப் பெறுவார்கள். தர்மப் பிரகலாதனுக்கு குருபுத்திரனைக்கொன்ற பாவத்தைப்போக்கியதும், கங்கை முதலாகிய நதிகளின் பாவத்தைப்போக்குவதும், ஏசுவைபருக்கு பசுங்கன்றின் கொலைப் பாவத்தைப் போக்கியதும், பதுமயோனியனுக்கு வேதாள உருவத்தைப் போக்கியதும், சுத்தவன்மனுக்கு பராமுகத்தாலடைந்த கோபத்தியைப் போக்கியதும், அசுத்தனுக்குச் சிவலோகத்தைத் தந்ததும், மண்டுகனுக்குப் பிரமராக்ஷசத்தன்மையை நீக்கியதும், விநாயகக் கடவுளுக்கு மகோதர நோயை நீக்கியதும், நின்மலனுக்கும் மலனுக்கும், குஷ்டரோகத்தை நீக்கியதும், இத்தீர்த்தமேயெனின் இதன்பெருமை எவராலுஞ் சொல்லப்படும் அளவினையுடையதாகுமா. இந்நதியின் பெருமை வசிட்டரால் நிமிச்சக்கிரவர்த்திக்குச் சொல்லப்பட்டதோடு பிரமாண்ட புராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விசேடங்களெல்லாம் வீரட்டேசாது திருவருளால் இந்நதிக்கு உண்டாயிருக்கின்றன. திருக்கோவலூரைச் சுற்றிலும் ஐந்து நாழிகை வழிதூரவரையிலுமுள்ள ஜலமெல்லாம் கங்காஜலமாகும். திருக்கோவலூரைச் சுற்றிலும் ஐந்துநாழிகைவழி தூரத்தில் இறந்தவர்கள் சிவவடிவத்தைப் பெறுவார்கள். இந்நதியில் மூழ்கிதிருக்கோவல் வீரட்டேசரை ஒருநாளாயினுந் தியானிப்பவர்களும், இப்புராணத்தைச் சொல்பவர்களும், படிப்பவர்களும், கேட்பவர்களும், எழுதுபவர்களும், எழுதுவிப்பவர்களும், எழுதுவித்தவர்களும் சிவபெருமான் திருவருளைப்பெற்று உலகத்திலே, கல்வி அறிவு, ஆயுள், செல்வம் முதலியன பெருகப்பெற்று நீடு வாழ்வார்களென்பது நிச்சயம்.

தீர்த்தவிசேடச்சருக்கம் முற்றும்.

---

திருக்கோவலூர்ப் புராணம்
முற்றிற்று.

174458
சென்னை-600 008.

உ

# விளம்பரம்

## திருக்கோவலூர்ப் புராணம்.

இந்நூல் பார் ... லத்தாராகிய நத்தமன்னர் மலையமன்னர் சுருதி ... களுடைய பூர்வவரலாறு களை மிகத்தெளிவா ... றுகொள்வதற்குச் சிறந்த கருவியாக இருக்கி ... இக்குலத்தார்கள் தமது சந்ததியார்களைக் ... ழக்கங்களில் பெருமைப்படுத்த இந் ... ப்படித்தறியவேண்டுவது அவசியமாயிருத்தலின் எல்லோர்க்கும் பயன்படும்பொருட்டு, பெரும்பொருட் செலவால் அச்சிடப்பட்டிருக்கும், குறைந்தவிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்தாரிடம் நேரிலாவது வி. பி. போஸ்டு மூலமாயாவது பெற்றுக் கொள்ளலாம்.

இப்புத்தகத்தின் விலை அணா-10

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

10-புத்தகங்கட்கு ஒரு புத்தகம் கமிஷன்கொடுக்கப்படும்.

**S.** நமச்சிவாய உடையார்,

வில்வராயநல்லூர்,

தஞ்சாவூர் ஜில்லா.